"உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு"

(ஆமோஸ் 4 : 12)

தேவகாளம்



(தன்னுடைய பொத்தலான சப்பாத்தைப் பரத்திற்கு நேராக ஆண்டவரிடம் தூக்கிக் காண்பித்துத் தனக்குப் புதிய சப்பாத்தைத் தரும்படிக் கெஞ்சி மன்றாடுகிறார் தேவ மனிதன் பில்லி பிரே)

காலம் எல்லாம் தன் இஷ்டப்படிப் பாவத்தில் வாழ்ந்து விட்டு மரணத்திற்குப் பின் மோட்சானந்த பாக்கியத்தையும், இயேசுவுடன் வாழும் ஆனந்த வாழ்வையும் எதிர்பார்ப்பது எப்படி இருக்கிறது என்றால் மாதம் முழுவதும் பிசாசுக்கு உழைத்து அவனுடைய விருப்பத்திற்கு நன்குபாடுபட்டுக் கொடுத்துவிட்டு மாதக் கடைசியின் சம்பளதினத்தன்று இயேசுவண்டை சென்று "ஐயா, நான் மாதம் முழுமையிலும் உமக்காகப் பாடுபட்டேன். கடினமாக உழைத்தேன். என் சம்பளத்தை எனக்குத்

Vol. No. 32 செப்டம்பர் - டிசம்பர் 2000 No. 9 to 12

தாரும்" என்று கேட்கும் முட்டாள்தனமான பேச்சாகும் என்று கூறிய பில்லி பிரே என்ற விந்தையான தேவபக்தனின் வாழ்க்கைச் சுருக்கத்தை ஜெபத்துடன் இந்த இதழில் உங்களுக்கு முன்னர் வைக்கின்றேன்.

பில்லியின் பூவுலக பிறப்பும் மறுபிறப்பும்

பில்லிபிரே 1794-ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டிலுள்ள டுவெல் ஹெட்ஸ் என்ற சிறிய கிராமத்தில் பிறந்தார். அவர் சிறுவனாக இருக்கும்போதே அவருடைய தந்தை இறந்துவிட்டபடியால் தாத்தா வீட்டிலேயே வளர்ந்தார்.

அவர் 17 வயதினனாக இருந்தபோது தாத்தா வீட்டிலிருந்து கிளம்பி தேவான் என்ற இடத்தில் வந்து குடியேறினார். அங்கிருந்தபோது அவர் திருமணம் செய்துகொண்டு 24 வயது வரை அதே இடத்தில்தான் வாழ்ந்து கொண்டு இருந்தார். தேவானில் அவர் இருந்தபோது ஒரு காட்டு மிராண்டித் தனமான வாழ்க்கை நடத்திவந்தார். அங்கு அவர் ஊறிப்போன குடிகாரனாகி தான் மணம்புரிந்த மனைவியாம் மங்கையை நிர்ப்பந்தமான ஓர் அவலநிலைக்குள்ளும் தள்ளிவைத்தார்.

ஒருநாள் பில்லிபிரே தம்முடைய வீட்டின் அடுப்புக்குத் தேவையான நிலக்கரியை வாங்கும் பொருட்டாகத் தள்ளுவண்டியைத் தள்ளிக்கொண்டு சென்றார். அவருடைய மனைவி தன்னுடைய கணவனின் வரவை எதிர்நோக்கிக் காத்துக் காத்திருந்து அலுத்துப்போனாள். கடைசியாகப் புருஷனைத் தேடிக்கொண்டு அவள் தெருவிற்குப் போனாள். ஒரு சாராயக்கடைக்கு முன்னர் தங்கள் வீட்டுத் தள்ளுவண்டி நிலக்கரியுடன் நின்றுகொண்டிருந்ததை அவள் கண்டாள். தன் கையாலேயே அதைத் தெருத் தெருவாகத் தள்ளிக் கொண்டு இறுதியில் வீடுவந்து சேர்ந்தாள். பில்லி பிரே சாராயக்கடையில் தன் பணங்களை எல்லாம் குடித்துத்தீர்த்து வெகுநேரம் சென்றபின்னர் நிர்ப்பந்தமான நிலையில் தள்ளாடித் தள்ளாடி வீடுவந்து சேர்ந்தார்.

இவை அனைத்திலும் பில்லிபிரே அதிகமாகப் பயந்துகொண்டே இருந்தார். தான் ஒரு பாவவாழ்க்கை நடத்துவதையும், பாவம் செய்யும் பாவிகள் எல்லாரும் நரகத்தின் பாதையில் இருப்பதையும் அவர் நன்கறிந்திருந்தார். இந்நாட்களில் "மோட்ச பிரயாணம்" புத்தகத்தின் ஆக்கியோன் ஜாண்பன்னியன் என்பவர் எழுதிய "மோட்சம், நரக பாதாளத்தின் காட்சிகள்" என்ற புத்தகம் அவருக்குக் கிடைத்தது. அந்தப்

புத்தகத்தைப் படிக்கப் படிக்க நரகத்தைக் குறித்த பயம் அவருக்கு வரவர மிகவும் அதிகரித்தது.

தன்னுடைய பாவநிலை உணர்ந்த பில்லி, கர்த்தருடைய இரக்கத்திற்காகக் கெஞ்சுவதைத்தவிர வேறு போக்கும் புகலிடமும் இல்லை என்று கண்டார். ஆனால் அவர் முழங்காலில் விழுந்து தேவனை நோக்கிக் கெஞ்சுவதற்கு மிகவும் கூச்சமும், வெட்கமும் அடைந்தார். தன்னுடைய மனைவி தன்னை முழங்காலில் நிற்கக் கண்டால் தன்னைத் தைரியமற்ற கோழை என்று உதாசீனம் பண்ணி உதறித் தள்ளுவாள் என்று அவர் மிகவும் அச்சமடைந்தார். அதினால், தனது மனைவி முதலாவது மனந்திரும்பட்டும் என்று அவர் எதிர்நோக்கினார். அதைத் தொடர்ந்து தான் மிகவும் எளிதாக மனந்திரும்பிக் கொள்ளலாம் என்று அவர் நினைத்தார்.

ஆனால் ஒருநாள் இரவு அவருக்கு ஒரு எண்ணம் உண்டாயிற்று. மனைவியின் மனந்திரும்புதலுக்காகத் தான் காத்திருந்தால் ஒருக்கால் தன்னுடைய இரட்சிப்பின் காரியம் மிகவும் பிந்திப்போய் விடுமோ என்று அவர் மிகவும் கவலை கொண்டார். தான் ஒரு கொடிய பாவி என்றும், தேவன் ஒருபோதும் தனக்கு இரக்கம் பாராட்டப்போவதில்லை என்றும் அவர் மனம் கலங்கினார். அவருடைய பாவப்பாரம் அவரை வீட்டிலும் வேலைசெய்த சுரங்கத்திலும் அழுத்தி நெருக்கினது. தன்னுடைய பாவப் பழுவின் காரணமாக பில்லி பிரலாபித்து அழுதார், அங்கலாய்த்தார், புலம்பினார். ஒருசமயம் அவர் சுரங்கத்தில் வேலைசெய்து கொண்டிருந்த போது இவ்வண்ணமாகப் பாவப்பாரத்தால் மனம்நொந்து அழுதபோது அவருடைய சகதொழிலாளி ஒருவன் அவருடைய அந்தவிதமான செயலுக்காக அவரைக் கடிந்துகொண்டு அதிகமாக அழுது தொந்தரவு செய்யாமலிருக்கக் கூறினான்.

"நான் பாவத்தின் பாரத்தால் நெருக்கப்படும் விதத்தையும் கடுமையையும் நீ உன் அளவில் உணருவாயானால் நான் என் பாவப்பளுவிலிருந்து விடுதலை பெறும் வரை நீயும் கூட என்னுடன் சேர்ந்து புலம்பாமலிருக்க முடியாது" என்றார் பில்லி.

தன்னுடைய பாவங்களுக்கான பாவ மன்னிப்பின் நிச்சயத்தை அவர் இன்னும் பெற்றுக்கொள்ளாதபோதிலும் அவர் இப்பொழுது பாவத்தில் நீடித்திருக்கவில்லை. பழைய பாவங்களை எல்லாம் விட்டு விட்டுத்

தேவனுடைய இரக்கத்திற்காகக் கெஞ்சுவதில் தொடர்ந்து ஈடுபட்டிருந்தார். ஒவ்வொரு நாள் இரவும் பகலும் அவர் ஜெபித்துக் கொண்டே இருந்தார்.

குறிப்பிட்ட அந்த நாளின் விடியற்காலம் பில்லி தன் படுக்கையிலிருந்து குதித்து எழும்பி முழங்கால்களில் வீழ்ந்தார். அப்பொழுது விடியற்காலம் மூன்று மணி. அந்த அதிகாலை, பிசாசு அவரிடம் வந்து அவரின் காதிற்குள் :

"பில்லி, நீ ஒருக்காலும் பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், தேவனுடைய இரக்கத்தையும் பெற்றுக் கொள்ளப் போவதே இல்லை. நீ ஒரு கொடிய பாவி." என்று கூறினான்.

பில்லி கடும் சினமடைந்து "பிசாசே, நீ பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறாய்" என்று கூறி அவனை அவர் கடிந்து அதட்டித் துரத்திவிட்டுத் தன் கண்களைப் பரத்துக்கு நேராக ஏறெடுத்து "கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள் திறக்கப்படும் என்ற என் பரலோகத்தகப்பனே, உம்முடைய ஜீவ வார்த்தைகளை நான் அப்படியே விசுவாசிக்கும் பூரண விசுவாசம் எனக்கு உண்டு" என்று கூறி அவர் பரத்தை நோக்கி சத்தமிட்டார்.

பில்லியின் மனைவி ஜோயி அறை வீட்டிற்குள்ளிருந்து எழும்பும் தன் கணவனின் குரலைக் கவனித்தாள். அது குடிவெறியின் சத்தமல்ல. கர்த்தாவின் இரக்கத்திற்காகக் கெஞ்சும் ஒரு ஏழை ஆத்துமாவின் துயர தொனி அது. கிறிஸ்துவுக்குள் புதிய மனிதனான ஒருவனின் வாயிலிருந்து புறப்படும் புதுப்பாட்டு அது. சிறையிருப்பின் சங்கிலிகள் அனைத்தும் அறுந்து விழுந்தபின் எழும்பும் விடுதலையின் ஆனந்த ஆரவாரிப்பு அது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தாவீது இராஜா தன் தேவனாகிய சேனைகளின் தேவனாகிய கர்த்தரில் கண்டடைந்த ஜெய கெம்பீரம் அது. பில்லி அந்த நாளில் அந்த அறைவீட்டிலிருந்து மறுபடியும் பிறந்த மனிதனாகக் கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டியாக வெளிவந்தார்.

இரக்கம் நிறைந்த பில்லி

ஒரு நாள் காலை பில்லிபிரே தன் ஒவ்வொரு கரத்திலும் ஒரு குழந்தையை அணைத்தவாறு இரண்டு குழந்தைகளுடன் தன் வீட்டுத் தலைவாசற்கதவுக்கு முன்னர் நின்று கொண்டிருந்தார்.

"பில்லி, இந்தக் குழந்தைகளுடன் நீங்கள் எங்கே செல்லுகின்றீர்கள்?" என்று பில்லியின் மனைவி ஜோயி கேட்டாள்.

"குழந்தைகளின் தாயார் மரித்துப்போனாள். தகப்பன் தன் பிள்ளைகளை விட்டுவிட்டு எங்கோ ஓடிப்போய்விட்டான். நாதியற்ற இச்செல்வங்களை நம்முடைய குழந்தைகளுடன் சேர்த்து வளர்க்கலாமென்று எண்ணிக் கொண்டு வந்தேன்" என்றார் பில்லி.

"நம்மிடம் உள்ள நமது குழந்தைகள் நால்வரையும் நாம் வளர்ப்பதற்கே கண்பிதுங்கி விழிதள்ளி நிற்கின்றோமே இவர்களையும் நாம் எப்படி வளர்க்க இயலும்? இந்தக் குழந்தைகளை அனாதைக் குழந்தைகளின் விடுதியிலேயே கட்டாயம் சேர்ப்பித்து விடவேண்டும்" என்றாள் ஜோயி.

ஆனால் பில்லி தனது மனதை நன்கு திடப்படுத்திக்கொண்டு விட்டார். தன் பரம தகப்பனாம் கர்த்தர் தான் கொண்டுவந்த இரண்டு ஆதரவற்றக் குழந்தைகளுக்கும் தவறாது உணவு அளித்துப் போஷிப்பார் என்ற திடமான நம்பிக்கையுடன் அந்த குழந்தைகளை அனாதை இல்லத்திற்கு எடுத்துச் செல்லாமல் அவர்களைத் தான் பெற்ற குழந்தைகளுடன் சேர்ப்பித்து "என் ஆருயிர்க்கண்மணிகளே, இனிமேல் இது உங்கள் வீடு, இங்கே நீங்கள் என்றுமாக சுகித்து வாழலாம்" என்று பில்லி கூறிவிட்டார்.

பில்லிக்கும் அவருடைய மனைவி ஜோயிக்கும் அனாதைப் பிள்ளைகளின் விஷயமாக வீட்டில் எழுந்த வாக்கு வாதத்தை அவர்களின் வீட்டிற்கு அப்பொழுது வந்திருந்த ஒரு கர்த்தருடைய பிள்ளை கவனித்துக் கேட்டுக் கொண்டிருந்தார். அந்த சகோதரனிடத்தில் அப்பொழுது சுமார் 3 பவுண்கள் இருந்தன. அந்த மனிதன் பில்லியைப் பார்த்து "நான் நல்ல நிலையிலிருக்கின்றேன். அனாதைக் குழந்தைகளை ஆதரிக்க எனக்கு விருப்பமுண்டு. ஆனால் என்னிடம் குழந்தைகள் கிடையாது. பில்லி இப்பொழுது கொண்டு வந்துள்ள இரண்டு அந்நிய குழந்தைகளை நான் என் வீட்டிற்கு எடுத்துச் செல்லப் பயப்படுகின்றேன்," என்று கூறித் தம்மிடமிருந்த 3 பவுண்களையும் அந்தப் பிள்ளைகளின் போஷிப்புக்காக பில்லியிடம் எடுத்துக் கொடுத்தார்.

பில்லியின் சந்தோஷத்திற்கு அளவே கிடையாது. அவர் தன்னுடைய மனைவியைப் பார்த்து "ஜோயி, நான் ஆரம்பத்திலேயே

கர்த்தர் அந்த இரண்டு அனாதைக் குழந்தைகளையும் போஷிப்பார் என்று உனக்குச் சொல்லவில்லையா? இதோ பார், அவர்களின் பராமரிப்புக்காக எத்தனை பெரிய தொகையான 3 பவுண்களை அவர் இப்பொழுது நமக்குக் கொடுத்துவிட்டார்! அந்த சிசுக்கள் அதிகமதிகமாக சாப்பிட்டாலும் ஒரு சிறிய பென்னி விலையுள்ள ரொட்டியைக்கூட சாப்பிட மாட்டார்களே, அப்படியிருக்க எத்தனை பெரிய தொகை நமக்குக் கிடைத்துள்ளது" என்றார் பில்லி.

ஒரு நாள் பில்லி பிரேயின் குழந்தைகளில் ஒன்று அதிக சுகயீனத்திற்குள்ளானது. மரணத்தின் விழிம்பில் அப்பொழுது அது இருந்தது. அதற்கு மருத்துவம் பார்க்கச் செலவுக்குக் கூடக் கையில் பணம் இல்லை. எப்படியோ தெய்வாதீனமாகத் தன் கரங்களில் கிடைத்ததை எல்லாம் ஒன்று சேர்த்து டாக்டரை அழைத்துக் கொண்டு வரும்படியாக ஜோயி தன் கணவனின் கையில் அந்தப் பணத்தைக் கொடுத்தாள்.

டாக்டரை அழைத்து வரப் பணத்துடன் சென்ற பில்லி வழியில் மிகவும் வறுமைப்பட்ட, உண்பதற்கு உணவுக்குக்கூட வகையற்ற இரண்டு மக்கள் மேல் மட்டற்ற இரக்கமுற்றுத் தன்னுடைய பணம் முழுமையையும் அவர்களுக்கே கொடுத்து விட்டு வெறுமையானார்.

பின்னர் வீட்டில் மரணத்திற்கு ஏதுவாகக் கிடந்த தன் பிள்ளையின் நினைவு வரவே என்ன செய்வதென்று தெரியாமல் பாதை ஓரமாக மறைவாக இருந்த ஒரு புதருக்குக்குள்போய் தேவ சமூகத்தில் தன் நிர்ப்பந்தமான நிலையைக் கூறிக் கண்ணீர் விட்டுக் கதறி அழுது மன்றாடி ஜெபித்தார். ஜெபித்து முடிந்ததும் அவர் உள்ளத்தில் வீட்டில் தன் பிள்ளை நல்ல சுகத்துடன் இருப்பதான ஒரு பெரிய சமாதானத்தின் நம்பிக்கையும் அமைதியும் உண்டாயிற்று.

பில்லி அந்த நம்பிக்கையில் திரும்பி வந்தபோது அவரது குழந்தை வீட்டில் பரிபூரண சுகத்துடனிருப்பதைக் கண்டு கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூர்ந்து துள்ளிக் குதித்தார்.

என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்.

பில்லி பிரேக்குச் சுரங்கம் ஒன்றில் வேலை கிடைத்தது. சுரங்கத்தின் தொட்டி ஒன்றில் வந்து நிரம்பும் தண்ணீரை அவர் வெளியே கொண்டு

ந்து கொட்ட வேண்டும். ஒவ்வொரு 12 மணி நேரத்திற்கும் அந்தப் பெரிய தொட்டி தண்ணீரால் நிரம்பி விடும்.

ஒரு சமயம் கர்த்தருடைய பரிசுத்த ஓய்வு நாளில் சுரங்கத்திலுள்ள நீர்த்தொட்டியைக் கவனித்து அதின் தண்ணீரைக் கொட்டும் பொறுப்பு பில்லிக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால், பில்லி கர்த்தருடைய ஓய்வு நாளில் சுரங்கத்திற்கு வேலைக்குச் செல்லாமல் அடுத்த நாள் அதாவது திங்கட்கிழமை காலையில் பணிக்குச் சென்றார். அவருடைய வரவை மிகவும் கோபத்துடன் எதிர்நோக்கிக் கொண்டிருந்த சுரங்கத்தின் தலைவன் பில்லியைப் பார்த்து :

"நீ ஏன் நேற்றைய தினம் வேலைக்குத் திரும்பவில்லை?" என்றான்.

"பரிசுத்த ஓய்வுநாளில் நான் வேலை செய்யக்கூடாது என்பது என் கர்த்தரின் சித்தமாகும்" என்றார் பில்லி.

"இந்தச் சுரங்கத்தில் இனிமேல் நீ ஒருக்காலும் வேலை செய்யக்கூடாது என்பதுவும் கர்த்தரின் சித்தமே. நீபோகலாம்" என்றான் அந்தத் தலைவன்.

தலைவனின், கோப வார்த்தைகளால் பில்லியின் விசுவாசம் சற்றும் தளர்ந்து விடவில்லை. "மலைகளின் தேவன், கன்மலைகளின் தேவன் என் நல்ல நண்பனாக இருக்கின்றார். எனக்கு விரோதமாக யார் எதிர்த்து நின்றாலும் அதைப்பற்றி நான் கவலைப்படப் போவதில்லை" என்று கூறிவிட்டுப் போய்விட்டார் பில்லி.

சில நாட்களுக்குப் பின்னர் மேற்குறிப்பிட்ட சுரங்கத்தின் தலைவன் தன் உள்ளத்தில் உணர்த்தப்பட்ட நிலையில் பில்லியின் மேல் இரக்கமுற்று ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை செய்ய அவசியமில்லாத ஒரு வேலையை அவருக்குச் சுரங்கத்தில் கொடுத்தான்.

கொஞ்சநாட்கள் பில்லி அந்த வேலையைச் செய்து கொண்டிருந்தார். அந்த நாட்களில் அவர் வாழ்ந்து கொண்டிருந்த கிராமத்தின் சபையில் உயிர்மீட்சிக் கூட்டங்கள் நடந்துகொண்டிருந்தன. ஆண்டவர் எழுப்புதலையும் அங்கு நடப்பித்துக்கொண்டிருந்தார். பில்லி அந்தக் கூட்டங்களில் ஒத்தாசை புரிவதற்காகத் தனது சுரங்கத்தின் வேலையைக்கூட பொருட்படுத்தாமல் சென்றுவிட்டார். உயிர்மீட்சிக்

கூட்டங்கள் முடிவடைந்த பின்னர் அவர் தனது வேலைக்காகச் சுரங்கத்திற்குச் சென்றபோது மாதம் 5 பவுண் சம்பளத்தில் சிறப்பானதோர் வேலை தனக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது கண்டு மிகுந்த மகிழ்ச்சியுற்றார். தான் கடைசியாக வேலைசெய்த பணியில் கிடைத்த சம்பளம் 2 பவுண்கள் மட்டுமே. இவ்விதமாக அன்பின் தேவன் தன்னைக் கனப்படுத்திய பில்லியை மேன்மையாக உயர்த்தி வழிநடத்தினார்.

தன்னுடைய அன்றாடக போஷிப்புக்கான காரியங்கள் அனைத்திலும் தேவனின் அற்புத கரம் தன்னோடிருந்ததாகப் பில்லி கூறுகின்றார். தன்னுடைய ஆடைகளின் விஷயத்தில்கூடத் தன் அன்பின் தேவன் தன்னை அறிவுக்கெட்டாத விதத்தில் உடுத்துவித்து நடத்தினார் என்கின்றார் பில்லி.

ஒருநாள் அவர் பிரசங்கித்துவிட்டு மாலையில் வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தார். தன்னுடைய காலில் அணிந்திருந்த சப்பாத்து பாதையில் கிடந்த சேறின் (Mud) காரணமாக அதிகமாகக் காலுடன் ஒட்டுவதை அவர் கவனித்தார். ஒவ்வொரு பாதத்தையும் தூக்கிவைத்து நடப்பது மிகவும் கஷ்டமாக அவருக்குத் தெரிந்தது. அப்படி அவர் கஷ்டத்துடன் ஒவ்வொரு காலையும் தூக்கிவைத்து வரும்வேளையில் ஒருகால் மிகவும் தாராளமாகக் கஷ்டமின்றி வருவதைக் கண்ட அவர் தன் காலைப் பார்த்தபோது அவர் காலிலிருந்த சப்பாத்தின் அடிப்பகுதி பூமியிலுள்ள சேற்றுடன் நன்கு பதிந்துகொண்டு விட்டதையும் சப்பாத்தின் மேற்பகுதி மாத்திரம் தனியே பிரிந்து வருவதையும் கண்டு அவர் மிகவும் வேதனை அடைந்தார். ஒரு சப்பாத்து ஒரு காலிலும் அடிப்பகுதி இல்லாத பாதிச்சப்பாத்து மற்றொரு காலிலும் இருந்தது. அந்தப் பொத்தலான ஓட்டை சப்பாத்தைக் கையில் எடுத்து அதை வானத்திற்கு நேராகத் தூக்கிப் பிடித்து "என் அன்பின் இயேசு அப்பா, உமது நாமத்தின்நிமித்தம் என் சப்பாத்துக்கள் நன்கு தேய்ந்து பிய்ந்துவிட்டன என்பதை நீர் காண்கின்றீர். வேறு புதிய சப்பாத்துக்களை வாங்க என்னிடம் பணம் கிடையாது. நீர் எனக்கு உதவி செய்யும்" என்று மனம் உருகி மன்றாடினார்.

சரியாக ஒரு வாரத்திற்குள் பில்லியின் நண்பன் ஒருவன் அவரை ட்ருரோ என்ற இடத்திற்கு அழைத்தான். ட்ருரோ சென்ற பில்லி பிரசங்கியாரை அவரின் நண்பன் முதல் வேளையாக சப்பாத்துக் கடைக்கு அழைத்துச் சென்று புத்தம்புதிய நேர்த்தியான ஒரு ஜோடி சப்பாத்துக்களால் அவருடைய கால்களை அலங்கரித்தான். அங்கிருந்து

பில்லி பிரங்கியாரைத் துணிக்கடைக்கு அழைத்துச் சென்று வேண்டிய வஸ்திரங்களை வாங்கி உடுத்துவித்தான்.

சேற்றுத் தண்ணீரில் நின்று கொண்டு தன் பொத்தல் சப்பாத்தைக் கண்ணீருடன் வானத்திற்கு நேராக உயர்த்திப் பிடித்துப் புதிய சப்பாத்துக்காகக் கெஞ்சி மன்றாடிய ஜெபத்திற்கு பரம பிதாவாம் தேவன் அவருடைய விருப்பத்திற்கும் எதிர்பார்ப்புக்கும் மேலாக நிறைவாகப் பதிலளித்துவிட்டார்.

ஆத்துமாக்களை நேசித்த பில்லி.

பில்லி மனந்திரும்பி இரட்சிப்பைக் கண்டடைந்த பின்னர், மனந்திரும்பாத மற்ற மக்களைக் குறித்த ஆத்தும பாரம் அவருக்கு உண்டாயிற்று. அவர் தாம் சந்திக்கும் ஒவ்வொரு மனிதரிடத்திலும் தாம் கிறிஸ்து இரட்சகரில் கண்டடைந்த இரட்சிப்பின் சந்தோஷத்தையும், உலகம் தரக்கூடாத சமாதானத்தையும் கூறத்தவறவில்லை.

பில்லி ஒரு தகரச் சுரங்கத்தில் வேலை செய்தார். அவருடைய வேலை மகா ஆபத்தானது. பூமிக்குள் சில ஆயிரம் அடிகள் ஆழத்தில் அவர் தகரத்தாதுவை வெட்டி எடுக்கும் பணியில் இருந்தார். எந்த நேரமும் சுரங்கத்தின் மேல் கூரைப் பகுதி இடிந்து விழுந்து உயிர் நஷ்டம் உண்டாக வாய்ப்புண்டு.

எனவே, சுரங்கத்திற்குள் வேலைக்காக மற்ற தொழிலாளர்களுடன் இறங்கும் ஒவ்வொரு சமயமும் பில்லி கீழ்க்கண்டவாறு ஜெபிப்பது வழக்கம்.

"அன்பின் இயேசு அப்பா, இன்றைக்குச் சுரங்கத்தில் ஏதாவது விபத்து ஏற்பட்டு மரணம் சம்பவிக்கும் பட்சத்தில் அப்படி மரிக்கும் நபர் நானாக இருப்பேனாக. என்னோடு வேலை பார்க்கும் என் சக நண்பர்களான ஒரு தொழிலாளியும் கூட விபத்துக்குள்ளாகி இறந்துவிடக்கூடாது. அவர்கள் இன்னும் மனந்திரும்பவில்லை. தேவரீருடைய இரட்சிப்பின் சந்தோஷம் அவர்கள் எவருக்கும் கிடையாது. அவர்கள் மரித்தால் நஷ்டப்பட்ட பாவிகளாக நரக பாதாளத்திற்கு செல்லுவார்கள். ஆனால் நான் மரித்தால் மோட்சம் வந்து உம்மோடு ஆனந்தம் அனுபவிப்பேன். ஆகையால் விபத்து ஏற்பட்டால் நான் மரிக்கத்தயை புரியும்" என்று பில்லி மனமுருகி மன்றாடிவிட்டு இருளான சுரங்கத்திற்குள் இறங்குவார்.

பில்லி இந்தவிதமாக அன்பு பொங்கி ஜெபிப்பதைக் கேட்கும் மற்ற தொழிலாளிகள் தங்களை அடக்கிக் கொள்ளாமல் அழுவார்கள். அவர்களில் சிலர் பின் நாட்களில் மனந்திரும்பி ஜெபிக்கும் வீரர்களாக மாறினார்கள்.

பின்வந்த ஆண்டுகளில் பில்லி புகழ்பெற்ற பிரசங்கியாராகி அநேக மக்களை நீதிக்குட்படுத்தினார். தினமும் பல மைல்கள் கால்நடையாகவே நடந்து கிராமங்கள் தோறும் பட்டணங்கள் தோறும் பிரசங்கித்தார். தன்னுடைய சொந்தப் பிரயாசத்தாலேயே சில சிற்றாலயங்களை அவர் கட்டி எழுப்பினார்.

பிரசங்கபீடம் கிடைத்த அற்புத வரலாறு.

அந்தவிதமாக கிராஸ்லேன்ஸ் என்ற இடத்தில் பில்லி ஒரு சிற்றாலயத்தைக் கட்டி முடித்திருந்தார். அந்த இடம் அவர் இருந்த கெர்லி டவ்ன்ஸ் என்ற ஊரிலிருந்து ஒரு மைல் தொலைவில் இருந்தது. கெர்லி டவ்ன்ஸ் என்ற அவருடைய ஊரிலும் ஒரு சிற்றாலயத்தைக் கட்டும்படியாகக் கர்த்தர் பில்லியிடம் பேசினார். அங்குள்ள ஒரு குடியானவன் சிற்றாலயங் கட்டுவதற்கானதோர் சிறிய நிலத்தை இலவசமாகக் கொடுத்ததுடன் தன்னுடைய குதிரையையும், வண்டியையும்கூட சிற்றாலயங் கட்டுமானப்பணியின் அலுவல்களுக்கு அதாவது கற்கள், மரங்கள் போன்றவற்றைச் சுமந்து செல்லப் பயன்படுத்திக் கொள்ளுவதற்காகக் கொஞ்சநாட்களுக்குப் பணமின்றிக் கொடுத்திருந்தான்.

அந்த நாட்களில் பில்லி எவ்விடத்திலும் காணப்படுபவராக இருந்தார். காலைமுழுவதும் சுரங்கத்தில் தொழிலாளியாக வேலை செய்வார். மத்தியானம் முதல் மாலைவரை தன் ஆண்டவருக்கு சிற்றாலயம் கட்டும்பணியில் ஈடுபட்டிருப்பார். அல்லது மத்தியானம் வரை ஆலயக்கட்டுமானப் பணிகளைச் செய்துவிட்டு எஞ்சியுள்ள பகற்காலத்தையும் மாலைப்பொழுதையும் சுரங்கத்தில் செலவிடுவார். சிலசமயங்களில் ஒருநாளில் 20 மணி நேரத்தைக் கூட அவர் தேவனுடைய பணியில் செலவிடுவதுண்டு. கர்த்தருடைய பரிசுத்த ஓய்வுநாளில் அவர் ஒருக்காலும் சோம்பலாக இருக்கவே மாட்டார். சில சந்தர்ப்பங்களில் ஓய்வுநாட்களில் 20 மைல்கள் தூரம்வரை பில்லி கால்நடையாக நடந்துசென்று 3 தடவைகள் பிரசங்கிப்பார்.

கெர்லி டவ்ண்ஸ் என்ற இடத்தில் சிற்றாலயம் ஏறக்குறைய கட்டி முடிக்கப்பட்டது. ஆனால் அதற்குத் தேவையான பிரசங்கபீடம் கிடைக்கவில்லை. பிரசங்க பீடத்திற்கு எங்கு செல்லுவது? பில்லியிடம் அதைச் செய்யப் பணம் எங்கே? அவர் நேராக பழைய இரும்பு, மரச்சாமான்கள் ஏலம்போடும் கடைக்குச் சென்றார். அங்கு மூன்று பக்கம் அடைப்புள்ள கதவு இல்லாத மரத்திலான பீரோ ஒன்று இருப்பதைக் கண்டார். பிரசங்க பீடத்திற்கு அது தகுதியானது என்று கண்ட பில்லி பக்கத்திலுள்ள நபர் ஒருவரிடம் அதின் ஏலவிலை எவ்வளவு வரும் என்று கேட்டார். அதில் விலை 6 ஷில்லிங்குகள் என்று கேள்விப்பட்ட பில்லி 6 ஷில்லிங்கை எடுத்துக் கொண்டு பீரோவை ஏலம் எடுப்பதற்காகச் சென்றார். ஏலம் விடும் அறையில் மக்கள் கூடியிருந்தனர். ஏலம் விடும்வேளை வந்தபோது பில்லி "இதோ பீரோவிற்கான 6 ஷில்லிங்குகள். ஒரு பிரசங்க பீடத்திற்காக அது எனக்கு வேண்டும்" என்று பின்னாலிருந்து உரத்த குரலில் கூறினார். அங்கிருந்தோர் அனைவரும் அவரைப்பார்த்து சிரித்தார்கள்.

ஆறு ஷில்லிங்..... ஆறு ஷில்லிங்..... ஆறு ஷில்லிங்..... என்று ஏலம் விடுபவன் ஆறு தடவைகள் கூறிக்கொண்டிருந்தபோது ஒரு மனிதன் பின்னாலிருந்து ஏழு ஷில்லிங் என்றுகூறி பீரோவை வாங்கிக் கொண்டான். பில்லிக்கு என்னசெய்வதென்று ஒன்றும் தெரியவில்லை. அவருடைய கண்களில் கண்ணீர் பெருகிற்று. இந்த இக்கட்டான நேரம், தான் வழக்கமாகச் செய்வதைப் போன்று தன் ஆண்டவர் சமூகத்தில் தான் புதிதாகக் கட்டிய சிற்றாலயத்தில் முழங்காலூன்றி ஜெபித்து ஆறுதலடைந்து கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக்கொண்டார்.

கொஞ்ச நேரத்திற்குப்பின்னர் எதிரேயிருந்த மலை ரஸ்தாவில் ஒரு குதிரைவண்டி நகர்ந்துகொண்டிருப்பதைக் கவனித்தார். ஏழு ஷில்லிங் சொல்லி ஏலம் எடுத்த மனிதனின் பீரோதான் அங்கு சென்று கொண்டிருந்தது. அந்த வண்டி அதை எடுத்துக்கொண்டு எங்குதான் கடைசியாகப் போய்நிற்கின்றது என்பதைக் கண்டறிய பில்லி அந்த வண்டியை தொடர்ந்து சென்றார் கடைசியாக வண்டி ஒரு வீட்டின் முன்போய் நின்றது. ஏலத்தில் எடுத்த அந்த பீரோ வண்டியிலிருந்து இறக்கப்பட்டு அந்த வீட்டிற்குள் எடுத்துச் செல்லப்பட்டது. ஆனால் பீரோ வீட்டின் கதவின் வழியாக உள்ளே செல்லவில்லை. அதை எடுத்துச் சென்ற மனிதர் அதை இந்தப் பக்கமாகவும், அந்தப் பக்கமாகவும் புரட்டி

உருட்டி எவ்வளவோ பிரயத்தனங்கள் செய்து உள்ளே கொண்டுபோக முயற்சித்த போதினும் அது உள்ளேபோக மறுத்து நின்றது. நீண்டநேரம் அவர்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டபோதினும் பீரோவை வீட்டிற்குள் அவர்களால் எந்தவழியிலும் எடுத்துச் செல்ல இயலாமலே போய்விட்டது. அதை ஏலத்தில் எடுத்த மனிதனுக்குக் கோபம் பொங்கிப் புடைத்துக் கொண்டு வந்தது. இறுதியாக அந்தப் பீரோவை உடைத்துச் சமையலறை விறகுக்காகப் பயன்படுத்த அந்த மனிதன் யோசித்துக் கொண்டிருக்கும் வேளையில் நம்முடைய பில்லி பிரே பரிசுத்தவான் கையில் 6 ஷில்லிங்குகளுடன் அங்குபோய் நின்றார்.

"நான் பீரோவிற்காக உங்களுக்கு 6 ஷில்லிங் தருகின்றேன். நீங்கள் அன்பு கூர்ந்து அதை என்னுடைய சிற்றாலயம் வரைக் கொண்டுவந்து தந்து விடுங்கள்" என்றார் பில்லி. அந்த வார்த்தைகளைக் கேட்ட அந்த ஐசுவரியமுள்ள மனிதன் மட்டற்ற மகிழ்ச்சியுற்று விறகுக்காக உடைக்கவிருந்த பீரோவை ஆறு ஷில்லிங்குகளுக்குப் பில்லிக்கே விற்றதுடன் அவரின் சிற்றாலயத்தில் அதைத் தன் குதிரை வண்டியில் இலவசமாகக் கொண்டு சென்று கொடுத்து வந்தான்.

"கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்படுவாராக. பீரோவை என்னால் சிற்றாலயத்துக்குத் தூக்கிக்கொண்டு செல்லமுடியாது என்று என் ஆண்டவருக்கு நன்றாகத் தெரியும். எனவே அந்த ஞானமுள்ள தேவன் இந்த மனிதனைப் பிடித்து அந்தக் காரியத்தைச் செய்ய வைத்திருக்கின்றார். ஆ, அவர் எத்தனை நல்ல பரலோகத் தகப்பன்" என்றார் பில்லி.



பில்லியின் சிற்றாலயத்தில் பீரோ குதிரை வண்டியிலிருந்து இறக்கப்படுவதைப் படத்தில் நீங்கள் காண்கின்றீர்கள்.

உருளைக் கிழங்கு வயலில் பில்லியைச் சந்தித்த பிசாசு

வயது முதிர்ந்த விருத்தாப்பிய நாட்களில் ஒரு நாள் பில்லி தம்முடைய உருளைக்கிழங்கு வயலில் உருளைக் கிழங்குகளை மண் வெட்டியால் மண்ணைத் தோண்டி எடுத்துக் கொண்டிருந்தார். அந்த ஆண்டில் உருளைக்கிழங்கு விளைச்சல் மிகவும் மோசமாயிருந்தது. ஒரு உருளைக்கிழங்கு செடியை பில்லி மண்வெட்டியால் தோண்டி எடுத்தார். ஆனால் அதில் உருளைக்கிழங்குகள் எதுவும் இல்லை. மற்றொரு செடியைத் தோண்டினார். அந்தச் செடியிலும் கிழங்குகள் ஒன்றும் இல்லை. மூன்றாவது ஒரு உருளைக்கிழங்கு செடியை வெட்டி எடுத்தார். அதிலும் வேர்களேயன்றி கிழங்குகள் ஒன்றும் காணப்படவில்லை.

பில்லி மிகவும் துக்கத்துடன் தனக்கு முன்னாலுள்ள வறட்சியான உருளைக்கிழங்கு வயலைப் பார்த்துக் கொண்டிருந்தார். அந்தச்சமயம் ஈனப்பிசாசு அவரண்டை வந்தான்.

"பில்லி, உன் பரலோகத் தந்தை உன்னை உளமார நேசிக்கின்றார் என்று நீ நினைக்கின்றாயா?" என்றான் அவன்.

"அதில் சந்தேகம் என்ன இருக்கின்றது? அவர் என்னை நேசிப்பதை நான் மனதார அனுபவித்து வருகின்றேனே! " என்றார் பில்லி.

"நீ எண்ணுகின்றபடி அவர் உன்னை நேசிக்கவில்லை என்றுதான் நான் நினைக்கின்றேன்" என்று பிசாசு தன் பேச்சைத் தொடர்ந்தான்.

"அவர் உன்னை நேசிப்பவரானால் உருளைக்கிழங்கில் நல்ல விளைச்சலை உனக்குக் கொடுத்திருப்பார் அன்றோ? உன்னுடைய ஆசைக்கும், விருப்பத்திற்கும் மேலாக உன்னுடைய கைப்பிடி அளவான பெரிய,பெரிய உருளைக்கிழங்குகளால் அல்லவா உன்னுடைய ஒவ்வொரு செடியும் நிரம்பியிருக்கும். " என்றான் தந்திரப்பிசாசு.

பிசாசின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் பில்லிக்குக் கோபம் பொங்கி வந்தது. அந்த பிசாசைப் பார்த்து :

"பிசாசே, உன்னோடு எனக்கு சில ஆண்டுகாலம் மிகவும் நெருங்கிய பிணைப்பும், நட்பும் இருந்தது. அநேக அப்பாவி ஏழை மனிதர்களைப் போல நானும் உனக்கு முன்பாக உண்மையுள்ளவனாய் நடந்து அந்த வருடங்களில் நான் உன்னை நேசித்து உனக்குத் தொண்டு செய்தேன். ஆனால் நீ எனக்குக் கைம்மாறாகத் தந்தது என் முதுகுக்குக் கந்தைகளும், நிர்ப்பந்தமான பூவுலக வீடும், எப்பொழுதும் கலக்கமும் திகிலும் நிறைந்த உள்ளமும், வேதனையால் சதா பம்பரம்போல் சுழன்றுகொண்டிருக்கும் தலையும், நரக அக்கினியின் பயங்கர நினைவுகளும் மாத்திரமே. உருளைக்கிழங்கு ஒருக்காலும் நீ எனக்குத் தரவே இல்லை.

ஆனால் பரலோகத்திலுள்ள என் அன்பின் இயேசு தகப்பனுக்குக் கடந்த 30 ஆண்டுகள் நான் அடிமையாக இருக்கின்றேன். அவர் எனக்குச் சந்தோஷமும், சமாதானமும் பொங்கி வழியும் ஒரு பரிசுத்த இருதயத்தைத் தந்திருக்கின்றார். பழமையாய்ப் போகாததும், கறைபடாததுமாகிய இரட்சிப்பின் வெண்வஸ்திரத்தை அவர் எனக்கு உடுத்தியிருக்கின்றார். என்னை ஒரு இராஜாவாக ஆக்கப்போவதாகவும் அவர் கூறியுள்ளார். ஓர் ஆசீர்வதிக்கப்பட்ட பாக்கிய நாளில் அவர் என்னைத் தம்முடைய மகிமையின் மாளிகைக்கு அழைத்துச் சென்று நான் அவரோடு கூட என்றுமுள்ள சதாகாலங்களிலும் அரசாளும் சிலாக்கியத்தையும் தந்தருள்வார்" என்றார் பில்லி.

மீண்டும் மோசம் போக்கும் நாசப் பிசாசுடன் சந்திப்பு

கிறிஸ்து இயேசுவிலுள்ள ஒவ்வொரு மெய்யான தேவப்பிள்ளையும் ஒருவிதத்தில் அல்லது மற்றொரு விதத்தில் பிசாசானவனால் சோதிக்கப்படுகின்றான். பில்லிக்கு அந்த விஷயம் மிகவும் நன்றாகவே தெரியும். அதைக் குறிப்பிட்டு அவர் பேசும்போது "நான் எந்த இடத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றேன் என்று பிசாசுக்கு நன்கு தெரியும்" என்று கூறுவதுண்டு.

சில சமயங்களில் பிசாசானவன் சுரங்கத்தின் மேல்மட்டத்திலிருந்து ஆழமான சுரங்கப்பாதாளத்திற்குள் குதிக்கும்படியாக பில்லியிடம் கூறுவான். அவனுக்குப் பதில் அடிகொடுக்கும் முகமாகப் பில்லி அந்த ஈனப்பிசாசை அவனாகவே மேலிருந்து கீழே குதித்து அதின் பின் விளைவுகளைப் பார்க்கும்படியாகக் கூறுவார்.

ஒருசமயம் பில்லி கர்த்தருக்காக ஒரு சிற்றாலயத்தைக் ட்டியிருந்தார். அந்த நாட்களில் அவருடைய பிள்ளைகளில் ஒன்று ிகவும் சுகயீனமாக மரணத்தின் விழிம்பில் இருந்தது.

அப்பொழுது பிசாசு பில்லியிடம் வந்து "நீ கட்டியிருக்கும் சிற்றாலயத்திற்கு மேற்கூரை போட 7 பவுண்கள் வேண்டும். ஆனால் உன்னிடம் உள்ளதோ 2 பவுண்கள் மாத்திரமே. இப்பொழுது மிகவும் சுகயீனமாக இருக்கும் உன் குழந்தை மரித்து விடும். அதைப் புதைக்க மற்றும் கல்லறைச் செலவுகளுக்கு ஒரு பவுண் தேவைப்படும். சிற்றாலயத்தை முடிப்பதற்கு மீதியாக உன்னிடம் இருக்கப் போவதெல்லாம் ஒரே ஒரு பவுண் மாத்திரமே" என்று கூறி அவரை சோர்புக்குள்ளாக முயற்சித்தான்.

பில்லியின் எண்ணங்களும், கவலைகளும், சுகயீனமாகக் கிடந்த தன் குழந்தை மேலும் முற்றுப் பெறாமலிருந்த சிற்றாலயத்தின் மேலும் கிடந்து அடித்துக் கொண்டிருந்தது. அப்பொழுது பில்லிக்கு ஒரு எண்ணம் வந்தது. கர்த்தருக்கென்று தாம் கட்டிய சிற்றாலயத்தின் நிமித்தம் தனது குழந்தைக்கு ஆண்டவர் இரக்கம்பாராட்டி அதற்கு உயிர்ப்பிச்சை அளிப்பார் என்று திடமாக விசுவாசித்தார். சந்தோஷத்துடன் அவர் வீடு திரும்பினார். ஆனால் குழந்தையின் நிலை முன்னிலும் மோசமாயிருந்தது. அண்டை அயலகத்தார் அனைவரும் பில்லி பிரசங்கியாரின் குழந்தை கட்டாயம் மரித்துவிடும் என்று கூறிக்கொண்டிருந்தனர். பில்லியின் மனைவி ஜோயி ஆழ்ந்த விசனத்திலிருந்தார்கள்.

மத்தியான நேரம் மரணத்திற்கு ஏதுவாகக் கிடந்த தன் அன்பு மகளின் அறையின் ஜன்னலைத் திறந்து வைத்தவராக பில்லி ஒத்தாசையின் பர்வதங்களுக்கு நேராகத் தன் கரங்களை விரித்து "என் அன்புள்ள நேச தகப்பனே, என் மகள் பிழைத்துக்கொள்ளுவாள் என்று நீர் என்னிடம் கூறினீரே. ஆனால் ஏழை மகள் ஒரு சிறிய துண்டு ரொட்டியைக் கூட இன்னும் சாப்பிடாமல் அத்தனை நிர்ப்பந்தமான நிலையில் கிடக்கின்றாளே" என்று உள்ளமுருகிப் பிரார்த்தித்தார். என்ன ஆச்சரியம்! அந்த நிமிஷத்திலிருந்தே குழந்தை படிப்படியாக சுகம் பெற்று பூரண ஆரோக்கியமடைந்து பின் நாட்களில் அவள் திருமணமாகி 10 குழந்தைகளுக்குத் தாயாரானார்.

பில்லி அதைக் குறித்துப் பின்னர் பேசும்போது "திரும்பவுமாகத் தேவன் பிசாசைப் பொய்யனாக்கிவிட்டார். பிசாசு இனி என்னை மேலும், மேலும் தைரியமுடையோனாக மாத்திரம் ஆக்கமுடியுமேயன்றி அவனால் என்னை வீழ்த்தி வெற்றி காண எக்காலத்தும் முடியாது "என்று கூறினார்.

இன்பக் கானான் சென்ற பில்லி பிரசங்கியார்

பில்லி இப்பொழுது 74 வயதுடைய விருத்தாப்பியனும் வியாதிப்பட்ட மனிதனாகவுமிருந்தார். அவர் மரிப்பதற்கு சொற்ப நாட்களுக்கு முன்னர் பக்கத்திலுள்ள கிரான்டக் என்ற இடத்தில் சுவிசேஷக் கூட்டங்கள் நடந்துக் கொண்டிருந்தன. பில்லியின் சரீரம் பெலவீனமாக இருந்தபோதினும் அவருடைய ஆவி மிகுந்த உற்சாகத்துடனிருந்ததால் அவர் கிரான்டக் என்ற மேற்கண்ட இடத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

"கிரான்டக்கிலுள்ள ஜனங்களையும், அவர்களுடன் பாவியாகிய என்னையும் அன்பின் தேவன் மகிழ்ச்சிப்படுத்தினார். நாங்கள் ஆண்டவரைத் துதிப்பதேயன்றி வேறொன்றும் செய்யக்கூடாத விதத்தில் அவர் எங்கள் உள்ளங்களை அற்புதமானவிதத்தில் துதியின் ஆவியால் நிரப்பினார். அந்த நாட்களின் மொத்த அனுபவத்தைச் சொல்ல வேண்டுமானால் மகிமை கரைபுரண்டோடும் பொங்கும் நீர்ச்சுனையின் அனுபவம் அது" என்கின்றார், நம் பில்லி.

சுவிசேஷக் கூட்டங்களில் கலந்துகொண்டுவிட்டு கிரான்டக் கிலிருந்து ஊர்வந்து சேருவதற்குள் பில்லி சரீரத்தில் மிகவும் போராடவேண்டிய நிர்ப்பந்தமான நிலையாயிற்று. அவர் அத்தனை பெலவீனமான நிலையிலிருந்தார். ஆனால் அவருடைய உள்ளத்திற்குள் ஒரு ஆச்சரியமான ஆனந்த நம்பிக்கை துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தது.

"நான் என் பரம பிதாவின் மோட்ச இன்ப வீட்டில் வெகு சீக்கிரத்திலேயே இருப்பேன்" என்பதே அந்த ஆனந்த நம்பிக்கை.

இதற்கப்பால் பில்லி மிகவும் நோய்வாய்ப்பட்டார். கடைசியாக ஒரு டாக்டர் அவரைப் பரிசோதிக்க வரவழைக்கப்பட்டார். பில்லியின் உடல்நிலையை டாக்டர் நன்கு பரிசோதித்தார்.

"நல்லது டாக்டர், என் தேகநிலை எவ்வாறு உள்ளது?" என்று பில்லி டாக்டரைப் பார்த்துக் கேட்டார்.

"நீர் மரிக்கப்போகின்றீர்" என்று டாக்டர் பதில் அளித்தார்.

அதைக்கேட்டதும் பில்லி "மகிமை, மகிமை, தேவனுக்கே மகிமை" என்று டாக்டரின் காதுகளில் நன்கு தொனிக்கத்தக்கதாக ஆனந்த சத்தமிட்டார்.

அதற்கப்பால் பில்லி மிகவும் துடுக்குடன் டாக்டரைப் பார்த்து "அப்படியானால், மோட்சத்தில் உள்ளவர்களிடம் எனக்கு மருத்துவம் பார்த்த டாக்டர் அவர்களும் மோட்சத்திற்கு வந்து கொண்டிருக்கின்றார் என்று சொல்லலாமா?" என்று தனக்கே உரித்தான பரிசுத்த நகைச் சுவையுடன் கேட்டார் பில்லி.

இதன்பின் சில நாட்கள் சென்றபின்னர் பில்லி தன் ஆண்டவரின் பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார். அவர் விண்வீடு செல்லுமுன்னர் தன் மரணக் கட்டிலிலிருந்து எழுப்பிய கடைசி வார்தை "மகிமை" (Glory) என்ற ஒரே ஒரு வார்த்தை மாத்திரமேதான்.

ARE YOU LIKE THESE MEN?

WHITEFIELD said, "The more We do, the more we may do for Jesus. I sleep and eat but little, and am constantly employed from morning till midnight, and yet my strength is daily renewed. Oh, free grace! It fires my soul, and makes me long to do something for Jesus. I want more tongues, more bodies, more souls for the Lord Jesus. Had I ten thousand, He should have them all".

MATHEW HENRY said, "I would think it a greater happiness to gain one soul to Christ than mountains of silver and gold to myself. If I do not gain souls, I shall enjoy all my other gains with very little satisfaction, and I would rather beg my bread from door to door, than undertake this great work".

"நீங்கள் மனந்திருந்தாமல் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள் " (லூக் 13 : 5)

கர்த்தருக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நாம் பாவிகளாக இருக்கும்போதே நம்மேல் மட்டற்ற அன்பு பாராட்டி நமக்காக தமது ஜீவனையே கொடுத்து நம்மில் அன்புகூர்ந்த (ரோ 5 : 8) நம் அருமை இயேசு அப்பாவின் பரிசுத்த நாமத்தில் உங்களை வாழ்த்துகின்றேன்.

வருஷத்தை நன்மையால் முடிசூட்டி ஆசீர்வதிக்கும் கர்த்தர் இந்த 2001ஆம் ஆண்டை உங்களுக்கு ஆசீர்வதித்து தருவாராக. இந்த ஆண்டின் ஒவ்வொரு தினமும் நீங்கள் கர்த்தர் இயேசுவோடு அதிகமான நேரத்தை ஜெபத்தில் செலவிட்ட ஜெப ஆண்டாக இருக்க அன்பர் உங்களுக்கு உதவி செய்வாராக. ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் (யோ 15 : 5) என்ற ஆண்டவருடைய வார்த்தைக்கு இணங்க நீங்கள் அவரில் நிலை கொண்டு அவருக்கென மிகுந்த கனிகளை இந்த ஆண்டில் கொடுக்க நேசர் கர்த்தர் உங்களை தமது நாமத்துக்கு மகிமையாக எடுத்து பயன்படுத்துவாராக.

கர்த்தருடைய கிருபையாலும், தேவ பிள்ளைகளாகிய உங்களுடைய உருக்கமான ஜெபங்களாலும் சகோதரன் நார்ட்டன் அவர்களும், நானும் எங்களது இமயமலை தேவ ஊழியங்களை கர்த்தருக்கு மகிமையாக செய்து முடித்து சுகமாக இங்கு வந்து சேர்ந்தோம். எங்களுடைய இரண்டு மாத கால ஊழிய நாட்களில் ஆண்டவருடைய பாதுகாவலின் கரங்கள் எங்களை பத்திரமாக பாதுகாத்து வழிநடத்திற்று.

1999 ஆம் ஆண்டு நாங்கள் இமயமலைகளில் சென்ற அனைத்து இடங்களுக்கும் சென்று அந்த ஆண்டில் நாங்கள் சந்தித்த அதே ஆத்துமாக்களை 2000 ஆம் ஆண்டிலும் சென்று சந்தித்து சுவிசேஷம் கொடுத்து வந்தோம். அல்மோரா மலைகளில் பண்டிதர் லீலாதர் குடும்பத்தையும் சந்தித்தோம். அவருடைய பிள்ளைகளில் ஹேமா என்ற மகள் 32 வேதபாடங்கள் அடங்கிய "உலக இரட்சகர் இயேசு" என்ற தபால் பாட திட்டத்தை முடித்து அதற்கான சான்றிதழை பெற்று அதை

எங்களுக்கு காண்பித்தது எங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிப்பதாக இருந்தது.

பாண்டா கிராமத்தில் சகோதரன் ஆரியா அவர்கள் கர்த்தருக்குள் திடமாக இருக்கின்றார்கள். அவருடைய மகன் சம்சேரும் மருமகளும் ஆண்டவருடைய அன்புக்குள் வளர்ந்து வருகின்றனர். வீட்டின் சுவர்களில் நாங்கள் அனுப்பிய இந்தி மொழி தங்கவசன காலண்டர் தவிர வேறு எந்த கடவுளரின் படங்களையும் நரங்கள் காணவில்லை. ஆரியா அவர்களின் மனைவியும் இப்பொழுது சற்று மாற்றத்துடன் காணப்படுகின்றார்கள். எங்களை பட்சமாக நேசித்து உபசரிக்கும் அன்பை கர்த்தர் அவர்களுக்கு கொடுத்திருக்கின்றார்.

அல்மோரா, சண்டாக் போன்ற இடங்களிலுள்ள குஷ்ட்டரோக மருத்துவமனைகளுக்கும் வழக்கம் போல நாங்கள் சென்று அங்குள்ள அனைத்து குஷ்ட்டரோக நோயாளிகளுக்கும் பிஸ்க்கட் பாக்கெட்டுகளை வாங்கி கொடுத்து சுவிசேஷ பிரசுரங்களும் அவர்களுக்கு கொடுத்து வர கர்த்தர் உதவி செய்தார்.

அல்மோரா, பித்தோராகார், பாகேஷ்வர், பேஜ்நாத், குவால்தம், பட்கலி, டங்கோலி, போலிங், ஸ்ரீநகர் (கட்வால்), பவுடி போன்ற இமயத்தின் பனி மூடிய உச்சி இடங்களிலும் ஹல்த்வானி, ராம்நகர், ரிசிகேசம், ஹரித்துவாரம், கால்க்கா போன்ற இமயத்தின் அடிவார பகுதிகளிலும் தேவ ஊழியங்களை செய்ய கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார்.

அத்துடன் ஆண்டவர் எங்களை இந்தமுறை இதர சில இடங்களுக்கும் அழைத்துச் சென்று அங்கு நாங்கள் சுவிசேஷ ஊழியம் செய்யவும் அநேக காரியங்களை நாங்கள் நேரிடையாக பார்த்துக் கற்றுக்கொள்ளவும் எங்களுக்கு உதவி செய்தார். அந்த இடங்களையும், கர்த்தர் எங்களுக்கு காண்பித்த காரியங்களையும் கர்த்தருக்கு சித்தமானால் பின்வரும் இதழ்களில் உங்களுடன் பகிர்ந்து கொள்ளுவேன்.

எங்களை கண்ணின் மணி போல பாதுகாத்த கர்த்தர்

எங்களுடைய இரண்டு மாத கால தேவ ஊழியத்தில் ரயிலில் மாத்திரம் 10,000 கி.மீ. தூரம் பயணம் செய்திருப்பதை நாங்கள் கணக்கிட்டோம். பேருந்துகளில் பிரயாணம் செய்த தூரம் இன்னும் ஓரிரு

ஆயிரம் கி. மீ. சேரும். எங்களுடைய இத்தனை நீண்ட பயணங்களில் எல்லாம் எங்கள் அருமை நேசர் எங்களுடனேயே கூட இருந்து எங்களை கண்ணின்மணி போல பாதுகாத்துக் கொண்டார்.

இமயமலைகளில் உள்ள கட்வால், குமான் பகுதி மலை ரஸ்தாக்கள் சாநிழல் பள்ளத்தாக்கின் ரஸ்தாக்களாகும். மலைகளை மரங்களைப் போல வெட்டி செதுக்கி கங்கை போன்ற பெரும் நதிகளின் ஓரமாக மோட்டார் ரோடுகளை அமைத்துள்ளனர். பேருந்திலிருந்து கீழே பார்த்தால் நமது தலை சுழலும். பேருந்தில் பயணம் செய்வோர் யாவரும் மிகுந்த பயத்தோடு இருப்பதை நாம் காணலாம். நம் ஊர் பேருந்துகளில் காணப்படும் பேச்சு, சிரிப்பொலி, சம்பாஷணைகள் அந்த பேருந்துகளில் கிடையாது. டிரைவர் இருக்கைக்கு முன்பாக அவர் வழிபடும் கடவுளின் படம் கண்ணாடி சட்டமிடப்பட்டு பூஜைக்கான மினுக்கான பட்டுத் துணியால் சுற்றி வைக்கப்பட்டுள்ளது. சில நறுமணமான பத்திகள் படத்திற்கு முன்பாக புகைந்தவண்ணமாக இருக்கின்றன. படத்திற்கு சற்று மேலாக மாட்டின் கழுத்தில் கிடக்கும் மணியைப்போன்ற ஒரு சிறிய வெண்கல மணி தொங்கிக் கொண்டிருக்கின்றது. பேருந்து மேடு பள்ளங்களில் ஏறி இறங்கும்போதும், திடீரென வலது, இடது பக்கம் திரும்பும்போதும் அந்த மணி ஒலிக்கின்றது. அந்த மணி ஓசையின் மூலமாக தனது கடவுள் பூஜிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார் என்பதை டிரைவர் முழுமையாக நம்பி மகிழ்ச்சியடைகின்றார்.

பேருந்து பயங்கரமான செங்குத்து பாதைகளில் செல்லுகின்ற நேரம் அதினுள் மயான அமைதி நிலவுகின்றது. அந்த மணி அவ்வப்போது ஒலிக்கின்ற ஓசையைத் தவிர வேறு எந்த ஒரு ஒலியும் கேட்பதில்லை. இமயமலைகளிலுள்ள கரூட் என்ற இடத்திலிருந்து ஸ்ரீநகர் (கட்வால்) என்ற இடம் வரை பேருந்தில் சுமார் 12 மணி நேரம் பகல் நேரத்தில் பிரயாணம் செய்தோம். அந்த நீண்ட நேர பிரயாணத்தை இன்று நினைத்தாலும் எங்கள் உடம்பு சிலிர்க்கின்றது. சில வாரங்களுக்கு முன்னால் பெய்த மழையால் ஓரிடத்தில் ரஸ்தா முழுமையாக அடித்துச் செல்லப்பட்டிருந்தது. ரஸ்தாவே இல்லாத அந்த வழித்தடத்தில் பூமியில் உயர்ந்து நின்று கொண்டிருந்த பாறைக் கற்களில் பேருந்து ஏறி இறங்கி அங்கும் இங்கும் குடித்து வெறித்த மனிதனைப் போல ஆடி அசைந்து நிலை தடுமாறி சென்றபோது நாங்கள் எங்கள் கண்களை மூடி ஜெபநிலையில் இருந்தோம். இந்த பேருந்து ஆட்டம் மலை உச்சியில்

;டக்கின்றது. கீழே கெடு பாதாளத்தில் கங்கை நதி வெள்ளை நூல் போல ெதரிகின்றது. அந்த இடத்தில் பயணம் செய்து வந்தவர்களேயன்றி வேறு ாவராலும் எங்களது அனுபவத்தை புரிந்துகொள்ள இயலாது.

ஸ்ரீநகரிலிருந்து ரிசிகேசம் வரையான இமயமலை ரஸ்தாவையும் நாங்கள் பேருந்தில் கடந்து வந்தோம். அதுவும் ஒரு பயங்கரமான வழித்தடம்தான். அந்த இடத்திலும் பேருந்தை மிகவும் துணிச்சலாக ஓட்டிச்செல்லும் கட்வாலி டிரைவர்களை நாம் பாராட்டாமல் இருக்க இயலாது. பேருந்தை ஓட்டிச் செல்லும்போதே பேருந்தினுள் பயணிகள் ஏராளமாக இருக்கின்றனரா? இன்று நமக்கு போதுமான பேட்டா பணம் கிடைக்குமா? என்ற ஆவலில் பேருந்தினுள் அவ்வப்போது பின் நோக்கி திரும்பிப் பார்த்துக்கொண்டே செல்லுகின்றனர். அல்லது ஒரு கையால் தங்கள் தலையை தடவிக்கொண்டே அடுத்த ஒரு கரத்தால் வாகனத்தை துணிச்சலாக ஓட்டிச் செல்லுகின்றனர். டிரைவர் செய்வதைப் பார்க்கும்போது நமக்குத்தான் சற்று கஷ்டமாக இருக்கின்றது. நமது கால்கரங்கள் சற்று உதறத்தான் செய்கின்றது.

"கர்த்தர் உங்கள் முன்னே போவார், இஸ்ரவேலின் தேவன் உங்கள் பிறகே உங்களை காக்கிறவராக இருப்பார்" (ஏசா 52 : 12) என்ற தேவனுடைய வசனத்தைத் தான் நாங்கள் எங்கள் மனதில் அடிக்கடி நினைவுபடுத்திக் கொண்டு சென்றோம். அந்த தேவ வசனம் மிகுந்த தைரியத்தையும், தேவ சமாதானத்தையும் எங்களுக்கு தந்தது.

என் நாமம் என்ன என்று நீ கேட்க வேண்டியது என்ன? அது "அதிசயம்" (நியா 13 : 18)

இந்த தடவை நாங்கள் எங்கள் வடமாநில தேவ ஊழியத்தை தொடங்குவதற்கு முன்பாக பிடித்த மழை விடாது பெய்து கொண்டே இருந்தது. நீலகிரியில் செப்டம்பர் மாதம் முழுமையிலும் மழை ஓயாது பெய்த வண்ணமாக இருந்தது. எனது சட்டை துணிகளை கூட துவைத்து உலர வைக்க இயலாமல் கஷ்டப்பட்டேன். எனினும் பரம தகப்பன் அவ்வப்போது மழையை நிறுத்தி சற்று வெயிலை தந்து துணிகளை உலரவைத்து எடுத்துக்கொள்ள உதவி செய்தார்.

தேவனுடைய ஊழியத்துக்குத் தேவையான இந்தி மொழி கைப்பிரதிகள் பம்பாயில் உள்ள ஜி. எல். எஸ். அச்சுக்கூடத்தில் எங்களது

ஊழியத்துக்காகவே பிரத்தியேகமாக அச்சாகிக் கொண்டிருந்தது. அதற்காக சில ஆயிரம் ரூபாய்களை நாங்கள் அவர்களுக்கு அனுப்பி இருந்தோம். அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்ட சுவிசேஷ பிரதிகளை உலர வைக்க இயலாமல் பம்பாயில் பலத்த மழைகள் பெய்து வெள்ளக்காடானது. மழை காரணமாக கைப்பிரதிகள் ஏற்ற நேரம் வந்து சேராது என்ற திட்டமான சூழ்நிலை உருவானது. கைப்பிரதிகள் இல்லாமல் தேவ ஊழியத்துக்குச் செல்லுவது எப்படி? குழப்பமான இந்த நிலையில் நாங்கள் தேவனைத்தான் நோக்கிப் பார்த்தோம். "என் நாமம் அதிசயம்" என்று திருவாய் மலர்ந்த தேவன் எங்களுக்கு அதிசயத்தை செய்தார்.

பம்பாயில் மழையின் கடுமை சற்று தணியவே அச்சகத்தார் எங்களுடைய பிரதிகளை துரிதமாக அச்சிட்டு முடித்தார்கள். அச்சிட்டு முடியவும் அதை உடனே விரைவு இரயில் மூலமாக தேவ பிள்ளைகள் சர்ச்சில் ஸ்டார்லிங் மற்றும் மோசஸ் அவர்களும் சென்னைக்கு அனுப்பி வைத்தனர். அதின் காரணமாக எங்களுக்குத் தேவையான ஹிந்தி மொழி கைப்பிரதிகள் நாங்கள் பயணப்படுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் அற்புதமாக வந்து சேர்ந்தன.

அத்துடன் சிவகாசியிலிருந்தும் கர்த்தருடைய பரிசுத்த தேவப்பிள்ளை தர்மராஜ் அவர்கள் மிகவும் தரமான, நேர்த்தியான "இயேசு விடுவிக்கிறார்" இந்தி மொழி சுவிசேஷ பிரசுரங்களை அதிகமான பணம் செலவு செய்து எங்களுக்கு துரிதமாக கிடைக்க வேண்டும் என்ற காரணத்துக்காக கூரியர் தபாலில் முற்றும் இலவசமாக அனுப்பியிருந்தார்கள். அவைகளும் ஏற்றவேளையில் எங்கள் கரங்களை வந்தடைந்து தேவ ஊழியத்தின் பாதையில் எங்களுக்கு மிகவும் பயன் உள்ளவைகளாக இருந்தன. கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரம்.

மழை பெய்து கொண்டிருந்த சமயம்தான் நாங்கள் கோத்தகிரியைவிட்டு பயணப்பட்டோம். எங்களை மேட்டுப்பாளையத் திலிருந்து சென்னைக்கு ஏற்றிச் சென்ற நீலகிரி எக்ஸ்பிரஸ் ரயிலும் மழை தூறலின் நடுவேதான் புறப்பட்டு சென்றது. எனினும், நாங்கள் சென்னை வந்து சேர்ந்தபோது மழை முற்றுமாக நின்றுவிட்டது. அதற்கப்பால் மழை மூலமாக எங்கள் ஊழியங்களுக்கு எந்த ஒரு தொந்தரவும் ஏற்படவே இல்லை.

அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்.

சென்னையிலிருந்து தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் புது டில்லி நோக்கி புறப்படும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. இரவு 10 மணிக்கு அது சென்னையிலிருந்து கிளம்புகின்றது. எங்களது பெட்டியில் வரவேண்டியவர்கள் எல்லாரும் வந்துவிட்டார்கள். எனினும் பக்கவாட்டு இருக்கைக்கு வரவேண்டிய ஒரு ஆள் இன்னும் வந்து சேரவில்லை. இரயில் புறப்பட இன்னும் சில நிமிடங்கள் இருக்கும்போது இரு மனிதர் பெரிய பெட்டிகள் படுக்கைகளுடன் அந்த பக்கவாட்டு இருக்கைக்கு வந்து சேர்ந்தனர்.

அந்த இருக்கையின் கீழாக எங்களோடு இருந்த ஒரு வாலிபன் தனது பெட்டியை வைத்திருந்தான். அதைக் கண்ட மேற்கண்ட இருவரில் ஒருவர் அந்த பெட்டியை வைத்த வாலிபனோடு சண்டைபோட்டு அந்த பெட்டியை உடனடியாக அப்புறப்படுத்த போராடினார். அந்த பெட்டியை வைத்த வாலிபன் தனது பெட்டியை எங்கே வைப்பது என்பது அறியாமல் திகைத்தவனாக அதை எடுக்க தாமதித்தபோது மேலே கண்ட மனிதர் தனது கையை முஷ்டி செய்துகொண்டு பெட்டி வைத்தவரின் முகத்துக்கு நேராக தனது கோபக்கனல் வீசும் முகத்தை அருகில் கொண்டு சென்று அடிப்பதற்கு எத்தனம் செய்தார். அதைக்கண்ட பெட்டியை வைத்த வாலிபன் பயந்து நடுங்கி உடனே தனது பெட்டியை அங்கிருந்து அப்புறப்படுத்திவிட்டான்.

பக்கவாட்டு இருக்கைக்கு வந்த அந்த இரு மனிதரும் தங்களது பெட்டி படுக்கைகளை நல்லவிதமாக வைத்தவாறு உட்கார்ந்து கொண்டனர். ஒவ்வொன்றும் 2 லிட்டர் கொள்ளளவு கொண்ட பெப்சி, மிராண்டா, ஃபாண்டா குளிர்பானங்கள் கொண்ட பாட்டில்களையும் அவர்கள் தங்களோடு எடுத்து வந்திருந்தனர். அவர்கள் கிறிஸ்தவர்கள் என்பதை நாங்கள் கண்டு கொள்ள வெகு நேரம் செல்லவில்லை. இரவில் அவர்கள் வேதாகமத்தை திறந்து அப்படியே சற்று நேரம் வாசித்தனர்.

பொழுது விடிந்தது. இருவரும் வேதம் வாசித்தனர். பகற் காலம் முழுமையிலும் அவர்கள் அவ்வப்போது நன்றாக சாப்பிட்டு பெரிய பெரிய குளிர்பான பாட்டில்களையும் குடித்த வண்ணமாகவே இருந்தார்கள். அவர்களுடைய ஆகார வேளைகளில் மற்ற

பெட்டிகளிலிருந்தும் வெள்ளை வேஷ்டி, வெள்ளை ஜிப்பாய் அணிந்த பாஸ்ட்டர்களும் வந்து கலந்து கொண்டனர். அதைக்கண்ட நாங்கள் இவர்கள் மேலான சபைக்குரிய பரிசுத்தவான்கள் என்பதை எங்களுக்குள் நிதானித்துக் கொண்டோம். அவர்கள் தங்கள் உணவுகளை சென்னையிலேயே தயார் செய்து கொண்டு வந்திருந்தனர்.

எங்கள் பெட்டியின் பக்கவாட்டு இருக்கையில் இருந்த அந்த இரண்டு கிறிஸ்தவர்களும் அவ்வப்போது தங்களுக்குள்ளாக அந்நிய பாஷைகளிலும் பேசி ஆனந்திப்பதை நாங்கள் பார்த்தோம். மெய்யாகவே இவர்கள் பரலோக ராஜ்யத்துக்கு சுதந்திரவாளிகளான மக்கள் என்பதை நாங்கள் புரிந்து கொண்டோம்.

அடுத்த நாள் மத்தியானம் 2 மணிக்கு எங்களை ஏற்றிச் சென்ற ரயில் நாக்பூர் ரயில் ஜங்ஷனுக்கு வந்து சேர்ந்தது. அங்கு ரயில் சுமார் 15 நிமிடம் நின்றது. ரயிலில் உள்ளோர் கீழே இறங்கி பிளாட்பாரத்திலுள்ள கடைகளிலிருந்து பழங்கள், பொருட்களை வாங்கினார்கள். நானும் எனது இருக்கையிலிருந்து எழுந்து எங்களது ரயில் பெட்டியின் கதவுக்குச் சென்று வெளியே பிளாட்பாரத்தை பார்த்தேன். அப்படி நான் பார்த்தபோது எங்களுடன் பிரயாணம் செய்து வரும் அந்த இரட்டை கிறிஸ்தவரில் ஒருவர் ஒரு வாழைப்பழத்தை தோல் உரித்து பிளாட்பாரம் வழியாக சாப்பிட்டுக்கொண்டே எங்கள் பெட்டிக்கு நேராக நடந்து வருவதை நான் ஆச்சரியத்தோடு பார்த்தேன். அவரை அந்த காட்சியுடன் பார்த்த மாத்திரத்தில் " அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" (மத் 7 : 16) என்ற தேவ வார்த்தை எனது இருதயத்தில் தொனிப்பதை நான் கவனித்தேன்.

அந்த நாளின் இரவில் எங்கள் பெட்டியில் இருந்த இந்திபேசும் மக்களுக்கு எங்கள் வசம் இருந்த அழகான "இயேசு விடுவிக்கிறார்" இந்தி சுவிசேஷ பிரசுரங்களை நாங்கள் ஜெபத்தோடு கொடுத்தோம். தனது முகத்தில் அன்பு கிறிஸ்தவரால் குத்து வாங்க இருந்த இந்திக்கார வாலிபனுக்கும் சில பிரதிகளைக் கொடுத்தோம். அவைகளை அந்த வாலிபன் ஆவலோடு வாங்கி வாசித்தான். அந்த இந்தி பிரசுரங்கள் நல்ல நேர்த்தியான காகிதத்தில் அச்சிடப்பட்டிருந்தன. "இந்தி சுவிசேஷ பிரதிகள் அழகாக இருப்பதாகவும், அவைகள எங்கு கிடைத்தன" என்ற விவரத்தை அந்த இரட்டை கிறிஸ்தவர்கள் நம் சகோதரன் நார்ட்டன் அவர்களிடம் கேட்டிருக்கின்றனர்.

வேதம் வாசிக்கின்றனர். அந்நிய பாஷையில் கர்த்தரோடு உரையாடுகின்றனர். இப்படிப்பட்டவர்கள்தான் கோபமும் மூர்க்கமும் கொண்டு தெரியாமல் தனது பெட்டியை வைத்து விட்ட மனிதரின் முகத்தில் குத்த தயாராகின்றனர்.

எங்களுடன் பிரயாணம் செய்த அந்த இரட்டை கிறிஸ்தவர்கள் மெய்யான தேவ மக்களாக இருந்தால் அடுத்த நாள் காலை ரயில் டில்லி போய் சேருவதற்குள், அல்லது பெட்டியிலிருந்து இறங்கிச் செல்லும்போதாவது தாங்கள் கோபமும் மூர்க்கமும் அடைந்த வாலிபனோடு ஒப்புரவாகி கட்டாயம் மன்னிப்பைப் பெற்றுவிடுவார்கள் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யாமல், தேவமக்களாகிய எங்களிடம் கூட ஒரு வார்த்தை பேசாமல் அஞ்ஞானிகளைப்போல புறப்பட்டுச் சென்றார்கள்.

ஆனால், எங்களுடன் பயணித்த மற்ற இந்து மக்கள் கூட எங்களிடம் அன்பொழுக கை குலுக்கி விடைபெற்று எங்களுடைய பொருட்களை பெட்டியிலிருந்து இறக்கவும் உதவி செய்தனர். இரட்டைக் கிறிஸ்தவர்களின் வேதவாசிப்புகளையும், அவர்கள் பேசிய அந்நிய பாஷைகளையும், பிளாட்பாரத்தின் வழியாக கல்லாத பாமரன் போல் வாழைப்பழத்தை யாவரும் பார்த்து நகைக்க சாப்பிட்டு வந்த விதத்தையும் நான் எனக்குள் சிந்தித்தபோது "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" என்று தேவன் கூறியது எத்தனை உண்மையும் சத்தியமுமானது என்பதை கண்டுணர்ந்ததுடன் அன்பில்லாமல் ஒருவர் மனுஷர் பாஷைகளையும், தூதர் பாஷைகளையும் பேசினாலும் அது ஒன்றுக்கும் உதவாது என்பதையும் கண்டு கொண்டேன்.

எங்களை வழிநடத்திச்சென்ற அன்பின் கன்மலை

புது டில்லியிலிருந்து புறப்படும் பிரம்மபுத்திரா ரயிலுக்காக நாங்கள் எங்கள் மூட்டை முடிச்சுகளுடன் காத்திருந்தோம். பிளாட்பாரத்தில் கூட்டம் நிரம்பி வழிந்தது. ரிசர்வேசன் செய்திருந்ததினால் எங்களுடைய இடம் எங்களுக்கு பத்திரமாக கிடைக்கும் என்று நாங்கள் மிகவும் மெத்தனமாக எண்ணி இருந்தோம். எனினும், பிளாட்பாரத்தில் அந்த ரயிலுக்காக காத்திருந்த ஜனக்கூட்டத்தை நாங்கள் பார்த்தபோது எங்கள் மனதில் ஒரு கலக்கம் ஏற்படவேதான் செய்தது. ரயில் வரும் நேரம் நெருங்கும் சமயம் எங்களது ஜாமான்களை வெளியிலிருந்து

பிளாட்பாரத்தில் தூக்கிக் கொண்டு வந்த போர்ட்டர் எங்களுக்கு முன்பாக வந்து நின்றான். "ஞானத்தையும், உணர்வையும், ஆலோசனையையும் அருளும் தேவ ஆவியானவர்" (ஏசா 11 : 2) எங்களுடன் இருந்ததினால் எங்களுடைய பொருட்களை ரயில் வந்ததும் எங்களுடைய பெட்டியில் ஏற்றிக்கொடுக்க அந்த போர்ட்டரை நாங்கள் கேட்டுக்கொண்டோம்.

பிரம்மபுத்திரா ரயில் வந்தது. பெருங்கூட்டமாக நின்ற மக்கள் ரயிலின் எல்லா பெட்டிகளிலும் முண்டி அடித்து ஏறினார்கள். எங்களுடைய பொருட்களை எடுத்து வந்து எங்களுக்கு உதவி செய்ய போர்ட்டர் இருந்ததினால் நாங்கள் எப்படியோ சமாளித்து எங்களுடைய பதிவு செய்யப்பட்ட இடங்களை வெகு கஷ்டத்துடன் பிடித்தோம். நாங்கள் உட்கார்ந்து கொள்ள இடம் கிடைத்ததே தேவ தயவாக இருந்தது.

நாங்கள் இருந்த ரயில் பெட்டி மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. அது ஒரு ரிசர்வேசன் பெட்டியாக இருந்தபோதினும் கட்டுப்படுத்த கூடாத மக்கள் கூட்டத்தால் அது ஒரு பொது பெட்டியாக இருந்தது. இரவில் மக்கள் கூட்டம் வழி எல்லாம் படுத்திருந்தது. இடைவெளியின்றி படுத்திருந்த அந்த மக்கள் கூட்டத்தை கடந்து கழிப்பறைக்கு செல்லுவது எங்களுக்கு வேதனையின் அனுபவமாக இருந்தது. கஷ்டப்பட்டுப் போய் கழிப்பறையைத் திறந்தால் ஒரு பெரிய பச்சை மிளகாய் சாக்கு மூட்டையை அங்கு வைத்திருப்பதை கண்டு திடுக்கிட்டோம். இனி அடுத்த கழிப்பறைக்குச் சென்றால் அந்த கழிப்பறையின் வாசலை திறக்கவிடாதபடி ராணுவ வீரர்கள் தங்கள் மிகுந்த கனமான இரும்பு பெட்டிகளை ஒன்றுக்கு மேல் ஒன்றாக அடுக்கி வைத்திருப்பதைப் பார்த்து பெருமூச்சுவிட்டோம். அந்த இரவில் நாங்கள் பிரம்மபுத்திரா ரயிலில் பட்ட பாடுகள் அத்தனை எளிதானதல்ல. அந்த இக்கட்டான சூழ்நிலையையும் இலகுவாக கடந்து வர தேவன்தான் எங்களுக்கு கிருபை செய்தார்.

சகோதரன் நார்ட்டன் அவர்களின் மகன் பாட்னா ரயில் நிலையத்தில் எங்களை சந்தித்து எங்களுக்கு தேவையான உணவை நான்கு பொட்டலங்களாக கட்டி எங்களுக்கு தந்துவிட்டுச் சென்றார்கள். அந்த மகன் அங்கு மிஷனரியாக பணிபுரிந்து கொண்டிருக்கின்றார். அந்த மகன் கஷ்டப்பட்டு கொண்டு வந்து தந்த உணவில் 2 பொட்டலங்கள் உணவை மாத்திரம் நாங்கள் அருந்தினோம். அதை சாப்பிடத் தேவையான தண்ணீர் மட்டுமே எங்களுக்கு இருந்தது. அடுத்த இரண்டு பொட்டலங்கள்

உணவை சாப்பிட எங்கள் வசம் தண்ணீர் கிடையாது. எங்களை நெருங்கியிருந்த ஜனக்கூட்டத்தின் காரணமாக நாங்கள் தண்ணீர் கூட வாங்க வழியின்றி பசியோடிருந்து அந்த உணவு பொட்டலங்களை யாருக்கும் கொடுக்கவும் வழியில்லாமல் வெளியே வீசி எறியக்கூடிய நிலைக்கு தள்ளப்பட்டோம்.

டில்லி ரயில் நிலையத்தில் இரயில் புறப்பட சற்று நேரத்திற்கு முன்னால் தேவன் அந்த போர்ட்டரை எங்களண்டை அனுப்பி இருக்காத பட்சத்தில் நாங்கள் அந்த ரயில் வண்டிக்குள் ஏறி இருக்கக்கூட முடியாது. ஆ, தேவன் எத்தனை நல்லவர்!

ஹல்த்வானி இரயில் நிலையத்தில் நடந்த விந்தை நிகழ்ச்சி

அடுத்து ஒரு அற்புத நிகழ்ச்சி. எங்களை முந்தின இரவு டில்லியிலிருந்து ஏற்றி வந்த ராணிகேத் எக்ஸ்பிரஸ் அதிகாலை சுமார் 5 மணிக்கெல்லாம் இமயத்தின் அடிவார பட்டணமான **ஹல்த்வானியில்** கொண்டு வந்து சேர்த்துவிட்டது. எங்களிடமிருந்த பெட்டி படுக்கை களுடன் ஆயிரக்கணக்கான சுவிசேஷ துண்டு பிரதிகளுடன் கூடிய ஒரு பெரிய பையும் இருந்தது. அதை ரயிலிலிருந்து இறக்கி ரயில் நிலையத்துக்கு வெளியே கொண்டு போவதை குறித்து நாங்கள் யோசனையாக இருந்தோம். எங்களுடைய மனதின் பாரத்தை உடனே தந்தி ஜெபத்தின் மூலமாக பரலோகத்துக்கு தெரிவித்து விட்டோம். அந்த ரயில் நிலையத்தில் போர்ட்டர்கள் எவருமே கிடையாது என்பது உங்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கலாம். ரயில் ஸ்டேஷனை நெருங்குவதற்கு முன்னர் எங்களுக்கு அருகிலிருந்த ஒரு மனிதரிடம் எங்களுடைய பழுவான பெட்டி, படுக்கை, பை குறித்த விபரம் கூறினோம். அவர் தனது இள வயது மனைவி இரு சிறிய ஆண் பிள்ளைகளுடன் எங்களோடு பயணம் செய்து கொண்டு வந்தார். கொங்கண் ரயில்வேயில் பணிபுரியும் அந்த கட்டுமஸ்தான மனிதர் மிகவும் அன்புள்ளம் கொண்டவர். தனது லீவில் மனைவி பிள்ளைகளுடன் தனது சொந்த கிராமத்து வீட்டை நோக்கி இமயத்தின் உச்சிக்கு போய்க் கொண்டிருந்தார்.

ரயில் **ஹல்த்வானியில்** வந்து நின்ற உடன் எங்களது பழுவான கைப்பிரதிகளின் பெரிய பையை அப்படியே அலாக்காக தூக்கி சுமந்து சென்று ஒரு சைக்கிள் ரிக்ஷாவில் வெளியே வைத்துவிட்டு மற்ற

பொருட்களையும் எங்களுடன் தூக்கி வெளியே கொண்டு வந்து ரிக்ஷாவில் வைத்துவிட்டு நாங்கள் செல்ல வேண்டிய இடத்தை ரிக்ஷாக்காரனிடம் கூறி இத்தனை ரூபாய் மட்டும் ரிக்ஷாவுக்கு கொடுத்தால் போதும் என்று சொல்லிவிட்டு சென்றார். சைக்கிள் ரிக்ஷாவுக்கு அவர் கொடுக்கச் சொன்ன பணம் மிகவும் குறைவானதாகும்.

ஆ, தேவனுடைய அன்பு எத்தனை பெரியது! நமது பெட்டி படுக்கையை அந்த மனிதர் தொடக்கூட இயலாத அளவுக்கு அத்தனை மேலான பதவியில் உள்ள ஒரு அந்தஸ்துள்ள நல்ல வசதியான வாலிபன் ஒரு கூலிக்காரனைப் போல நமது பழுவான பையையும் இதர பொருட்களையும் தூக்கிச் சுமந்து வந்தது எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்த அன்புள்ளம் கொண்ட வாலிபனுடைய அன்புக்கு பின்னால் மறைந்து நின்ற நேச இரட்சகரின் கல்வாரி அன்பை நினைத்து உள்ளம் உருகினோம்.

தமக்கு காத்திருக்கிறவர்களுக்கும், தம்மைத்தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர்.

ஊழியம் கர்த்தருடையது. அதை செய்ய பெலன் கொடுப்பவரும், ஆலோசனை தருபவரும், அதை விளையச் செய்கிறவரும் தேவன் ஒருவரேதான்.

சகோதரன் நார்ட்டன் அவர்களும், நானும், நாங்கள் தங்குகின்ற லாட்ஜ் போன்ற இடங்களில் எப்பொழுதும் ஜெபித்துக் கொண்டும், தேவனுடைய வசனங்களை வாசித்து தியானித்துக் கொண்டுமேதான் இருப்போம். எங்கள் இருவருக்கும் இடையே உலகப்பிரகாரமான எந்த ஒரு பேச்சு வார்த்தைகளும் இருக்காது. ஒருக்கால் நாங்கள் அதில் தவறினாலும் எங்களில் யாராவது ஒருவர் அதை விரைவில் கண்டுபிடித்து திரும்பவும் நாங்கள் ஜெபநிலைக்கு திரும்பிவிடுவோம். சகோதரன் தேவனுடைய வசனங்களை வாசித்தால் நான் ஜெபித்துக் கொண்டிருப்பேன். அல்லது நான் கர்த்தருடைய வசனங்களை வாசித்துக்கொண்டிருந்தால் அவர்கள் ஜெபித்துக் கொண்டிருப்பார்கள். அல்லது இருவருமே ஜெபித்துக் கொண்டிருப்போம். தேவன் எங்களை தமிழ்நாட்டிலிருந்து இத்தனை ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இமயத்தின் பனி மூடிய சிகரங்களண்டை அழைத்துவந்த அவரது மேலான அன்பின் நோக்கத்தை எங்கள் மூலமாக நிறைவேற்ற நாங்கள் எங்களை

கர்த்தருக்கு முழுமையாக ஒப்புக் கொடுத்து உள்ளத்தின் பாரத்தோடு ஜெபித்துக் கொண்டிருப்போம். தேவன் எங்களுக்கு நல்ல ஊழிய வாய்ப்புகளை உருவாக்கித்தர மன்றாடிக்கொண்டே இருப்போம். எங்களுடைய இருதய கதறுதல்களை அறிந்த தேவன் இந்த தடவை எங்களை இதுவரை இல்லாத அளவிற்கு வித்தியாசமான விதத்தில் எடுத்து பயன்படுத்தினார்.

முதன் முறையாக நாங்கள் இமயத்தில் உள்ள கிராம பள்ளிகள் சிலவற்றிற்கு சென்று தேவனுடைய சுவிசேஷ பிரதிகளை பள்ளி பிள்ளைகளுக்கும், ஆசிரியர்களுக்கும் கொடுக்க கர்த்தர் எங்களுக்கு ஆலோசனை தந்து வழிநடத்தினார்.

அப்படியே இமயமலைகளிலுள்ள பித்தோராகார் என்ற சிறிய பட்டணத்திலுள்ள ஒரு பெண்கள் இண்டர் காலேஜ்க்கும் நாங்கள் சென்று பற்பலவிதமான சுவிசேஷ பிரசுரங்களை அந்தக் கல்லூரியில் உள்ள பெண் பிள்ளைகளுக்கு கொடுக்க நம் அருமை நேசர் கிருபை செய்தார். நாங்கள் அவர்களுக்கு கொடுத்த சுவிசேஷ பிரதிகளுடன் "இயேசு யார்?" என்ற இந்தி பிரதியும் இருந்தது. அநேகமாக நாங்கள் விநியோகிக்கும் கைப்பிரதிகளுடன் "இயேசு யார்?" என்ற பிரதியை கட்டாயம் வைத்தே கொடுப்போம்.

அங்கு இமயமலைகளில் இன்டர் காலேஜ் என்பது நமது தமிழ்நாட்டில் பிளஸ் 2 படிப்புக்கு சமம். தேவ தயவால் 1200 பிரதிகளை அங்கு விநியோகித்தோம். விசேஷமான கிறிஸ்தவ பிரசுரங்களை கல்லூரியிலுள்ள இந்து ஆசிரியைகளுக்கு கொடுத்தோம். அந்த பித்தோராகார் பட்டணத்தின் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் தலைவருடைய மனைவி அந்தக் கல்லூரியில் இந்தி பேராசிரியையாக இருக்கின்றார்கள். அவர்களும் எங்களிடமிருந்து மனமகிழ்ச்சியோடு கிறிஸ்தவ பிரசுரங்களை பெற்றுச் சென்றார்கள். இந்த ஆண்டின் (2001) ஆரம்பத்தில் கொஞ்சம் இந்தி கிறிஸ்தவ தங்கவசனக் காலண்டர்களை மேற்கண்ட கல்லூரிக்கு அனுப்ப தேவன் எங்களுக்கு உதவி செய்தார்.

அந்த கல்லூரியில் பயிலும் இந்து மாணவிகளுக்கு சில நூறு இந்தி புதிய ஏற்பாடுகளையும், சில நூற்றுக்கணக்கான கிறிஸ்தவ துண்டு பிரசுரங்களையும் அனுப்ப கர்த்தருக்குள் பிரயாசம் எடுத்து வருகின்றோம். கர்த்தருக்கு சித்தமானால் இந்த இதழ் உங்கள் கரங்களை வந்து

சேரும்போது புதிய ஏற்பாடுகளும், கைப்பிரதிகளும் அவர்களுக்கு போய் சேர்ந்திருக்கும். அதின் விபரம், கர்த்தர் தயைகூர்ந்தால் அடுத்த இதழில் உங்களுக்கு தெரிவிப்பேன்.

கால்க்கா, பட்கலி, டங்கோலி, போலிங் போன்ற இமயமலை கிராமங்களிலுள்ள பள்ளிகளில் தேவனுடைய சுவிசேஷ பிரதிகளை பள்ளி பிள்ளைகளுக்கும், ஆசிரியர்களுக்கும் கொடுக்கவும், கால்க்கா என்ற இடத்திலுள்ள ஆங்கில பள்ளியில் சுவிசேஷ பிரதிகளை கொடுத்து பிள்ளைகளிடம் தேவனுடைய அன்பை பகிர்ந்து கொள்ளவும் நம் அருமை இரட்சகர் எங்களுக்கு உதவி செய்தார். பள்ளிகளிலும், கல்லூரியிலும் கொடுக்கப்பட்ட தேவனுடைய பிரசுரங்கள் மூலமாக கர்த்தர் தொடர்ந்து அந்த இளம் நெஞ்சங்களோடும், அவற்றைப் படிக்கும் யாவரோடும் பேசும்படியாக நீங்களும் அன்பாக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் மனந்திருந்தாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் (லூக் 13 : 5)

இந்த தலையங்கச் செய்தி அச்சுக்கு போகும் நேரம் குஜராத் மாநிலத்தின் பயங்கர பூகம்ப செய்தி எல்லா பத்திரிக்கைகளிலும், தினசரிகளிலும் காணப்படுகின்றன.

12 ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடக்கும் கும்பமேளாவானது அலகாபாத்தில் நடந்து கொண்டிருந்த வேளையில், 2 கோடி இந்திய மக்கள் அங்குள்ள புனித நதிகளில் தங்கள் பாவம் போக்க நீராடிக்கொண்டிருந்த நேரத்தில் தானே 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் தேதி காலை 8.50 மணிக்கு குஜராத் மாநிலத்தில் நிலநடுக்கம் உண்டாயிற்று.

சில வினாடிகளே நீடித்த அந்த பயங்கர நிலநடுக்கத்தால் குஜராத் மாநிலத்தின் 25 மாவட்டங்களில் 17 மாவட்டங்கள் அழிந்ததாகவும், 200 கிராமங்கள் புதையுண்டதாகவும் 1.5 லட்சம் வீடுகள் தரைமட்ட மானதாகவும், கிட்டத்தட்ட ஒரு லட்சம் மக்கள் மாண்டு போனதாகவும், 25 ஆயிரம் கோடி ரூபாய்க்கான நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் தினசரி பத்திரிக்கைகளிலே நாம் வாசித்தோம்.

இரண்டாம் உலகப்போரில் ஜப்பானிலுள்ள ஹிரோஷிமா பட்டணத்தில் வீசப்பட்ட அணுகுண்டு 15 ஆயிரம் டன் வெடி பொருளை (டிஎன்டி) கொண்டதாகுமாம். அப்படியான 400 அணுகுண்டுகளை வீசும் பட்சத்தில் ஏற்படக்கூடிய கோர பயங்கர அழிவும், நிலநடுக்கமும் இப்பொழுது ஏற்பட்டுள்ளதாம். நிலநடுக்கத்தின் மையப்பகுதியில் 650 அடி ஆழத்திற்கு பாதாள குழி ஏற்பட்டிருப்பதை செய்திகளில் நாம் பார்த்தோம்.

நமது நெஞ்சத்தை நடுங்கவைக்கும் அழிவின் செய்திகளையும், இரத்தக் கண்ணீர் வடியச் செய்யும் படங்களையும் நாம் செய்தி தாட்களிலே பார்த்தோம். அஞ்ஜார் என்ற இடத்தில் 400 பள்ளிக் குழந்தைகள் பெரும்பாலும் பெண் குழந்தைகள் ஒட்டு மொத்தமாக மாண்டு போன செய்தி நமது இரத்தத்தை உறைய வைத்தது. உயிரோடு கட்டிடங்களின் இடிபாடுகளில் சிக்கி மீட்பாரில்லாமல் பசி, பட்டினி, தாகத்தால் செத்தோர் எண்ணிக்கை பல்லாயிரங்களாகும்.

தாங்கள், தங்களது மன மகிழ்ச்சியான வாழ்வுக்காக கட்டிய அழகான அடுக்கு மாடிக்கட்டிடங்களே அந்த மக்களின் சாமாதிகளாகிப் போயின. வானளாவ எழுந்து கெம்பீரமாக விண்ணோடும், முகிலோடும் விளையாடிய உயரமான பெருங்கட்டிடங்கள் சீட்டுக்கட்டுகள் போல சில விநாடிகளுக்குள்ளாக மண்ணிலே சாய்ந்து விழுந்தன.

அநேக ஆயிரக்கணக்கான இந்து கோயில்கள் நிலநடுக்கத்தால் தரைமட்டமாயின. 5000 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டதும், திரள் திரளான மக்களால் பூஜிக்கப்பட்டதுமான கோயில்கள் தரையிலே சாய்ந்தன.

இந்த நிலநடுக்கம் ஏன் வந்தது? எதற்காக வந்தது? எப்படி வந்தது? என்பதை எல்லாம் ஆராய நமக்கு நேரம் இல்லை. இயற்கையின் சீற்றம், பூமித்தாயின் குமுறல் என்று மண்ணான மனிதன் அதற்கு விளக்கம் கொடுக்கின்றான். ஏதோ தற்செயலாக இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக மனிதன் அனுமானிக்கின்றான்.

வானமும், பூமியும் ஒழிந்து போனாலும் ஆண்டவருடைய வேதத்தின் ஒரு எழுத்தாகிலும், எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது (மத் 5 :18) என்று கூறப்பட்டுள்ள அந்த பரிசுத்த வேத புத்தகத்தில் "ஆண்டவர் கட்டளையிடாதிருக்க காரியம் சம்பவிக்கும் என்று

சொல்லுகிறவன் யார்?" (புலம்பல் 3 : 37) என்றும் "கர்த்தருடைய செயல் இல்லாமல் ஊரில் தீங்கு உண்டாகுமோ?" (ஆமோஸ் 3 : 6) என்றும் எழுதப்பட்டுள்ளது ஒரு அற்பமான அடைக்கலான் குருவி பூமியிலே செத்து விழுவதானாலும் கூட அந்தக் காரியமும் தேவனுடைய திட்டமான சித்தத்தின்படி நிகழ்கின்ற பொழுது (மத் 10 : 29) ஒரு லட்சத்துக்கும் கூடுதலானது தமது கரத்தின் கிரியையான தம்முடைய மக்கள் மாண்டு மடிந்து போயிருக்கின்றார்கள் என்றால் அது அவருடைய கணகளைத் தப்பியோ அல்லது கவனத்தை தப்பியோ அல்லது ஆண்டவருக்கு தெரியாமலோ ஒருக்காலும் நடக்கவே இல்லை.

குஜராத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது ஆண்டவருடைய கோபத்தினாலேயேதான் என்று நமது இந்திய தேசத்தின் கர்நாடகா மாநிலத்தின் அமைச்சரான ஜாண் என்பவர் கூறி அதின் காரணமாக அவரது பதவியும் பறிக்கப்பட்டது நமது இந்திய தேசமும் முழு உலகமும் அறிந்த விசயமாகும். அந்தச் செய்தி முழு உலக செய்தி தாட்களிலும், தொலைக்காட்சிகளிலும் ஒளி பரப்பப்பட்டு யாவருக்கும் தெரிய வந்தது.

அமைச்சர் ஜாண் அவர்கள் சொன்னதையே நானும் இங்கு சொல்ல வரவில்லை. நிலநடுக்கத்தில் சிக்கி நொடிப்பொழுதில் இருந்த இடம் தெரியாமல் போன அந்த அப்பாவி மக்களுக்காக நமது இருதயம் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றது. " 15 நிமிடங்களுக்கு முன்னர் நாங்கள் கோடீஸ்வரர்களாக இருந்தோம். ஆனால், இப்பொழுதோ நாங்கள் தெருக்கள் சுற்றியலையும் பிச்சைக்காரர்களாகிவிட்டோம்" என்ற அந்த மக்களின் கதறுதலின் வார்த்தைகள் நமது தலைகளை சுழலச் செய்கின்றன.

குஜராத் மாநிலம் கடந்த மூன்று ஆண்டு காலமாக உலகம் எங்குமுள்ள கிறிஸ்தவர்களுக்கும் மற்ற மக்களுக்கும் ஒரு கேந்திர முக்கிய ஸ்தானமாக விளங்கி வந்தது. காரணம் என்னவெனில், குஜராத்திலே, கிறிஸ்தவ மக்கள் சொல்லொண்ணா இன்னல்களுக்கும், துயரங்களுக்கும் ஆளாகி வந்தார்கள் என்பதுதான் அது. குஜராத்திலே மிகவும் தாராளமாக, துணிச்சலாக கிறிஸ்தவ தேவாலயங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. இடிந்த தேவாலயங்களை அடிக்கடி நாம் செய்தி தாட்களிலே பார்த்து வந்தோம். கிறிஸ்தவர்களை துணிகரமாக கொன்றார்கள். மத மாற்றம் செய்தார்கள். அவர்களுடைய நிகழ்ச்சிகளை தடை செய்தார்கள். தேவனுடைய வேத புத்தகங்களையும் பிற கிறிஸ்தவ இலக்கியங்களையும் தீ வைத்து கொழுத்தினார்கள். குஜராத் மாநில

பாவமறியா அப்பாவி கிறிஸ்தவ மக்கள் பட்ட பாடுகளை முழு கிறிஸ்தவ உலகமும் கண்டு கண்ணீர்விட்டு கதறிக் கொண்டிருந்தது. உலகம் எங்குமுள்ள கிறிஸ்தவ மக்கள் குஜராத் மாநில கிறிஸ்தவ மக்களின் பாடுகள், உபத்திரவங்கள் நீங்க கண்ணீரோடு கடந்த 3 ஆண்டு காலமாக ஜெபித்து வந்தார்கள்.

நிலநடுக்கம் போன்ற காரியங்கள் எல்லாம் நடப்பது நூதனமான காரியம் அல்ல. ஆனால், எங்கெங்கெல்லாம் அப்பாவி கிறிஸ்தவ மக்கள் சித்திரவதை செய்யப்படுகின்றனரோ அங்கெல்லாம் இவைகள் நடைபெற்று வருவதை நமது சொந்தக்கண்களால் நாம் கண்டு வருகின்றோம். ஒரிசா மாநிலத்திலும் கிறிஸ்தவ மக்கள் பெரும் இன்னல்களுக்கு உள்ளானார்கள். மிஷனரி கிரஹாம் ஸ்டேன்சும் அவரது 2 பாவமறியாத சிறுவர்களும் உயிரோடு வைத்து எரித்து சாம்பலாக்கப் பட்டார்கள். இந்த கொடிய சூழ்நிலைகளின் மத்தியில் 1999ஆம் ஆண்டு அந்த மாநிலத்துக்கு ஏற்பட்ட புயல் பேரழிவை உலகமே பார்த்துக் கொண்டிருந்தது. இஸ்ரவேல் மக்களை 430 ஆண்டுகள் அடிமைப்படுத்தி அவர்களை கொடுமைப்படுத்தி அவர்களை அழித்து வந்த பார்வோன் அரசனுக்கும் அவனது படைகளுக்கும் ஏற்பட்ட முழுமையான அழிவையும், தேவனுடைய யூத ஜனத்தை பூண்டோடு வேர் அறுக்க அனைத்து திட்டங்களும் தீட்டி செயல்பட்ட கொடிய ஆமானுக்கும் அவனது பரிவாரத்துக்கும் ஏற்பட்ட கோர முடிவையும், 60 லட்சம் அப்பாவி யூத ஜனங்களை கொன்று குவித்து மகிழ் கொண்டாடிய சர்வாதிகாரி ஹிட்லருக்கும் அவனது நாசி படைகளுக்கும் வந்து சம்பவித்த பேரழிவையும், கிறிஸ்தவ மக்களை சித்திரவதை செய்து கொன்று அவர்களை சிறையிலிட்டு வாட்டி வதைத்து சொல்லொண்ணா இன்னல்களை அவர்களுக்கு கொடுத்து வந்த கம்மியூனிச ஆதிக்கம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்த சோவியத் யூனியனே இறுதியில் இல்லாமல் போன சரித்திரங்களை எல்லாம் முழு உலகமும் கவனித்துக் கொண்டுதான் வருகின்றது.

தேவ ஜனமே இக்கிருபையின் நாட்களில் மனந்திரும்பி அவரை அண்டிக்கொள்ளுங்கள்

இரட்சகர் இயேசு பூமியிலிருந்த நாட்களில் சீலோவாமிலே கோபுரம் இடிந்து விழுந்து 18 பேர் இறந்து போனார்கள். அந்த சோக

சம்பவத்தை குறித்து அவர் மக்களிடம் பேசுகையில் அந்த விபத்துக்கு பலியான 18 பேரும் குற்றவாளிகளோ அல்லது பாவிகளோ அல்ல என்று குறிப்பிட்ட பின்னர் "நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள்" என்று கூறினார்.

குஜராத்தின் கொடிய நிலநடுக்கம் நமக்கு ஒரு மாபெரும் எச்சரிப்பு. அங்கு பூகம்பத்தில் மடிந்து போனவர்கள் எல்லாரும் மேலே நாம் கண்ட ஆண்டவருடைய வார்த்தையின்படி குற்றவாளிகள் அல்ல என்பது தான். அவர்களின் முடிவு நமக்கு ஒரு பெரிய எச்சரிப்பு. அங்கு ஏற்பட்ட பூகம்பம் நமது பகுதிகளுக்கும் வராது என்பதற்கு என்ன நிச்சயம் உள்ளது?

சரீரத்தில் எந்த ஒரு அடியோ, இரத்தக் காயமோ கிடையாது. பூரணமான தேக சுகத்தோடு கண்கள் காணவும், காதுகள் கேட்கவும், வாய் பேசவும், கால்கள் நடக்கவும், கரங்கள் வேலை செய்யவும் கூடிய சுகநிலையில் இருக்கின்றனர். ஆனால், கட்டிட இடிபாடுகள் தங்களுக்கு முன்பாக கிடப்பதால் வெளியே வர இயலவில்லை. சுவாசிக்க போதுமான காற்று எங்கிருந்தோ தாராளமாக சென்று கொண்டிருக்கின்றது. உண்ண ஆகாரமில்லை, தாகம் தீர்க்க தண்ணீர் இல்லை, படுத்த நிலையிலோ அல்லது நின்று கொண்டிருக்கின்ற நிலையிலோ இருக்கின்றனர். எத்தனை பயங்கரமான நிலை பாருங்கள்! ஒரு கட்டிட இடிபாடுகளை மக்கள் அகற்றிக் கொண்டிருந்த வேளையில் ஒரு குரல் உள்ளே இருந்து "எனக்கு முன்னாலுள்ள அந்த இடிந்த சுவரை அகற்றிவிடுங்கள். அப்பொழுது நானாகவே வெளியே நடந்து வந்துவிடுவேன்" என்று பேசுகின்றதாம். அவன் ஒரு வாலிபன். அவன் காப்பாற்றப்பட்டான். ஓரிடத்தில் ஒரு இளம்பெண் தனது குளியலறையில் தனது பிறந்த மேனியுடன் உடம்பில் எந்த ஒரு வஸ்திரமும் இல்லாமல் ஓரிரு நாட்களாக நின்று கொண்டிருக்கின்றாள். அவள் ஸ்நானம் செய்து கொண்டிருந்த நேரத்தில் தானே நிலநடுக்கம் ஏற்பட்டுவிட்டது. தேவ தயவால் அந்தப் பெண்ணும் காப்பாற்றப் பட்டாள்.

ஆனால் காப்பாற்ற முடியாமல் போன காரணத்தால் தாங்களாகவே கொஞ்சம், கொஞ்சமாகவும், மகா சஞ்சலத்தோடும், கொடும் பரிதாபத்தோடும், துடிதுடித்து உயிரிழந்தோர் எத்தனை ஆயிரம் ஆயிரம்

பேர்? அந்த மக்களின் நிர்ப்பந்தமான நிலையில் நம்மை வைத்து ஆழ்ந்து யோசித்துப் பார்ப்போம். ஆ, எத்தனை பயங்கரமான நிலை!

அந்த மா கொடிய நிலை நமக்கு வராதபடி தேவன் நம்மை பாதுகாத்துக் கொண்டாரே! இப்பொழுது நாம் எத்தனை சந்தோசமாக இருக்கின்றோம்! தேவனுக்கு நாம் எத்தனை நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்! இரவும் பகலும் நமது உதடுகள் அன்பின் ஆண்டவருக்கு நன்றி துதி ஏறெடுத்துக்கொண்டே அல்லவா இருக்கவேண்டும்! நமது முகம் பூமியில் பட நம்மை தரைமட்டாகத் தாழ்த்தி நம் அருமை நேசருக்கு நமது இதய பூர்வமான துதி ஸ்தோத்திரங்களை ஒரு முறைதானும் திரும்பச் செலுத்துவோம்.

நம்மவரில் இதுவரை மனந்திரும்பாதோர் இனியாவது காலம் தாழ்த்தாமல் மனந்திரும்புவோம். சில வினாடிப் பொழுதுகளே நீடித்த குஜராத் மாநில பூகம்பம் ஒரு லட்சத்துக்கும் கூடுதலான மக்களை அங்கே காவு கொண்டுவிட்டதே!

இதை கருத்தோடும், கவனத்தோடும் வாசிக்கும் ஆத்துமாவே, நீ மறுபடியும் பிறந்திருக்கின்றாயா? உனது பாவங்கள் மன்னிக்கப்பட்ட பாவ மன்னிப்பின் நிச்சயம் உனக்கு உள்ளதா? யோவான் 14 : 27ல் தேவன் வாக்களித்த உலகம் தரக்கூடாத தேவ சமாதானம் உன் உள்ளத்தை மூடியுள்ளதா? உலகத்தின் மாயையான காரியங்களை பார்க்கும்போது முழுமையான வெறுப்பும், அதைக்குறித்த எந்த ஒரு விருப்பமும் உனது உள்ளத்தில் எழும்பாமல் இருக்கின்றதா? மாயையை பாராதபடி நீர் என் கண்களை விலக்கும் (சங் 119 : 37) என்று சங்கீதக்காரருடனும் மாயையை எனக்கு தூரப்படுத்தும் (நீதி 30 : 8) என்று ஆகூரோடும் சேர்ந்து உன்னால் சொல்லக்கூடுமோ? உன்னை கரம் பற்றிய கர்த்தர் உனக்காக ஆயத்தம் செய்து வைத்துள்ள பரலோக இன்பங்களையும், பாக்கியங்களையும் (யோ 14 : 2, 3) (1 கொரி 2 : 9) உனது முடிவில்லாத நித்திய பரம இளைப்பாறுதலையும், இயேசு அப்பாவோடு ஒன்றிணைந்து என்றுமுள்ள சதா காலங்களிலும் வாழப்போகும் பேரானந்த வாழ்வையும் (எபி 4 : 9, யாத் 33 : 14) அடிக்கடி எண்ணி உனக்குள் களிகூர்ந்து வருகின்றாயா? மற்ற உலக மாந்தர், பெயர் கிறிஸ்தவர்களைப் போல உன்னால் உலகத்தோடு ஒன்றரக் கலந்து அவர்களுடன் வாழ இயலாமல் ஆண்டவர் இயேசுவோடு வாழும் வாழ்வை மாத்திரமே உன் ஆத்துமா வாஞ்சித்துக் கதறி வருகின்றதா? (சங் 143 : 6, சங் 63 : 1) அப்படியானால், நீ பாக்கியவான், பாக்கியவதி.

இந்த 2001 ஆம் ஆண்டு நீங்கள் இன்னும் அதிகமாக தேவனோடு நெருங்கி ஜீவிக்க கர்த்தர் உங்களுக்கு உதவி செய்வாராக. ஒவ்வொரு நாளும் முடிந்த அளவு அதிக நேரத்தை கர்த்தாவின் பாதங்களில் ஜெபத்தில் செலவிடுங்கள். வாரந்தோறும் ஒழுங்காக உபவாசியுங்கள். புசியாமலும் குடியாமலும் உபவாசம் செய்யுங்கள். தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய பரிசுத்த வேதாகமத்தை தேவ ஆவியானவரின் ஒத்தாசையோடு அதிகமாக வாசித்து தியானியுங்கள். கர்த்தருடைய வசனங்களை மனப்பாடம் செய்து அதிகாலை கண் விழித்தவுடன் அவைகளை மனதில் சொல்லி எழும்புவது ஒரு அலாதியான பேரின்பம். நாம் மனப்பாடம் செய்த சங்கீதங்களை குறிப்பாக சங் 63, 103, 84, 95, 34 போன்ற சங்கீதங்களை அதிகாலையில் மனதில் சொல்லி எழும்பும்போது தேவனுடைய பிரசன்னம் நம் உள்ளத்தை சூழ்ந்துவிடுவதுடன் அடுத்துவரும் நமது ஜெபவேளையும் நமக்கு ஆனந்தமாக அமைகின்றது.

கிறிஸ்தவ வாழ்க்கை இந்த உலகத்தில் ஒரு ஆனந்தமான வாழ்க்கையாகும். அருமை இரட்சகரும் நாமும் இணைந்து நடத்தும் வாழ்க்கை அப்படித்தானே இருக்க முடியும்!

ஒரு மாலை நேரம், இங்கு கோத்தகிரியில் மழை தூறிக்கொண்டிருந்தது. நான் ரஸ்தாவில் குடை பிடித்து சென்று கொண்டிருந்தபோது எனக்கு எதிராக ஒரு சிறு பெண்ணும் அவளது தங்கையும் ஒரே குடை பிடித்து வந்து கொண்டிருந்தனர். அந்த பெரிய பெண் தனது தங்கையைப் பார்த்து "நேற்றுத்தான் வெள்ளிக்கிழமை வந்ததுபோல இருந்தது. அதற்குள்ளாக அடுத்த வெள்ளிக்கிழமையும் வந்துவிட்டது" என்று சொல்லிக் கொண்டே போவதை நான் கேட்டேன். ஆம், நாட்களும் காலங்களும் விரைந்து பறந்து கொண்டிருக்கின்றது. நம்மோடு வாழ்ந்த ஒரு பெருங்கூட்டம் மக்கள் இந்த உலகத்தைக்கடந்து சென்றுவிட்டனர். நாமும் முடிவில்லாத நித்தியத்தை சந்திக்க துரிதமாக நெருங்கிக் கொண்டிருக்கின்றோம். நமக்கு தேவன் கொடுத்திருக்கின்ற கிருபையின் நாட்களை மிகவும் கருத்தோடும், விழிபோடும் பாதுகாத்து நமது மீதமுள்ள வாழ்நாட்காலத்தையும் கர்த்தருக்கு மகிமையாக ஓடி முடிப்போம். அதற்கான தேவகிருபைகளை கர்த்தர் பரத்திலிருந்து உங்களுக்கும் எனக்கும் தந்தருள்வாராக.

என் பாவங்களிலிருந்து என்னை விடுவித்து நித்திய கன்மலையாம் இயேசுவில் என்னை நிறுத்திய தேவன்!

(ஒரு ஆச்சரிய அனுபவ சாட்சி)

மிகவும் வைராக்கியமான மகாராஷ்ட்ரிய வைதீக இந்து குடும்பத்தில் நான் பிறந்து வளர்ந்தேன். எனது தகப்பனார் இந்திய அரசாங்கத்தின் பணியில் இருந்ததால் அவர் அடிக்கடி பிரயாணம் பண்ணிக் கொண்டே இருந்த காரணத்தினால் நான் எனது மாமா வீட்டில் இருந்து வந்தேன். கர்நாடகா மாநிலத்திலுள்ள தார்வார் பட்டணத்துக்கு எனது தகப்பனாருக்கு வேலை மாற்றம் கிடைத்தது. அப்பொழுது நான் எனது 12 ஆம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். ஒரு கால்நடை மருத்துவராக நான் எப்படியும் ஆகிவிடவேண்டும் என்ற தணியாத ஆசை எனக்கு இருந்தது. என்னால் ஆன வரைக்கும் மிகவும் கஷ்டப்பட்டு நான் படித்து வந்தேன். இந்தியை இரண்டாம் மொழியாக எடுத்து ஒரு கத்தோலிக்க காண்வென்ட் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன். அரசின் சட்டப்படி கன்னட மொழியை நான் கற்றுத் தேர்ச்சி பெற்றாக வேண்டும். ஆனால், கன்னடம் எனது மண்டைக்கு ஏறவே மறுத்து விட்டது. அதின் காரணமாக நான் எனது அரசாங்க தேர்வில் கன்னட மொழியில் தோல்வியடைந்தேன். தோற்றுப்போன கன்னட மொழியை திரும்பவுமாக நான் எழுதினேன். அந்தத் தடவையும் நான் தோல்வியையே தழுவினேன். இறுதியாக மூன்றாம் முறை நான் அதை எழுதி அதிலும் படுமோசமாக தோற்றுப் போனேன். இந்த மூன்று தோல்விகளும் என் உள்ளத்தை குழப்பி எனது ஜீவனையே எனக்கு கசப்பாக்கிவிட்டது. ஒரு கால்நடை மருத்துவராகிவிடவேண்டும் என்ற எனது கனவுகள் எல்லாம் கல்லின் மேல் இட்ட கலமாக உடைந்து நொறுங்கி சின்னாபின்னமாக சிதறுண்டு போயிற்று.

அடுத்து இனி என்ன செய்வது என்று எனக்கு ஒன்றுமே தோன்றாமல் மிகுந்த கலக்கத்துடன் நான் இருந்தேன். எனது நேரத்தை எல்லாம் அங்கும் இங்குமாக வீணே கழித்துக் கொண்டிருந்தேன். வாழ்க்கையில் முதல் தடவையாக நான் தனித்துவிடப்பட்டதான ஏகாந்த தனிமையை கண்ணீரோடு உணர்ந்தேன். இனி எனக்கு இந்த உலகத்தில்

பாதுகாப்பான எதிர்காலம் இல்லாமல் போய்விட்டதே என்பதை நான் நினைத்தபோது உள்ளம் குமுறினேன். இதுதான் வாழ்வின் முடிவான எல்லையா? இத்துடன் நான் தொலைந்தேனா? எனக்கு இப்பொழுது என்ன நேரிடும்? இந்தக் கேள்விகள் எல்லாம் எனது உள்ளத்தில் நிழலிட்டு எனது மனதை கலங்கித் தத்தளிக்கப் பண்ணிக் கொண்டிருந்தது.

இந்த துயரம் தோய்ந்த நாட்கள் ஒன்றின் மாலை நேரம் நான் எனது சைக்கிளை ஓட்டிக்கொண்டு வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தேன். பட்டணத்தின் மணிக்கூண்டு அருகே நான் வந்தபோது ஒரு பெரிய ஜனக்கூட்டத்தை நான் கண்டேன். அந்தக்கூட்டத்தினர் ஒரு மனிதன் பேசுவதை தங்கள் உள்ளத்தை எல்லாம் பறிகொடுத்து கேட்பதை நான் கவனித்தேன். அதைப் பார்த்த நானும் அங்கு நின்று அந்த மனிதருடைய பேச்சை காதுகொடுத்துச் கேட்டேன். அவர் தத்துவம் குறித்து அப்பொழுது உபந்நியாசம் செய்து கொண்டிருந்தார். அந்த மனிதர் வேறு யாருமில்லை, இந்து மக்களால் போற்றிப் புகழப்படும் மகா பெரியவரான சின்மயானந்தா சுவாமிதான் அவர். சுவாமி ஒரு திறம்பட்ட பேச்சாளி, அறிவியல் விற்பன்னன், வேதங்களையும், பகவத் கீதையையும் வெகு அழகாக விளக்கிக்கூறும் வேதாந்தி அவர். தார்வார் பட்டணத்துக்கு வந்து ஒரு வார காலம் யோகாவிலும், தத்துவத்திலும் அவர் உபந்நியாசங்களை செய்து கொண்டிருந்தார். அவருடைய பேச்சால் நான் மிகவும் கவரப்பட்டு அந்த வார கடைசியில் அவரை எனது குரு தேவராக ஏற்றுக்கொள்ள முடிவு எடுத்தேன்.

இப்படியாக எனது வாழ்க்கை பிரயாணம் தத்துவ உலகத்தில் ஆரம்பமானது. தத்துவமானது நமக்கு அநேக காரியங்களை தருவதைப்போன்று ஆரம்பத்தில் வாக்களிப்பதாக நமக்குத் தெரியும். தத்துவம் உயர்ந்த ஆன்மீகத்துக்குரியதாகவும், அநேக நன்மைகளை நமக்குச் செய்யப் போவதாகவும் தோற்றமளிக்கும். அது மிகவும் தெளிவாகவும், துலாம்பரமாகவும் கடவுளிலிருந்தேதான் ஆரம்பிக்கும். ஆனால், நீங்கள் அந்த தத்துவ ஞானத்தில் முன்னேறி செல்ல செல்ல கடவுள் என்பவர் தேய் பிறை போல தேய்ந்து தேய்ந்து இறுதியில் முற்றுமாக மறைந்தே போய்விடுவார். தத்துவம் என்பது ஒரு மதத்தின் பிரிவு அல்ல. அது தன்னளவிலேயே ஒரு மதம் என்று நான் உங்களுக்குச் சொல்லுவேன். உலகத்தின் மாயையிலிருந்து மக்களை அது விடுவித்துவிடுவதாக தன்னளவில் டம்பம் பேசி சவால் கொடுத்து பேசும்.

நாம் வாழும் உலகம் நம்பிக்கைக்கு உரியதல்லவென்றும், அது ஒரு பொய்யான மாயத்தோற்றம் என்றும் அந்த பொய்யை கண்டுகொள்ள நமக்கு விழிப்புணர்வும், ஆசைகளை ஒழிப்பதும் அவசியம் என்றும் அப்படிச் செய்யும்போது முக்தி அல்லது விடுதலை அல்லது மோட்சம் நமக்கு கிடைக்கும் என்று அந்த தத்துவம் நமக்கு போதனை கொடுக்கும்.

என்னைப்போன்ற நம்பிக்கை இழந்த, புறக்கணிக்கப்பட்ட, தனித்த பாவிக்கு இதைவிட ஆறுதல் எது கொடுக்க இயலும்? எனவே நான் புத்தகசாலைக்கு சென்று அதிகமான நேரம் செலவிட்டு தத்துவ ஞானத்தை கற்றுக்கொள்ள தீர்மானித்து அதை படிக்கத் தொடங்கினேன். தத்துவம் என்பது அகண்ட சமுத்திரம் என்றும் உலகத்தில் அநேகவிதமான தத்துவ ஞானங்கள் உள்ளன என்பதையும் அவைகள் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்ட கருத்துக்களை கொண்டவை என்பதனையும் நான் கற்றறிந்தேன். நான் எனது இந்து வேதாந்த தத்துவத்தையும் அதற்கு அனுகூலமாக உபநிஷத்துக்களையும் பக்கபலமாக வைத்து ஆராய்ந்து வந்தேன். இதற்கிடையில் நான் அநேக வேதாந்திகளையும் தத்துவ ஞானிகளையும் சந்தித்து அவர்களுடன் சமயம் செலவிட்டு சம்பாஷித்தேன். அந்த மக்களின் உபந்நியாசங்களிலும் நான் தவறாது கலந்து கொண்டேன். 3 வருடங்களுக்கும் கூடுதலாக இந்தவிதமாக எனது காலம் கடந்து சென்றது. இந்தச் சமயத்தில் ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட சின்மயானந்தா சுவாமி அவர்களின் ஆச்சிரமம் சென்று அநேக காரியங்களை கற்றுக்கொள்ளும் பொருட்டாக நேரத்தை செலவிட்டு வந்தேன்.

நான் எவ்வளவு அதிகமாக தத்துவ ஞானம் படிக்க ஆரம்பித்தேனோ அவ்வளவுக்கு அதிகமாக எனக்குள் குழப்பமும் கலக்கமும் அடைந்தேன். அநேகவிதமான சந்தேகங்களும், கேள்விகளும் எனது இளம் நெஞ்சத்தில் பொங்கி எழுந்து கொண்டிருந்தன. எனது உள்ளத்தில் எழுந்த சந்தேகங்களையும், கேள்விகளையும் பல குருக்களிடமும், ஏன்? எனது குருநாதர் சுவாமி சின்மயானந்தா அவர்களிடமுமே நான் கேட்டேன். உதாரணமாக, ஒன்றே தேவனான சர்வவல்ல கடவுள் என்று நாம் நம்பக்கூடிய சர்வசக்திமானான கடவுளுக்கு உலகிலுள்ள அதர்மத்தை அழிக்க 10 அவதாரங்கள் ஏன் தேவைப்பட்டன? அதர்மத்தை அழிக்க அவர் ஏன் தனித்து நின்று போராடவில்லை?

அடுத்தபடியாக எனது சந்தேகங்கள் பிறவிகளைக் குறித்ததாக இருந்தது. தான் செய்யும் பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப மனிதன்

பிறவிகளை எடுத்துக்கொண்டே இருப்பான் என்று இந்து தர்மம் கூறுகின்றது. முடிவே இல்லாத பிறவிப் பெருங்கடலை நான் நினைத்தபோது கலக்கம் அடைந்தேன். இப்படி முடிவே இல்லாத பிறவிகளை எடுத்துச் சென்று கொண்டே இருப்பது பாவிகளான மானிடருக்கு மாத்திரமல்ல கடவுளர்களும் பிறவிகள் எடுக்க வேண்டும் என்ற போதனை என்னை குழப்பத்துக்குள்ளாக்கியது. இது குறித்து நான் எனது குருவான சின்மயானந்தா சுவாமி அவர்களிடமே கேட்டேன். "நீ இன்னும் வளர்ச்சியடைதல் அவசியம்" என்ற பதிலே எனக்குக் கிடைத்தது. எனது குருநாதரே எனக்கு சரியான பதிலை கூற இயலாமல் இருக்கும்போது எனது கேள்விக்கு யாரால் விடை அளிக்க முடியும்? கைவிடப்பட்டதும், புறக்கணிக்கப்பட்டதுமான ஒரு நிலைக்கு நான் தள்ளப்பட்டிருப்பதை என்னளவில் உணர்ந்தேன். அதின் காரணமாக நான் தங்கியிருந்த ஆச்சிரமத்தை விட்டு வெளியே வந்தேன். தீட்சை எடுத்து ஒரு இந்து சந்நியாசியாக மாறவேண்டும் என்ற எனது திடமான ஆசையை எனது குருவின் நிச்சயமற்ற நம்பிக்கையில்லாத பதில் இரண்டு தடவைகள் நான் சிந்தித்து செயல்படும்படியாக என்னை தூண்டினது. ஒரு புறம் விடுதலை, சுதந்திரம் குறித்து பேசும் நாம் மறுபுறம் நமது செயல்களுக்கு ஏற்றபடி பிறவிகள், மறுபிறவிகள், என்றும் முடிவே இல்லாத பிறவிப் பெருங்கடலில் கிடந்து தவிக்கின்றோம்.

இஸ்லாம் நோக்கிய எனது இரண்டாம் கட்ட பயணம்

குழப்பம் என்னில் அதிகரிக்கவே கலக்கமுற்ற மனதோடு ஆச்சிரமத்தை விட்டு கொஞ்ச காலம் விலகி இருக்க தீர்மானித்தேன். இந்த நாட்கள் ஒன்றில் நான் புத்தகசாலை சென்றேன். ஆயிரக்கணக்கான புத்தகங்கள் அடுக்கடுக்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்த அந்த புத்தகசாலை பீரோக்களை நான் கடந்து சென்றபோது தன் நிலையிலிருந்து வெளியே நீண்டு கொண்டிருந்த ஒரு புத்தகத்தை அப்படியே அதின் நிலையில் உள்ளே தள்ளி வைத்துவிட்டு முன் நோக்கிச் சென்றேன். எனினும், நான் அதின் நிலையில் தள்ளி வைத்த அந்த பெரிய புத்தகத்தை எடுத்தேன். அது இஸ்லாமிய மக்களின் புனித குரானாக இருந்தது. அதைப் புரட்டி அதின் பக்கங்களை வாசிக்க ஆரம்பித்தேன். வாசிக்க வாசிக்க அதை முழுமையாக வாசித்து விடவேண்டும் என்ற ஆர்வம் என்னில் எழவே எனது இரண்டாம் கட்ட பயணமாக புனித குரானை உட்கார்ந்து வாசிக்க தொடங்கினேன்.

நான் குரானை வாசித்தபோது என்னை மிகவும் தொட்ட ஒரு காரியம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து குரானில் இடம் பெற்றிருப்பதுதான். எனக்கே ஆச்சரியமாக இருந்தது. இது என்ன காரியம்? இந்த இயேசுவானவருக்கு குரானில் என்ன வேலை? நான் ஆச்சரியம் அடைந்தேன். புனித குரானை குறித்து நான் விளக்கமாகவும் சரித்திர சம்பந்தமாகவும் ஆராய்ந்து படித்தேன். அதின் அடிப்படையில் பரிசுத்த வேதாகமமானது புனித குரானைவிட 500 ஆண்டுகள் பழமையானது என்பதை நான் கவனித்தேன். நபிகள் நாயகத்துக்கும் அவர்களது அடியார்களுக்கும் வேதாகமம் படிப்பதற்கு கிடைத்திருந்தது. புனித குரானின் பகுதிகள் கூடுதலாகவோ குறைவாகவோ வேதாகமத்தின் பகுதிகளையே திரும்பச் சொல்லியிருப்பதையும், இஸ்லாமிய கோட்பாடுகளுக்கு உகந்தவிதத்தில் அவைகள் மாற்றி எடுத்தாளப் பட்டிருப்பதையும் நான் அறிந்தேன். புனித குரானும், நபிகள் நாயகம் அவர்களும், அவர்களது அடியார்களும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை குறித்து அதிகமாக பேசி இருக்கும்போது முகமதிய மக்கள் அவரை குறித்து ஏன் அதிகம் பேசுவதில்லை? இஸ்லாமிய போதகர்களான முல்லாக்கள் இயேசுவை குறித்து தங்கள் மக்களுக்கு ஏன் போதிப்பதில்லை?

நித்திய ஜீவனை நோக்கிய எனது இறுதி கட்ட பேரானந்த பயணம்.

இஸ்லாம் மார்க்கம், ஆண்டவர் இயேசுவை சிபாரிசு செய்யும்போது அவரை குறித்து விரிவாக எழுதப்பட்டுள்ள வேத புத்தகத்தை நாம் வாசித்து பார்த்துவிட வேண்டியதுதான் என்று எண்ணியவனாக என்னண்டை இருந்த தூசிபடிந்த ஒரு வேதாகமத்தை சுத்தம் செய்து எடுத்து எனது விரல்களால் அதின் பக்கங்களை நகர்த்தினேன். பெரிய அறிவு மண்டைக்காரனும் தத்துவ ஞானியுமான எனது கண்களில் பட்ட முதல் தேவ வசனம் "ஆதியிலே தேவன், வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" என்பதுதான், அந்த வசனம் எனக்கு உப்பு சப்பில்லாத ஒரு பத்திய உணவு போல காணப்பட்டது. அதைக்குறித்து நான் குழப்பமடையாமல் தொடர்ந்து வேத வசனங்களை கருத்தோடு வாசித்துக் கொண்டே இருந்தேன். யோவான் சுவிசேஷத்துக்கு நான் வந்தபோது அங்கே எனக்கு குழப்பங்கள் இருந்தன. தத்துவத்துக்கும், வேதாந்தத்துக்கும் அங்கே கடும் போர் இருப்பதை நான் கண்டேன். நான் ஏற்றுக்கொள்ள இயலாத அநேக காரியங்கள் அங்கு காணப்பட்டன.

யோவான் சுவிசேஷம் 8 ஆம் அதிகாரத்துக்கு நான் வந்தபோது எனது குழப்பம் உச்ச கட்ட நிலையை எட்டிப்பிடித்தது. அதின் 36 ஆம் வசனம் என்னை மிகவும் குழப்பமான நிலைமைக்குத் தள்ளிற்று. "ஆகையால், குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலை யாவீர்கள்" என்று அந்த தேவ வசனம் கூறுகின்றது.

இந்த குமாரன் யார்? எந்த அதிகாரத்தினால் அவர் இதை சொல்லுகின்றார்? எந்த விதமான விடுதலையைக் குறித்து அவர் பேசுகின்றார்? அவர் ஒரு தத்துவ மேதையா? அவர் எங்கிருந்து வந்தவர்? இப்படியாக எல்லாவிதமான கேள்விகளும் என்னை சூழ்ந்து வேதனைப்படுத்தத் தொடங்கின.

மேற்கண்ட கேள்விகளைக் குறித்து நான் பல வாரங்களாக எனக்குள்ளாக அலசி ஆராய்ந்து சிந்தனை செய்து இறுதியாக நானே என்னளவில் ஒரு நியாயத்துக்கு வந்தேன். அந்த வியூகம் எனக்கு கைக்கொடுப்பதாக இருந்தது. அந்த வியூகத்தின்படி விடுதலை பெற்ற ஒரு மனிதன்தான் மற்ற ஒருவனை விடுதலை செய்யக்கூடும் என்ற முடிவுக்கு வந்தேன். இங்கே இயேசுவை பாருங்கள். தனது சொந்த யூத ஜனங்களாலேயே புறக்கணித்து தள்ளப்பட்ட ஒரு மனிதர். புற தேசத்தவரான ரோமர்களால் சிலுவையில் அறையுண்டு இழிவும் கேவலமுமான மரணத்தை அடையும்படியாக தனது சொந்த ஜனங்களால் கையளிக்கப்பட்ட ஒருவர். இப்படிப்பட்டவர்தான் விடுதலையைக் குறித்து பேசுகின்றார்.

நான் ஆண்டவர் இயேசுவின் உபதேசங்களை மிகவும் ஆழ்ந்து வாசித்து அவரது அப்பழுக்கற்ற பரிசுத்தமான பூமிக்குரிய வாழ்க்கையை தியானித்தேன். "ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் அவளோடே விபச்சாரம் செய்தாயிற்று" (மத் 5 : 28) என்ற அவரது திருவாய் மொழி அந்த இயேசு இரட்சகர் எத்தனையானதொரு பரிசுத்த சொரூபி என்பதை பறைசாற்றி நின்றதை கவனித்தேன். "என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக் கூடும்" (யோ 8 : 46) என்று அவர் சவால் கொடுத்து கேட்ட கேள்வியை பாவமே அறியாத பரிசுத்த கர்த்தராகிய அவரைத் தவிர வேறு எவரால் கேட்க முடியும்? இந்த பரிசுத்த கர்த்தர் இயேசு ஒருவரால்தான் விடுதலை குறித்து பேச இயலும்.

இந்த இயேசு இரட்சகர் குருடர்களுக்கு பார்வையளித்தார். முடவர் நடந்தனர். ஊமையர் பேசினர். செவிடர் கேட்டனர். குஷ்ட்டரோகிகள் சுகம் பெற்றனர். பிசாசின் பிடியில் சிக்கித் தவித்தோர் இவரால் விடுவிக்கப்பட்டனர். மரித்தோரை இவர் உயிரோடு எழுப்பினார். இவர் காற்றை அடக்கி அமரப்பண்ணியவர். கடலின்மேல் நடந்தவர். வழி, சத்தியம், ஜீவன் இவரேதான். உயிர்த்தெழுதலும் ஜீவனும் இவர்தான். இருள் சூழ்ந்த பாவ உலகின் ஜீவ ஒளி இவர் ஒருவரே தான். பாவ மாந்தர்க்காய் தமது ஜீவனைக் கொடுத்து அவர்களை மீட்டு இரட்சித்த தேவ ஆட்டுக்குட்டி இவர் ஒருவர் மாத்திரம்தான். உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நம்மோடிருப்பவர் இந்த அன்பு கர்த்தர் இயேசு இரட்சகர் ஒருவரேதான். இந்த இயேசு பெருமான் ஒருவரால்தான் விடுதலை குறித்து பேசக்கூடும்!

எனது குருவும் மற்ற தத்துவ ஞானிகளும் தங்கள் உதடுகளால் பேசும் விடுதலையை இந்த இயேசுவால் மாத்திரமே தரக்கூடும். எனக்கு தத்துவம் கற்றுக்கொடுத்த ஞானிகள் வெளிப்புற துறவறத்தால் உட்புற தூய்மையை அடையலாம் என்று போதித்தார்கள். ஆனால், இவரோ முதலாவது இதயக்கதவை தட்டி (வெளி 3 : 20) உட்புறத்தை தொட்டு நிற்பவர். கர்த்தராகிய இயேசு இரட்சகர் ஒருவரால்தான் மனிதனை அவனது பாவத்தின் பிடியிலிருந்தும் அதின் சாபங்களிலிருந்தும் விடுதலையாக்க முடியும். பாவத்தின் மேல் ஜெயக்கொடி நாட்டி மரணத்தின் கூரை ஒடித்தவர் இயேசு ஒருவரே. உயிர்த்தெழுந்த கர்த்தரின் காலியான கல்லறையை இன்றும் நாம் பாலஸ்தீனா தேசத்தில் காணலாம்.

இந்த இயேசு இரட்சகர் தான் சொன்னதை எல்லாம் அப்படியே செயலில் நிறைவேற்றுகின்றார். ஆனால், நான் பின் தொடர்ந்து செல்லும் ஒரு கூட்டம் பொய் தோற்றக்காரர் கள் தாங்கள் பேசுவதே இன்னது என்று தங்களுக்கே தெரியாத விதத்தில் பேசுகின்றனர். இவர்களில் ஒருவர் கூட தங்கள் அளவில் சுயாதீன சுதந்திர மனிதர் கிடையாது. எவரும் விடுவிக்கப்படவில்லை. இவர்கள் அனைவருமே தங்களுடைய விடுதலைப் போராட்டத்தில் நாள்தோறும் தங்களை விடுவிக்க போராடி முயற்சித்துக் கொண்டிருக்கும் அதே நேரம் தங்களது வேதாந்த தத்துவத்தின் மூலம் மற்றவர்களுக்கு விடுதலை உபதேசம் கொடுப்பவர்களாக இருக்கின்றனர். நான் என்னை ஒரு முட்டாளாக உணர்ந்தேன். எனினும், ஆண்டவர் இயேசு அறிவித்த விடுதலையின் போதனையை முழுமையாக அங்கீகரித்து ஏற்றுக்கொள்ள தயக்கம் என்னில் காணப்படவேதான் செய்தது.

ஆண்டவர் அறிவித்த சத்தியத்தின் விடுதலையை என்னளவில் அறிந்து அனுபவிக்க எனது வேதாகமத்தை நான் திரும்பத் திரும்ப வாசித்து தியானித்தேன். இது விஷயத்தில் எனக்கு வழிகாட்டவோ, அல்லது செவ்வையான பாதையில் என்னை நடத்தவோ, அல்லது காரியங்களை எப்படி எப்படி செய்ய வேண்டும் என்று எனக்கு ஆலோசனை கூறவோ எந்த ஒரு கிறிஸ்தவ நண்பரும் எனக்கு கிடையாது. நான் எனது சொந்த வழியிலேயே காரியங்களை அனுமானித்து எனது அருமை இரட்சகர் இயேசு எங்கிருந்தாலும் என்னை நோக்கி பார்த்து என்னை எனது பாவங்களிலிருந்து விடுவிப்பார் என்று எனக்குள் உறுதியாக நம்பிக்கொண்டேன். ஆண்டவர் இயேசு என்னை விடுவிக்க நான் அவரை நோக்கி கெஞ்சினேன்.

எனது கெஞ்சுதல்களுக்கு தேவன் செவி கொடுத்தார். எதிர்பாராதவிதமான ஒரு பெரிய அற்புத மாற்றம் திடீரென எனது வாழ்வில் நிகழாதபோதிலும் எனது ஜென்ம சுபாவமும் எனது நடத்தைகளும், எனது வாழ்வின் பெருமையான வாழ்க்கை முறைகளும், எனது சிந்தைகளும், எண்ணங்களும் தலைகீழாக மாற்றமடைந்து வருவதை நான் கவனித்தேன். எனது பழைய பாவ சுபாவங்கள் எல்லாம் மாறி தேவனுடைய பரிசுத்த சாயல் என்னில் ஒளி வீசி பிரகாசிக்கத் தொடங்கியது. எனது பழைய பாவ மனுஷன் என்னிலிருந்து விடைபெற்றுச் சென்று புதிய மனுஷனான இயேசு இரட்சகர் என்னில் வந்து வாசம் செய்தார் (கலா 2 : 20) புதிய மனுஷனான இயேசு இரட்சகரே என்னில் கிரியை நடப்பித்துக் கொண்டு வருவதை நான் பிரமிப்புடன் கவனித்தேன். தேவனுடைய வேதபுத்தகம் எனது வாழ்வின் களிகூருதலாயிற்று. மணிக்கு பின் மணியாக, நாளுக்குப் பின் நாளாக, மாதத்திற்கு பின் மாதமாக கர்த்தருடைய வேதத்தை நான் வாசிக்க வாசிக்க எனக்கு குழப்பங்களை உண்டுபண்ணிக்கொண்டிருந்த சந்தேகங்கள் எல்லாம் பகலவனைக் கண்ட பனிபோல விலகி ஓட்டம் பிடித்தன. 10 மாத காலம் உலகப்பிரகாரமான எந்த ஒரு மனித தொடர்பும் இல்லாமல் நானும் தேவன் அருளிய வேதமுமாக இருந்தோம். பூரணமான மனத்தெளிவும், உலகம் தரக்கூடாததும், உலகம் எடுத்துக் கொள்ளக் கூடாததுமான தேவ சமாதான பிரளயம் என் இருதயத்தை ஆட்கொண்டது. இயேசு இரட்சகர் மேல் நான் காதல் கொண்டேன். அவருடைய நேசம் என்னும் கொடி என் மேல் பட்டொளி வீசிப்பறந்தது. அல்லேலூயா.

ஞானக்கன்மலையாம் தேவன் எனது சொந்த இரட்சகரானதும், நான் மூன்று முறை தோல்வியடைந்த கன்னட மொழியை மீண்டும் எழுதி சிறப்பான தேர்ச்சி பெற்றேன். தேவன் எனக்கு விசேஷித்த ஞானத்தை கொடுத்தமையால் எலக்ட்ரானிக்ஸ் பட்டப்படிப்பை முடித்து அரசாங்க பணிக்கும் நான் தேர்வு செய்யப்பட்டேன். அரசாங்கத்தில் தேவன் எனக்கு பெரிய உத்தியோகம் அளித்தார். அந்த அரசாங்க பணியில் 5 ஆண்டு காலம் இருந்தேன். எனது பூமிக்குரிய வாழ்வே என்றுமாக அஸ்தமித்துவிட்டது என்று நான் மூன்றாம் தடவை கன்னட மொழி தேர்வில் தோல்வியடைந்த போது எண்ணியதுண்டு. ஆனால், ஆண்டவர் இயேசு எனது வாழ்வில் பிரவேசித்தபோது எனது வாழ்க்கை செழிப்படையத் தொடங்கியது. "வனாந்திரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தைப் போல செழிக்கும். அது மிகுதியாய் செழித்துப் பூரித்து ஆனந்தக்களிப்புடன் பாடும் " *(ஏசாயா 35 : 1, 2)* என்றல்லவா தேவனுடைய வார்த்தை கூறுகின்றது.

எனது தாழ்வில் என்னை அன்பாக நினைவுகூர்ந்து எனது பாவமற என்னைத் தமது திரு இரத்தத்தால் கழுவி சுத்திகரித்து, தமது வசனமாகிய சத்தியத்தால் எனக்கு மீட்பையும், விடுதலையையும் நல்கி எனது பாதங்களை நித்திய கன்மலையின் மேல் நிலைநிறுத்தி என்னை தமது பரமராஜ்யத்துக்கும் தம்மோடு நித்திய நித்திய காலமாக தமது மோட்ச இன்ப வீட்டில் வாழும் பாக்கியத்தையும் சிலாக்கியத்தையும் அருளிச்செய்த ஆண்டவர் இயேசுவுக்கு நன்றி கடனாக எனது உயரிய உலகப்பிரகாரமான அரசாங்க வேலையை ராஜிநாமா செய்துவிட்டு எனது நேசரின் கல்வாரி அன்பை எல்லாருக்கும் கூறி அறிவிக்கும் பணியில் ஒரு கிறிஸ்தவ ஸ்தாபனத்துடன் இணைந்து தற்போது பணிபுரிந்து வருகின்றேன்.

P. Naresh

(மொழி பெயர்ப்பு)

Courtesy :- India Focus
St. Thomas Town,
Bangalore - 560 084

பரதேசியின் மோட்ச பிரயாணம் - 20

அப்பொழுது கிறிஸ்தியான் தன் தோழனோடு சொல்லுகிறான் : ஒரு நல்ல மனுஷனுக்கு இந்தத் திசையில் நடந்ததாக நான் கேள்விப்பட்டிருக்கிற செய்தி என் ஞாபகத்துக்கு வருகிறது. அந்த நல்ல மனுஷனுக்கு **அற்பவிசுவாசி** என்று பெயர். (அற்பவிசுவாசி என்பது விசுவாசத்திலே நடந்தாலும் உண்மையாய் நிலைத்திருக்கிற கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது) அற்பவிசுவாசி குணத்துக்கு வெகு கெட்டிக்காரன். அவன் **யதார்த்தபுரியிலே** குடியிருந்தான். அவன் சமாச்சாரத்தை சொல்லுகிறேன் கேளும். இந்தத் தெருவின் முகப்பிலே விசாலவழி வாசலிலிருந்து வருகிற ஒரு சிறு வழி இருக்கிறது. அதற்கு **இறந்தோர்சந்து** என்று பேர். (இறந்தோர் சந்து என்பது பெயர் கிறிஸ்தவர்களில் அநேகர் அழிவுக்குப் போகும் விஸ்தாரமான பாதையில் வெளியரங்கமாய்ப் பிரவேசித்து நடப்பதை விளக்குகிறது.) இறந்தோர்சந்துவில் நடக்கிற படுகொலைகளைத் தொட்டு அதற்கு இந்தப் பேர் வழங்கப்படுகிறது. இந்த அற்பவிசுவாசி என்பவன் இப்படி நம்மைப்போல் மோட்ச பிரயாணம் போகையில், அந்தத் தெருவில் சற்று உட்கார்ந்து **தூங்கினான்.** (அற்பவிசுவாசி தூங்குவது என்பது : ஒருவன் தான் பற்றிக் கொண்டிருக்கும் கிறிஸ்துமார்க்க பக்திவிநயங்களை அடக்கி, மறைத்துக் கொண்டு, அதன் வழிபாடுகளில் முயற்சியோடு நடவாமல் இருக்கிறதை குறிக்கிறது) அற்பவிசுவாசி தூங்கும் சமயத்தில் விசால வழி வாசலில் இருந்து புறப்பட்ட மூன்று கள்ளர் இறந்தோர்சந்து வழியாய் வந்தார்கள். அவர்களுக்கு **அதைரியன், சந்தேகி, பாவப்பழி** என்ற பேர் வழங்கப்பட்டது. இவர்கள் மூவரும் அண்ணன் தம்பிமார்தான். (மூன்று கள்ளர் என்பது, மனிதர் பாவத்துக்குச் சாயும்போது அவர்கள் மனதை வேதனைப்படுத்தும் பயங்கரங்களைக் குறிக்கிறது.) அற்பவிசுவாசி உட்கார்ந்திருக்கிறதை மூன்று கள்ளரும் தூரத்திலே கண்டு, கும்மாளம் போட்டுக்கொண்டு வெகு வேகமாய் வந்தார்கள். அப்போதுதான் அந்த நல்ல மனுஷன் தூங்கிவிழித்து, பிரயாணம் போகும்படி ஆயத்தப்பட்டான். அவர்கள் வந்த உடனே பெருஞ்சத்தம் போட்டு நில்லடா என்றார்கள். உடனே அவன் முகம் வெளுத்துப்போயிற்று. எதிர்த்துச் சண்டை போடவோ இல்லை ஒளித்து ஓடவோ அவனால் கூடாமற் போயிற்று. அப்போது அதைரியன் என்பவன், உன் பணப்பையை அவிழ்த்து வை

என்றான். அற்பவிசுவாசி தனது பணத்தை எப்படி இழந்து போகிறது என்று சற்று பின்வாங்கினான். உடனே, சந்தேகி என்ற திருடன் அவன் மடியில் கைப்போட்டு, வெள்ளி நாணயங்கள் நிறைந்திருந்த ஒரு பையைப் பிடுங்கி எடுத்தான். உடனே அவன் கூவோ கூ! கள்ளன், கூவோ கூ! கள்ளன், கள்ளன் என்று கத்தினான். அச்சமயத்தில் பாவப்பழி என்ற திருடன் தன் கையில் இருந்த பெரிய தடியினால் அவன் மண்டையில் அடித்தான். அந்த பலத்த அடியை வாங்கிய அற்பவிசுவாசி அப்பாடா என்று கீழே விழுந்தான். அவனைப் பார்த்தவர்கள் எல்லாரும் இவன் ஏது பிழைப்பது என்று சொல்லத்தக்கதாக அவ்வளவு இரத்தம் அவன் மண்டையிலிருந்து வடிந்தது. இம்மட்டும் அந்த மூன்று கள்ளரும் அவன் கிட்டவே நின்றார்கள். கடைசியாக யாரோ பிரயாணிகள் வருகிற அரவங்கேட்டது. (அற்பவிசுவாசி தனது பணப்பையை பறிகொடுத்தது என்பது இவ்வுலகில் சுவிசேஷத்தினால் கிடைக்கிற ஆறுதல்களை இழந்துபோகிறதைக் காட்டுகிறது) பிரயாணிகள் வருகிற அரவங்கேட்டபோது அந்த மூன்று கள்ளரும் **திடநம்பிக்கை** ஊரில் வசிக்கும் **அருளாதிக்கன்** ஒருவேளை வந்தாலும் வருவார் என்று பயந்து, இவன் எப்படியேனும் நாசமாய் போகட்டும், நாம் ஓடிவிடுவோம் என்று சொல்லிக்கொண்டு ஓடிப்போய்விட்டார்கள். (அருளாதிக்கன் : இது சோதனையினாலே விழுந்து போனவர்களைத் தூக்கி எடுத்து, தேவனுடைய இரட்சண்ய இரக்கத்தின் மேல் நம்பிக்கை வைக்கும்படி உற்சாகப்படுத்துகிற உண்மையுள்ள கிறிஸ்தவன் ஒருவனைக் குறிக்கிறது) கள்ளர் மூவரும் போய் கொஞ்ச நேரத்திற்குள்ளாக அற்ப விசுவாசிக்கு புத்தி தெளிந்து மெதுவாய் எழுந்திருந்து தன் வழியாய் போனான். இதுதான் நான் கேள்விப்பட்ட சமாச்சாரம் என்று கிறிஸ்தியான் சொன்னான்.

திடநம்பிக்கை :- அவனுக்குள்ள பொருள் எல்லாவற்றையும் அடியோடே பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்களோ?

கிறிஸ்தியான் :- அவனுடைய **நகைநட்டுகள்** இருந்த இடத்தை அவர்கள் கண்டுகொள்ளவில்லை. ஆதலால் அவைகள் இன்னும் அவன் வசத்தில் இருக்கின்றன. ஆனால் நான் முன் சொன்னபடி வழிச்செலவுப் பணம் எல்லாம் கள்ளர் கைக்குப் பறிமுதலாய்ப் போனதையிட்டு அவனுக்கு ஆறாத்துயரம் இருந்தது. நகைகள் எல்லாம் தப்பிக்கொண்டது, அதோடு கொஞ்சம் முதலும் இருந்தது. அது அவன் பிரயாணம்

முடியுமட்டும் செலவுக்குப்பற்றாது. அதனாலே (நான் கேள்விப்பட்ட செய்தி நிஜமானால்) அவன் தன் நகைகளை விற்றுப்போடக் கூடாதிருந்தபடியால் தன் ஜீவனைப் பிழைப்பூட்டும்படி வழி நெடுகப் பிச்சைவாங்கிச் சாப்பிட்டுக்கொண்டு போனானாம். எத்தனைதான் பிச்சை எடுத்தால் என்ன, அவன் அடிக்கடி வயிறு காய்ந்துதான் போயிருப்பான். (அற்ப விசுவாசி தன் நகையை விற்கக் கூடாதிருந்தது. அவன் இவ்வுலக இன்பங்களின் நிமித்தம் தேவபக்தியை விட்டு விடாததை குறிக்கிறது)

திடநம்பிக்கை :- அவனை மோட்ச வாசலுக்குச் சேர்க்கிறதற்கு உதவியான பத்திரம் கள்ளர் கையில் அகப்படாதது பெரிய அதிசயம் அல்லவா?

கிறி :- அது அதிசயம் என்று ஒரு தரமா சொல்லவேண்டும்? அந்த தஸ்தாவேஜு கள்ளர் கையில் அகப்படாதது, அவன் அதை மறைக்கும்படி செய்த சாமர்த்தியத்தினால் என்று அதை சொல்லல் ஆகாது. கள்ளர் வந்து அவனைக் கொள்ளையிட விழுந்தபோது அவன் விதி மறந்து போனான். பத்திரத்தை மறைக்க வேண்டுமே என்ற யூகமாவது, வல்லமையாவது அவனுக்கு இல்லாமற்போயிற்று. ஆனாலும், எப்படியோ தேவ செயலாய்த்தான் அது அவர்கள் கையில் அகப்படவில்லை என்று சொல்லவேண்டியது.

திடநம்பி :- எப்படியும் அந்த நகைகள் கள்ளர் கையில் அகப்படாதது அவனுக்குப் பெரிய ஆறுதலாய் இருக்கவேண்டியது அல்லவா?

கிறி :- அவன் அந்த நகைகளைப் பிரயோகிக்கவேண்டியபடி பிரயோகித்திருந்தானாகில் அது ஆறுதலாகத்தான் இருந்திருக்கும். ஆனால், இந்தச் சமாச்சாரத்தை எனக்குச் சொன்னவர்களால் அவன் துவக்கத்தில் பணத்தைப் பறிகொடுத்த பயங்கரத்தினாலே, மீதியான வழியில் அவன் தன் நகைகளை அவ்வளவாய்ப் பிரயோகிக்க நாடவில்லை என்று கேள்விப்பட்டேன். உள்ளபடி தன் பிரயாணத்தின் வெகுதூரம் மட்டும் அவன் தன் நகைகளை மறந்தே போய்விட்டானாம். எப்போதாவது நகையைப் பற்றிய நினைவு வந்தால், அதோடு பணம் பறிபோன நினைவும் வந்து அவன் மனதை வாதிக்கிறதாய், பண நினைவு நகை நினைவைப் பறந்தோடிப் போகச் செய்யுமாம்.

திடநம்பி : ஐயோ எத்தனை பரிதாபம்! இது அவன் மனதுக்கு துயரமாய் இருக்கும் எனபதற்கு ஐயம் இல்லை.

கிறி :- துயரமா? ஆறாத்துயரம் என்று சொல்லவேண்டியது. நம்மில் யாருக்காவது இப்படி நேரிட்டு, நம்முடைய பணமும் போய், படுகாயமும் அடைந்து, அந்நிய இடத்தில் இவ்வளவு நஷ்டமும் நேரிட்டால் நமக்குத் துயரம் இருக்கமாட்டாதா? அந்த ஏழை மனுஷன் விசனத்தினாலே சாகாமல் இருந்தது பெரிய அதிசயம்தான். அவன் தன் மீதியான வழிமுழுவதும் நிர்ப்பந்தப்பட்டுத் துக்கத்தோடு அலைந்து திரிந்தான் என்றே கேள்விப்பட்டேன். போகப்போக வழியில் சந்தித்த ஆட்களிடத்திலும் வந்து கூடின மனிதரிடத்திலும், இப்படி இன்ன இடத்தில் இன்னாரால் அடியும் மிதியும் பட்டு, மடியில் இருந்த பணத்தையும் பறிகொடுத்து, மண்டையில் இந்தக் காயத்தை வாங்கிக்கொண்டேன், நான் பிழைத்ததே மறு பிழைப்பு என்று சொல்லுவானாம்.

திடநம்பி :- இப்படி எல்லாம் அவதிப்பட்ட சமயத்தில் அவன் தன் நகைகளில் இரண்டொன்றை விற்றாவது, அடைமானம் வைத்தாவது வழிப்பிரயாணத்தில் செலவுசெய்து தனக்கு சௌகரியத்தை தேடாமல் மதிமயங்கிப் போனது என்ன அதிசயம்?

கிறி :- நீ என்ன? இன்னும் முட்டைக்குள் இருக்கிற குருவிக்குஞ்சைப்போல பேசுகிறாயே! என்னத்துக்காக அதை அடைமானம் வைப்பான்? அல்லது அதை யாருக்கு விற்பான்? அவன் அடிபட்ட தேசத்திலுள்ள ஒருவனும் இவனுடைய நகைகளை ஒரு பைசா காசுக்கும் மதிக்க மாட்டானே. மேலும் அந்தவிதமாய் தனக்குச் சகாயத்தை சம்பாதிக்க அவன் விரும்பவுமில்லை. அதுவும் அல்லாமல் அவனுடைய நகைநட்டுகள் மோட்ச வாசலண்டை அவனிடத்தில் இல்லாவிட்டால், அவ்விடத்து சுதந்திரத்துக்குப் புறம்பாக்கப்படுவான் என்பது அவனுக்கு நன்றாய்த் தெரிந்திருந்தது. பதினாயிரம் திருடர் கூடி அவனைக் கொள்ளையிட்டு நஷடப்படுத்தினாலும் என்ன, மோட்ச சுதந்திரத்தை இழந்துபோவது அல்லவா பெரிய கஷ்டமாயிருக்கும்.

திடநம்பி :- ஏது சகோதரனே! இவ்வளவு கடினமாய் பேசுகிறீர்? ஏசா தன் சேஷ்டபுத்திரபாகத்தை எவ்வளவுக்கு விற்றான்? கொஞ்சம் பயற்றம் கூழுக்குத்தானே. அந்த சேஷ்டபுத்திரபாகம் அவனுடைய விசேஷித்த

பூஷணமாய் இருந்தது (எபி 12 : 6). அவன் அதையே விற்றானானால், அற்பவிசுவாசி ஏன் அவனைப்போல் செய்யக்கூடாது?

கிறி : - ஏசா தன் சேஷ்ட புத்திரபாகத்தை விற்றது நிஜம்தான். அவனைப்போல வேறே அநேகரும் விற்கிறார்கள் என்பதும் மெய்தான். அப்படிச் செய்வதால் அவர்கள் அந்தக் கேடுகாலனை போல் தங்களுக்கு அகப்படவேண்டிய பிரதான ஆசீர்வாதத்திலிருந்து தங்களை விலக்கிக்கொள்ளுகிறார்கள். ஆனால், நீ ஏசாவையும், அற்ப விசுவாசியையும், அவன் சொத்தையும், இவன் சொத்தையும் வித்தியாசப்படுத்தி யோசித்துப் பார்க்க வேண்டும். ஏசாவின் சேஷ்ட புத்திர பாகம் ஒரு முன்னடையாளமாய் மாத்திரம் இருந்தது. அற்பவிசுவாசியின் ஆபரணங்களோ அப்படி அல்ல. ஏசாவின் வயிறே அவனுக்கு தேவனாக இருந்தது. அற்பவிசுவாசியின் தேவன் அப்படி அல்ல. ஏசாவின் ஆவல் அவன் மாமிசப்பசியில் இருந்தது. அற்ப விசுவாசியின் ஆவல் அப்படி அல்ல. மேலும் ஏசா தன் இச்சை நிறைவேறுகிறது எப்படி என்று கவனித்தானே அல்லாமல், அதற்கப்பால் ஒன்றையும் கவனிக்கவில்லை. "இதோ நான் சாகப்போகிறேனே, இந்த சேஷ்ட புத்திரபாகம் எனக்கு என்னத்துக்கு" (எபி 12 : 6) என்று சொன்னான். அற்பவிசுவாசியின் காரியம் அப்படி அல்ல. அவனுக்கு அகப்பட்ட விசுவாச அளவு அற்பமாய் மாத்திரம் இருந்தபோதிலும், அந்த அற்ப விசுவாசத்தைக் கொண்டு தன் வரம்பு தப்பி நடவாமல் தன்னைக்காத்துக் கொண்டு, ஏசா தன் சேஷ்ட புத்திர பாகத்தை விற்றது போல இவன் தன் நகைகளை விற்றுப்போடாமல், அவைகள் விலைமதிக்கப்படாதவைகள் என்று எண்ணி இருக்கின்றான். ஏசாவுக்கு விசுவாசம் இருந்தது என்று நீ எந்த இடத்திலாவது வாசிக்கிறதில்லை. அவனுக்கு ஒரு அணுவளவு விசுவாசம் முதலாய் இருந்ததில்லை. ஆதலால், எதிர்த்து நிற்கத்தக்கதான விசுவாசம் இல்லாமல், மாமிச இச்சையினால் ஆளப்படுகிற மனிதன், தன் சேஷ்டபுத்திரபாகத்தையும், தன்னுடைய ஆத்துமாவையும், மற்றெல்லாவற்றையும் கூட நரகத்தின் பிசாசுக்கு விற்றுப் போட்டானானால் அது அதிசயம் அல்லவே. மதவெறி கொண்டு ஓடும் கழுதையைத் திருப்பக்கூடாதது போல, இப்படிக்கொத்தவனுடைய மனதையும் திருப்பக்கூடாது. அவர்கள் மனம் அவர்கள் இச்சைகளின் பேரில் ஓடுகையில், அதனால் எவ்வளவு நஷ்டமானாலும் சரி அதை கவனியாமல், தங்கள் இச்சை நிறைவேற வேண்டும் என்றே கவலையாய் இருப்பார்கள். ஆனால், அற்பவிசுவாசியின் காரியம் முற்றிலும் வேறாக

இருந்தது. அவன் மனம் தெய்வீக விசயங்களின் பேரில் இருந்தது. அவன் ஜீவனார்த்தம் உன்னதத்திலிருந்து வரும் ஆவிக்குரிய விஷயங்களின் மேல் இருந்தது. ஆகையால் இப்படிப்பட்ட குணங்கொண்ட அவன், தன் ஆபரணங்களை விலைக்கு வாங்கிக்கொள்ளத்தக்க ஒருவன் அவ்விடத்தில் இருந்தாலும், என்ன லாபத்துக்காக தன் நகைகளை விற்பான்? தன் மனதை வீணானவைகளிலே நிரப்பவா? ஒரு மனிதன் தன் வயிற்றை நிரப்பும்படி வைக்கோலுக்குப் பணம் கொடுப்பானா? அல்லது ஒரு மணிப்புறாவை, காகத்தைப் போல் பிணம் பிடுங்கித்தின்ன உன்னால் பழக்கப்படுத்தக் கூடுமா? விசுவாசமில்லாதவர்கள் மாமிச இச்சையினிமித்தம் தங்களுக்குண்டானதை மாற்றிக்கொண்டு , அல்லது அடைமானம் வைத்து, அல்லது விற்று, தங்களையும் சமூலமாய் விலைப்படுத்தி விட்டாலும், விசுவாசமுள்ளவர்கள் இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் தங்களுக்கு அணுவளவு மாத்திரம் இருந்தபோதிலும் இப்படிச் செய்யமாட்டார்கள். இதைப்பற்றித்தான் என் சகோதரனே, உன்னிடத்தில் தப்பிதம் இருக்கிறது.

திடநம்பி :- அது சரி என்று ஒத்துக்கொள்ளுகிறேன். என்றாலும், உம்முடைய கடுமையான வார்த்தைகள் என்னைக் கொஞ்சம் குறையக் கோபதாபங் கொள்ளச் செய்துவிட்டது.

கிறி :- அப்படிக் கோபதாபப்படுவானேன்? நான் உம்மை முட்டைத்தோடோடு நகர்ந்து போகிற சில துடுக்கான குருவிக் குஞ்சுகளுக்கு ஒப்பிட்டதுண்டு. அதை மனதில் வைக்கவேண்டாம். நாம் சம்பாஷிக்கிற பொருளின் ஆழ்ந்த கருத்தைப்பிடித்துக்கொண்டு ஆராய்ந்து பார்த்தால் நம் இருவருக்கும் இணக்கமாய் இருக்கும்.

திடநம்பி :- அந்த மூன்று திருட்டுப்பயல்களும் என் மனதுக்குத் தோன்றுகிறபடி தெம்மாடிகளாக்கும். மற்றபடி. ஆள்வருகிற அரவங்கேட்டவுடனே ஓட்டம் பிடிப்பார்கள் என்று நீர் நினைக்கிறீரா? அற்பவிசுவாசி ஏன் வீரத்துவம் காட்டவில்லை. ஒரு கை பார்த்துக் கொண்டு அப்புறம் முடியாதானால் தாழ்ந்துகொள்ள வேண்டியதிருந்தது என்று எனக்குத் தோன்றுகிறது.

கிறி :- அவர் தெம்மாடிதான் என்று பலரும் சொல்லக் கேட்டிருக்கின்றேன். ஆனால் உபத்திரவகாலத்தில் அவர்கள் தெம்மாடிகள் தான் என்று கண்டுபிடித்தவர்கள் மெத்தக் கொஞ்சபேர்

தான். அற்பவிசுவாசி வீரத்துவம் காட்டுவதைப்பற்றிச் சொன்னால், அவனுக்கு அப்படிப்பட்ட தைரியமே இல்லை. என் சகோதரரே, நீர் சொல்லுகிறதைப்பார்த்தால், இப்படிப்பட்ட சங்கடம் உமக்கு நேரிட்டால் நீர் ஒரு கை பார்த்து, பலிக்கவில்லையானால் அவர்கள் பாதத்தில் படுத்துக் கொள்வீர் போல் இருக்கிறது. அவர்கள் இப்போது நமக்குத் தூரத்தில் இருக்கிறபடியினாலே நீர் இந்தத் தைரியம் பேசுகிறீர். இப்போதே கிட்டவந்து அற்பவிசுவாசிக்குக் செய்தபடியே உமக்கும் செய்தால் இந்த நினைவெல்லாம் பறந்து வேறு எண்ணமாகிவிடும்.

மேலும் நீர் கவனித்துக் கொள்ள வேண்டியது என்னவென்றால், அவர்கள் வழிப்பறிகாரர், அடியற்ற பாதாளத்தரசனுடைய ஏவலாட்கள். அவசரம் நேரிட்டால் அவனே அவர்களுக்கு ஒத்தாசையாக வந்து சேருவான். அவன் சத்தம் சிங்கக் கெர்ச்சிப்புக்கு சமமானது (1 பேதுரு 5 : 8) இந்த அற்பவிசுவாசி பட்டபாடெல்லாம் நானும் ஒருதரம் அவர்களிடத்தில் பட்டேன்.

அப்போது என் பிராணனே போய்விட்டது என்று எண்ணிக்கொண்டேன். இந்த மூன்று துஷ்டரும் என்மேல் வந்து விழுந்தார்கள். நானோ ஒரு கிறிஸ்தவனைப்போல எதிர்த்து நிற்க ஆரம்பித்தேன். உடனே அவர்கள் ஒரு முழக்கமிட்டுக்கூப்பிடவே அவர்களின் அதிபதி வந்துவிட்டான். அப்போது என் நிலைமை "ஒரு காசுக்கு உயிரையும் விட்டானாம்" என்ற பழமொழிக்கு ஏற்றாற்போலவே இருந்தது. ஆனால் என் ஜீவன் கர்த்தருக்கென்று தப்பும்படியாக ஒரு தலைச்சீரா எனக்கு இருந்தது. எத்தனை காபந்து எனக்கு இருந்தாலும் என்ன? நான் அவர்களிடத்தில் என் புருஷ வீரத்துவத்தைக் காட்டுவது வெகு கஷ்டத்தில் இருந்தது. அ படிப்பட்ட போரில் இருந்தவனுக்கு அது தெரியுமே தவிர மற்றொரு மனுஷனும் அந்தச் சங்கடங்களை அறியமாட்டான்.

திடநம்பி :- எப்படியும் அருளாதிக்கன் வந்தாலும் வருவார் என்று அவர்கள் பயந்து ஓடிவிட்டார்கள் அல்லவா?

கிறி :- அது நிஜம்தான், அவர்களும் அவர்கள் எஜமானும்கூட அருளாதிக்கன் வந்தவுடனே அடிக்கடி ஓடியிருக்கிறார்கள். அது அதிசயம் அல்ல, அவர் ராஜாவின் சேனைத்தலைவன். அற்ப விசுவாசிக்கும், ராஜாவின் சேனைத்தலைவனுக்கும் நீ சற்று வித்தியாசம் பண்ணிக்

கொள்ளுவாய்' என்று நம்புகிறேன். அரசனுடைய குடிகள் எல்லாம் அவனுடைய சேனாதிபதி ஆவார்களா? யுத்தப்பரீட்ஷையில் அவர்கள் சேனாதிபதியைப்போல போர்புரியவும் கூடாது. தாவீது கோலியாத்தை மடங்கடித்ததுபோல் ஒரு குழந்தையும் மடங்கடித்துவிடலாம் என்று சொல்வது சரியா? சிலர் பலவான்களாய் இருக்கிறார்கள். சிலர் பலவீனராய் இருக்கிறார்கள். சிலருக்கு அதிக அளவான விசுவாசம் இருக்கலாம் சிலருக்கு அணுவளவான விசுவாசம் இருக்கலாம். இந்த மனிதன் பலவீனரோடு சேர்ந்தவன். ஆகையினாலேதான் தோற்றுப்போனான்.

திடநம்பி : அவர்களை உதைக்கும்படி அருளாதிக்கன் வந்திருந்தாரானால் நன்றாய் இருந்திருக்கும்.

கிறி :- அவர் வந்திருந்தாலும் மடிநிறைய வாங்கிக்கொண்டுதான் போயிருப்பார். ஏனென்றால் அருளாதிக்கன் ஆயுதப்பரீட்ஷையில் சமர்த்தராயிருந்து பட்டய நுனியின் தூரத்துக்குள்ளே அவர்கள் நெருங்காதபடி காபந்துபண்ணிக்கொள்ளுமட்டும் அவர் காரியம் ஜெயமாய்த்தான் இருக்கும். ஆனால் அதைரியனாவது, சந்தேகியாவது, பாவப்பழியாவது கைக்குக்கையாய் நெருங்கிவிட்டாலோ, அப்போது அவர் காரியமும் அப்படி அப்படித்தான். காலைவாரி தரையில் அடித்துவிடுவார்கள். ஒருவன் கீழே விழுந்துவிட்டால் அப்புறம் அவனால் என்ன செய்யக்கூடும் என்பது உமக்கே தெரியுமே!

அருளாதிக்கருடைய முகத்தைக் கூர்ந்துபார்க்கிறவன் எவனோ, அவன் அவர் முகத்தில் இருக்கிற கிறலையும், காயங்களையும் கண்டுகொண்டு நான் சொன்னதெல்லாம் நிஜம் என்று நம்பிக்கொள்ளுவான். அவர் ஒருதரம் போர் புரிந்தபோது, நாங்கள் செத்தோம் என்றே நினைத்தோம் என்று அவர் சொன்னதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஐயோ இந்தத் திருட்டு சண்டாளரும் அவர்கள் தோழரும் தாவீது என்பவரை எவ்வளவாய் அழுது புலம்பி அங்கலாய்க்கச் செய்து விட்டார்கள். ஏமானும், எசேக்கியா ராஜனும் தங்கள் காலத்தில் வீரபராக்கிரமமாய் இருந்தபோதிலும் இந்த திருடரால் சூழப்பட்ட சமயத்தில் அவர்களோடு போர்செய்வது அவசியமாய் இருந்தது. அச்சமயத்தில் அவர்களைக் காபந்து செய்து கொள்ளத்தக்கதான மேல் உடுப்பு அவர்களுக்கு இருந்தாலும் அதை எல்லாம் சுந்தை சுந்தையாகப்

பீற்றலாக்கிவிட்டார்கள். ஒரு காலத்தில் பேதுருவும் தம்மாலான சாமர்த்தியங்கொண்டு அந்த துஷ்டரை மடக்கிவிடலாம் என்று போய்ப் பார்த்தார். சிலர் அவரை அப்போஸ்தலரின் பிரபுவென்று சொல்லுகிறார்கள். ஆனால், அவர் பட்டபாடு கடும்பாடு. அவர்கள் ஒரு வேலைக்கார பெண்ணைக் கொண்டு அவரைப் பயப்படுத்தி, அப்படி அவரைக் காலாகோலப் படுத்தி விட்டார்கள்.

அதுவுமல்லாமல் ஒரு கூப்பிடு தூரத்திற்குள்தான் அவர்கள் அரசனும் இருக்கிறான். ஒரு ஈசல் போட்டவுடனே அவன் கேட்டுக்கொள்ளுகிறான். தன் சேனாதிபதிகள் கைதாழ்ந்து போகிறார்கள் என்று கண்டால், அந்நிமிஷமே அவனே வந்து ஒத்தாசை செய்கிறான். "அவனைத் தாக்குகிறவனுடைய பட்டயம், ஈட்டி, வல்லயம், கவசம் ஒன்றும் அவனுக்கு முன் நிற்காது. அவன் இரும்பை வைக்கோலாகவும், வெண்கலத்தை உளுத்த மாவாகவும் எண்ணுகிறான். அம்பு அவனைத் துரத்தாது. கவண்கற்கள் அவனுக்குத் துரும்பாகும். அவன் பெருந்தடிகளை தாளடிகளாக எண்ணி ஈட்டியின் அசைவை இகழுவான்" *(யோபு 41 : 26-29)* என்று அவனைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி இருக்கிற விசயத்தில் ஒரு மனுஷனாலே என்ன செய்யக்கூடும்? மெய்தான் ஒவ்வொரு சமயத்திலும் ஒரு மனுஷனுக்கு யோபுவின் குதிரை அகப்பட்டு அதன்மேல் ஏறுகிற தைரியமும், அதை நடத்துகிற சாமர்த்தியமும் இருந்தால் அப்போது பெருங்காரியங்களையும் செய்துவிடலாம். ஏனெனில் அந்தக் குதிரையின் தொண்டையில் குமுறல் இருக்கிறது. ஒரு வெட்டுக்கிளியை மிரட்டுவதுபோல அதை மிரட்டலாகாது. அதனுடைய நாசியின் செருக்கு பயங்கரமாய் இருக்கிறது. அது தரையிலே தாளடித்து தன் பலத்தில் களித்து, ஆயுதங்களைத் தரித்தவர்களுக்கு எதிராகப் புறப்படும். அது கலங்காமலும் பட்டயத்துக்கு பின்வாங்காமலும் இருந்தது. பயப்படுதலை அது அலட்சியம்பண்ணும். அம்பறாத்துணியும், மின்னுகிற ஈட்டியும், கேடகமும் அதின்மேல் கலகலக்கும்போது கர்வமும், மூர்க்கமும் கொண்டு, தரையை விழுங்கிவிடுகிறதுபோல அனுமானித்து, எக்காளத்தின் தொனிக்கு அஞ்சாமல் பாயும். எக்காளம் தொனிக்கும்போது அது நிகி என்று கனைக்கும். யுத்தத்தையும் படைத்தலைவரின் ஆர்ப்பரிப்பையும் சேனைகளின் ஆரவாரத்தையும் தூரத்தில் இருந்து மோப்பம் பிடிக்கும். *(யோபு 39 : 19 - 25)*

ஆனால் கால்நடைப் பிரயாணிகளாகிய நீயும் நானும் சத்துரு வருகிறான் இல்லையே என்று எதிர்பார்க்க வேண்டாம். அவதிப்பட்ட பலரைப்பற்றிக் கேள்விப்படும்போது, நாம் அவர்களைப் பார்க்கிலும் பராக்கிரமம் காட்டலாம் என்று வீம்பு பாராட்டி மனம் மகிழக்கூடாது. சோதனை உண்டாகிற சமயத்தில் சற்றாகிலும் எதிர்த்து நிற்க இயலாமல், தோற்றுப்போய் ஓடுகிறவர்கள் வாயிலேதான் இப்படிப்பட்ட வார்த்தைகள் எல்லாம் வரும். இது மெய் என்பதற்கு நான் முன்னே சொன்ன பேதுருவே அத்தாட்சி. அவன் அல்லாத சாமர்த்தியம் எல்லாம் பேசவே பேசுவான். அவனுடைய வீணான மனம் ஏவினபடி எல்லா மனிதரைப்பார்க்கிலும் நான்தான் என் ஆண்டவருக்காக வந்ததை எல்லாம் சகிப்பேன் என்று சொல்லுவான். ஆனால், துஷ்டரை கண்டவுடன் இவனைப்போல தெம்மாடித்தனமாய் எவன் அப்படி ஓட்டம் பிடிப்பான்?

ராஜபாதையிலே இப்படிக்கொத்த கொள்ளைகள் நடக்கிறது என்று கேள்விப்படும்போது, நாம் செய்ய வேண்டிய காரியங்கள் இரண்டு உண்டு. அவையாவன :

முதலாவது :- நாம் ஆயுதம் தரித்தவர்களாய் புறப்படவும், கேடகம் இல்லாமல் கால் எடுத்து வைக்காமல் இருக்கவும் வேண்டும். ஏனெனில், இவைகள் இல்லாமையினால் லிவியாதான் மேல் விழுந்த ஒருவன் அதைத் தனக்கு கீழ்ப்படுத்தும்படி கூடாமற்போயிற்று. இவைகள் நமக்கு இல்லாவிட்டால் அது நமக்கும் அஞ்சமாட்டாது என்பது நிச்சயம். அதனாலேதான் ஞானமுள்ள ஒருவர் " பொல்லாங்கன் எய்யும் அக்கினி அஸ்திரங்களை எல்லாம் அவித்துப் போடத்தக்கதாக எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசம் என்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாய் நில்லுங்கள் " (எபே 6 : 16) என்று சொல்லியிருக்கிறார்.

இரண்டாவது :- ராஜ சேவகன் ஒருவன் நம்மோடு அனுப்பப் படவும், ராஜாவே நம்மோடு கூட இருக்கவும் நாம் கேட்டுக்கொள்ளுவது நலமாய் இருக்கும். தாவீது என்பவர் மரணப்பள்ளத்தாக்கில் இருக்கையில் இந்தத் துணையால் மிகவும் சந்தோசப்பட்டார் (சங் 23 : 4) மோசே என்பவரும் தேவதுணை இல்லாமல் ஒரு அடி வைக்கிறதைவிட நின்ற இடத்திலேயே செத்துப்போகிறேன் என்று சொன்னார். (யாத் 33 : 15) ஆ, என் சகோதரனே, அவர் ஒருவர் மாத்திரம் நம்மோடு வருவாரானால் நமக்கு விரோதமாய் எழும்புகிற பதினாயிரம் பேருக்கும் நாம்

பயப்படோம் (சங் 3 : 5-8, 27 : 1-3) அவருடைய துணை இல்லாவிட்டால், உதவி செய்வதாய் வரும் அகங்காரிகள் எல்லாரும் கொலை செய்யப்பட்டவர்களுக்குள் விழுவார்கள். (ஏசா 10 :4)

என் மட்டுக்கு, நான் ஒரு தரம் அந்தச் சங்கடத்தைப்பட்டேன். சர்வ தயாளருடைய காருண்யத்தால் நீர் பார்க்கிற பிரகாரம் இன்னும் உயிரோடு இருக்கிறேன். என்றாலும் நான் என் சுய பெலத்தைக் குறித்து மேன்மை பாராட்டாமல் வாயை மூடி மௌனியாக இருப்பேன். இப்படிப்பட்ட துஷ்டரை நான் மறுபடியும் சந்தியாவிட்டால் அதைப்போல சந்தோசம் வேறு எனக்கு எதுவும் இல்லை. ஆனால், இன்னும் நாம் மோசங்கள் உண்டாகும் எல்லையைக் கடந்து தீரவில்லை. எப்படியும் சிங்கமும் கரடியும் என்னை விழுங்கிப்போடாததினாலே, தேவன் அடுத்த சத்துருவாகிய விருத்தசேதனம் இல்லாத பெலிஸ்தன் கையிலே என்னை ஒப்புக்கொடுக்க மாட்டார் என்றும் நம்புகிறேன் என்று சொன்னதும் அல்லாமல்,

கள்ளர் கையில் விழுந்தாயோ?
அற்பவிசுவாசியே!
நீ கொள்ளையிடப்பட்டாயோ?
அற்பவிசுவாசியே!
இதை நினை
விசுவாசித்தவளே.
உனக்குள்ளே விசுவாசம்
வரவர ஏறினால்
பதினாயிரம் பேரையும்
அதமாக்கிப் போடுவாய்,
அல்லாவிட்டால்
மூவரை வெல்லமாட்டாய்.

என்று கிறிஸ்தியான் பாடினான்.

ஜெய்சால்மர் பட்டணத்தில் நடைபெற்ற தேவ ஊழியம்

- 1997 ஆம் ஆண்டின் சுவிசேஷ பயண நினைவுகள்

கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு துதி உண்டாவதாக.

இந்தியாவின் தார் பாலைவனத்தில் ஜெய்சால்மர் என்றதொரு பட்டணம் உண்டு. பசுமை என்பதே இல்லாத வறட்சியான பகுதி அது. வடக்கு மற்றும் மேற்கு எல்லை பாக்கிஸ்தான் நாட்டை ஒட்டி இருப்பதால் இந்த ஜெய்சால்மர் பட்டணம் முற்றுமாக நமது இந்திய ராணுவத்தின் வளையத்துக்குள் இருக்கின்றது.

ராஜஸ்தான் மாநிலத்தின் இந்த ஜெய்சால்மர் பகுதியில் பூர்வ நாட்களில் உடன்கட்டை ஏறுதல் அல்லது "சதி" என்னும் கொடூர பழக்கம் அதிகமாக நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கின்றது. அதின் காரணமாகவோ என்னவோ இந்த இடம் கடும் வறட்சியான முட்காடுகளாக இருக்கின்றன.

ராஜஸ்தான் மாநிலம் என்றதும் மிருகங்களுக்கும், பட்சி பறவைகளுக்கும் ஒரு சிறிய தீங்கு கூட செய்யாத ஒரு அதிசய மாநிலமாக நாம் அதை காணலாம். புறாக்கள் திரள் திரளாக இருக்கின்றன. ஒருவன் வேண்டுமென்று உணவுக்காக ஒரு புறாவை கொல்லும்போது கண்டு பிடிக்கப்பட்டால் அவனையும் அந்த புறாவுடன் சேர்த்து கொன்று போடுவார்கள் என்று ஒரு மனிதர் கூறினார். ஜெய்சால்மர் முட்காடுகளில் உள்ள உடை மரங்களில் புறாக்கள் தங்கள் முட்டைகளுடனும், குஞ்சுகளுடனும் மிகவும் சாவதனமாக பயமின்றி படுத்திருப்பதை அருகில் சென்று நான் பார்த்து ஆனந்தித்தேன்.

ஜெய்சால்மர் பட்டணத்து ரயில் நிலையத்திற்கு அருகாமையில் ஒரு பாட்டியம்மா வைத்திருக்கும் குடிசை டீ கடையில் 9 அடைக்கலான் குருவி கூடுகளைக் கண்டேன். பாட்டியம்மா தனது வாடிக்கையாளர்களுக்கு டீ போட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கும் வேளையில் அனடக்கலான் குருவிகள் பாட்டியின் தலைக்கு மேலாக பறந்த வண்ணமாகவே

இருப்பதை நான் கண்டேன். அந்த குருவிகளுக்கு ஒரு சிறிய தொந்தரவுகூட அந்த பாட்டி கொடுப்பதாக தெரியவில்லை.

ராஜஸ்தான் பட்டணங்களின் பூங்காக்களில் மனிதர்கள் குடிக்க பெரிய பெரிய பானைகளில் தண்ணீர் நிரப்பி ஒரு பக்கம் வைக்கப்பட்டிருப்பதையும், மாடுகள் குடிக்க தனியாக ஒரு பக்கம் சிமெண்ட் தொட்டிகளில் தண்ணீர் ஊற்றி வைக்கப்பட்டிருப்பதையும், அதே சமயம் புறாக்கள், மைனாக்கள், அடைக்கலான் குருவிகள் தண்ணீர் குடிக்க வசதியாக சின்ன, சின்ன மண் குவளைகளில் நீர் வார்த்து வைக்கப்பட்டிருப்பதையும் கண்ணாரக்கண்டு நான் பிரமித்தேன். பட்டணத்து தெருக்களில் வசிக்கும் மாடப் புறாக்களுக்கு இரக்க குணம் படைத்த மக்கள் சாக்கு மூட்டையில் தானியங்களை கொண்டு வந்து அவைகள் தின்பதற்காக வாரி இரைத்துக் கொண்டு செல்லுவதை கண்ணுற்று அதிசயித்தேன்.

தாங்கள் வளர்த்த மாடுகள், ஒட்டகங்கள் மிகவும் வயதாகி பயனற்றுப் போய்விட்டால் அவைகளை இறைச்சிக்காக விற்காமல் அந்த மிருக ஜாதிகள் தாங்களாகவே செத்துக் கொள்ளும்படியாக காடுகளுக்கு ஓட்டிவிடுகின்றனர். ராஜஸ்தான் காடுகளிலும், கிராமப்புறங்களிலும் மான்கள், கடமான்கள், காட்டுப்பன்றிகள், மயில்கள் போன்றவை தீங்கிழைப்பார் யாருமின்றி சுதந்திரமாக, திரள் திரளாக சுற்றி திரிந்து ஆனந்திப்பதை எங்கள் கண்ணாரக்கண்டு மகிழ்ந்தோம்.

இப்படி எல்லாம் பட்சி பறவைகளுக்கும், மிருக ஜாதிகளுக்கும் இரக்கம், கருணை காட்டும் ராஜஸ்தான் மனிதன் தனது சக மனுஷருடன் எப்படி நடந்து கொள்ளுகின்றான் என்றால் அங்குதான் நாம் படிக்க வேண்டிய பாடம் உள்ளது. அவனுடைய இருதயம் கேடுபாடுள்ளதும், நித்தமும் பொல்லாப்புமானதாகவே இருப்பதை நாம் காணலாம். எரேமியா 17 : 9 ஆம் வசனத்தில் தேவன் இருதயத்தை குறித்து வர்ணித்த முழு வர்ணனைக்கும் அவனுடைய கேடுள்ள இருதயம் அப்படியே பொருந்தி நிற்கின்றது.

தனது ஒட்டகம் வயது சென்று வேலை செய்ய தகுதியற்றது என்று கண்டதும் அதை சாவுக்கு ஒப்புக்கொடாமல் காட்டிற்கு ஓட்டிவிடும் அந்த மனிதன் அந்த ஒட்டகத்தின் வாழ்நாட்காலம் முழுவதும் அது வாயிலிருந்து நுரை தள்ளி, நெஞ்சு வெடித்து சாகத்தக்கதாக தினமும்

அதை கொடூரமாக வேலை கொள்ளுவதையும், மட்டுக்கு மிஞ்சி அதின் முதுகின் மேல் பழுவை ஏற்றுவதையும் நான் கண்டு கண் கலங்கினேன். ஒரு மினி லாரி கொண்டு செல்லும் கனமான பழுவை ஒரு ஒட்டகம் தனது தோளுடன் இணைக்கப்பட்ட வண்டியில் இழுத்துச் செல்லுவதை நான் பார்த்து துயரம் அடைந்தேன்.

உன் வாசஸ்தலம் உயர வானத்திலிருந்து இறங்கும் பனியோடு இருக்கும் (ஆதி 27 : 39)

டில்லியிலிருந்து முந்தின நாள் இரவு புறப்பட்ட ரயில் மறுநாள் அதிகாலை ராஜஸ்தான் மாநிலத்தின் தார் பாலைவனத்தின் வழியாக விரைந்து ஓடிக்கொண்டிருந்தது. வெளியே நான் பார்த்தபோது பனியானது மழை தண்ணீர் போல பூமியின் மேற்பரப்பை நன்கு நனைத்திருப்பதையும், பனிப் பொழிவினால் நனைக்கப்பட்ட குத்துச் செடிகள், புற்களிலிருந்து பனி நீரானது வடிந்து கொண்டிருப்பதையும் நான் கவனித்தேன். அதைக் கண்டபோது எனது கண்கள் உடனே கண்ணீரால் நிறைந்தது.

ஆ, ஆண்டவர் மனிதனை எவ்வளவாக நேசிக்கின்றார் என்பதை அந்தப் பனிப்பொழிவு எனக்கு வாய்விட்டு கூறுவது போல இருந்தது. பகல் எல்லாம் அனல் பறக்க சுட்டெரிக்கும் வெயில் உள்ள அந்த பாலைவன நிலப்பரப்பில் அங்கு வாழ்கின்ற மனிதன் என்ன விளை பயிரை விதைத்து அறுக்க முடியும் என்று நிச்சயமாக நாம் துக்கத்தோடு யோசிப்போம்.

ஆனால், தேவன் எத்தனை அன்புள்ளவர் என்பதனை அங்கு ஒவ்வொரு இரவிலும் மழை போன்று பெய்யும் குளிர்ச்சியான பனி நமக்கு பறைசாற்றி நிற்கின்றது. இரவில் பெய்யும் அந்த பனி நீரைக் கொண்டே கோதுமை, ராகி, பயிறு வகைகள், கம்பு, சோளம், கடுகு போன்ற தானியங்களை அங்குள்ள மக்கள் எளிதாக விளைவித்து விடுகின்றனர்.

பனிப்பொழிவில் தானியங்கள் விளையும் காரணத்தாலேயே எலியா தீர்க்கன் ஆகாப் அரசனைப் பார்த்து மழையும், பனியும் பெய்யாதிருக்கும் (1 இரா 17 : 1) என்று சாபமிட்டார். நமது முற்பிதாவாகிய ஈசாக்கு தனது குமாரனாகிய யாக்கோபை "தேவன் உனக்கு வானத்துப் பனியையும், பூமியின் கொழுமையையும்..... தந்தருள்வாராக" என்றும் தனது அடுத்த குமாரனாகிய ஏசாவை "உன் வாசஸ்தலம் பூமியின் சாரத்தோடும் உயர

வானத்திலிருந்து இறங்கும் பனியோடும் இருக்கும்" (ஆதி 27 : 28, 39) என்று ஆசீர்வதித்ததை நாம் காண்பதால் பயிர் விளைச்சல்களுக்கு வானத்தின் பனிப்பொழிவு எத்தனை அத்தியந்தமானது என்பது நமக்கு புலப்படும்.

நமது கிறிஸ்தவ வாழ்விலும் எத்தனையோ பாடு, துன்பங்கள், கஷ்டங்கள், கண்ணீர்கள், நம்மை சந்தித்து நமது ஜீவனை நமக்கு கசப்பாக்கினாலும், நமது வாழ்வே வனாந்திரமாக காணப்பட்டாலும் தேவன் நம்மேல் பொழிந்தருளும் அவரது திரளான அன்பின் கிருபை அந்த மாராவின் கசப்பை நமக்கு மதுரமாக்கித் தந்துவிடுகின்றது.

தனது ஆண்டவர் இயேசுவுக்காக பெட்போர்டு பட்டணத்தில் தனது வாழ்வின் 12 ஆண்டு காலத்தை அங்குள்ள இருண்ட பாதாள சிறைக்கூடத்தில் செலவிட்டதுடன், மேரி என்ற தனது கண்பார்வையற்ற அருமை மகளோடு எவ்வளவோ பாடுகள் அனுபவித்த பரிசுத்தவான் ஜாண் பன்னியனின் வாழ்வில் தேவன் தமது பரலோக ஆறுதலின் கிருபைகளை அளவிடற்கரியவிதமாக பொழிந்தருளினார். அதின் காரணமாக அந்த பரிசுத்தவான் வேதாகமத்துக்கு அடுத்தபடியாக தேவ மக்களால் போற்றிப் புகழப்படுகின்ற "மோட்ச பிரயாணம்" என்ற பக்தி பரவச பிரபந்தத்தை எழுதும் பாக்கியம் பெற்றார்.

ஜெய்சால்மர் பட்டணத்தில் நடைபெற்ற தேவ ஊழியங்கள்

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் பட்டணத்திலிருந்து முந்தின இரவு எங்களை ஏற்றி வந்த ரயிலானது ஜெய்சால்மர் ரயில் நிலையத்தை அடுத்த நாள் அதிகாலையில் விடிபகல் இருட்டு இன்னும் இருக்கின்ற போதே கொண்டு வந்து சேர்ந்துவிட்டது. அந்தப்பட்டணத்தில் எங்களுக்கு யாரும் தெரியாது. அந்தப்பட்டணத்தில் எங்கு தங்குவது என்பது எங்களுக்கு யோசனையாக இருந்தது. ரயில் நிலையத்துக்கு அருகில் எந்த ஒரு கடைகளோ, கட்டிடங்களோ எதுவுமே கிடையாது. பொழுது நன்றாக விடியும் வரை மற்ற கொஞ்சம் ரயில் பிரயாணிகளைப் போல நாங்களும் அங்குள்ள சிறிய ரயில் நிலையத்தில் பொறுமையோடு காத்திருந்தோம். பொழுது விடிந்து வரும் வேளை நமது சகோதரன் நார்ட்டன் அவர்கள் அதிகாலை குடிக்கும் தனது டீக்காக வெளியே புறப்பட்டுச் சென்றார்கள். எந்த நிலையிலும் அந்த காலை வேளை தேயிலை பானம் அவர்களுக்கு கட்டாயம் கிடைத்தாக வேண்டும்.

சகோதரன் அப்படியே போய்விட்டு டீ குடித்துவிட்டு பட்டணத்தை பற்றிய தகவலும் விசாரித்து வந்தார்கள். ஜெய்சால்மர் பட்டணம் சற்று தொலைவில் இருப்பதாகவும், ரயில் நிலையத்துக்கு அருகில் எந்த ஒரு தர்மசாலையாவது, தங்குவதற்கான லாட்ஜ் ஆவது இல்லை என்றும் கூறினார்கள். சூரியன் உதயமாகும் நேரம் நாங்கள் பட்டணத்துக்குள் சென்று கூட்டம் நிரம்பி வழியும் ஒரு தர்மசாலையில் தங்கச் சென்றோம். ஆனால், அங்கு எங்களுக்கு இடம் கிடைக்கவில்லை. அந்த நாளின் பிந்திய பகுதியில் தங்குவதற்கு அறை தருவதாக தர்மசாலையினர் எங்களிடம் கூறவே எங்களுடைய பொருட்களை அங்கு வைத்துவிட்டு நாங்கள் அடுத்து என்ன செய்வதென்று தீர்மானித்தோம்.

கர்த்தரே தமது திருவுள சித்தத்தை எங்கள் மூலமாக நிறைவேற்ற ஜெய்சால்மர் பட்டணத்துக்கு அழைத்து வந்திருந்தார். கர்த்தருடைய திட்டமான ஆலோசனைப்படி நாங்கள் ஜெய்சால்மர் பட்டணத்து தபால் நிலையம் சென்று அங்குள்ள தபால்காரர் ஒருவரிடம் கிறிஸ்தவர்கள் அங்கு வாழ்கின்ற விபரம் பற்றி கேட்டபோது அந்த மனிதர் இந்திரா காலனி என்ற இடத்தில் ஒரு கிறிஸ்தவ பள்ளிக்கூடம் இருப்பதாக எங்களிடம் கூறினார்.

அவருடைய வார்த்தையின்படி நாங்கள் அந்த பள்ளிக்குச் சென்றோம். "இம்மானுவேல் மிஷன் பள்ளிக்கூடம்" என்ற அந்த பள்ளி மிகவும் ஒதுக்கமான தனித்த இடத்தில் அமைந்திருந்தது. பள்ளியை ஒட்டி சற்று தொலைவில் நமது இந்திய ராணுவத்தின் ஒரு பெரிய கேந்திரம் அங்கு இருந்தது. நாங்கள் பள்ளிக்குச் சென்ற நாள் விடுமுறை நாளாக இருந்தது. பள்ளிக்கு நீண்ட விடுமுறை விட்டிருந்தனர்.

பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. சாமுவேல் கேரளத்தை சேர்ந்தவர்கள். அவர்களும் அவர்களது மனைவியும், குழந்தைகளும் பள்ளிக்கூடத்திலேயே தங்கியிருக்கின்றனர். பள்ளி அவர்களுக்கு சொந்தமானது அல்ல. கர்த்தருடைய மிஷனரி பணியையும் செய்து கொண்டே ஆசிரிய வேலையையும் செய்து கொண்டிருக்கின்றனர். நல்ல உண்மையான மெய் கிறிஸ்தவர்கள். கபடு, மாய்மாலம், பண ஆசை, பெருமை எதனையும் அந்த பரிசுத்த குடும்பத்தினரிடம் நாம் காண இயலாது. உத்தமமும், உண்மையுமான பரிசுத்த தேவ மக்கள்.

நாங்கள் அவர்களண்டை சென்றதும் அவர்கள் மிகவும் ஆச்சரியமும் சந்தோசமும் அடைந்தார்கள். சுவிசேஷ ஊழியம் செய்ய ஜெய்சால்மரும் அதின் சுற்றுப்பகுதிகளும் முற்றும் தகுதியற்றவை என்றும், எங்கும் இந்திய ராணுவத்தினர் நிலை கொண்டிருப்பதால் நமது இஷ்டம் போல சுயாதீனமாக சுற்றித் திரிந்து தேவ ஊழியம் செய்ய இயலாது. அதில் நாம் சற்று தவறி வழி தெரியாமற் சென்றாலும் கூட ராணுவம் நம்மை கைது செய்யும் என்று கூறினார்கள். அவர்கள் கூறின வார்த்தைகள் எங்களை மிகவும் சோர்படையப்பண்ணியது. ஆனால், அவர்கள் உண்மையைத்தான் எங்களிடம் பகிர்ந்து கொண்டார்கள்.

தங்களுடைய பள்ளிக்கூட அறைகளில் ஒன்றிலேயே தங்கிக் கொண்டு பட்டணத்துக்குள்ளேயே தேவனுடைய ஊழியத்தை எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் செய்ய எங்களை சொன்னார்கள். அவர்களுக்கு நன்றி கூறி இம்மானுவேல் பள்ளியிலேயே நாங்கள் ஒரு வகுப்பு அறையில் தங்கி கர்த்தருடைய ஊழியத்தை செய்து வந்தோம். பகற் காலங்களில் பட்டணத்துக்குள்ளும், பட்டணத்தை ஒட்டிய சுற்றுப்புறங்களிலும் தேவனுடைய சுவிசேஷ பிரசுரங்களை கொடுத்து ஊழியம் செய்தோம். இராக்காலங்களில் தினந்தோறும் பள்ளியில் கூடி வந்த பள்ளியின் ஆசிரியர்கள், ஆசிரியைகள், ராணுவத்தில் பணிபுரியும் சில கிறிஸ்தவ குடும்பங்களுக்கு ஆண்டவருடைய செய்தியை ஜெபத்தோடு அளித்து வந்தோம். இந்தி பாடல்களை பாடித் துதித்து நாங்கள் தேவனை அந்த தேவ மக்களோடு சேர்ந்து மகிமைப்படுத்தினோம். எனது ஆங்கிலச் செய்திகள் இந்தியில் மொழி பெயர்க்கப்பட்டன. சகோதரன் நார்ட்டன் அவர்கள் இந்தியிலேயே தேவ செய்திகளை கொடுத்தார்கள். அதிகமான ஜெபத்தோடும், உபவாசத்தோடும் நாங்கள் அவர்களுடன் பகிர்ந்து கொண்ட எங்கள் வாழ்வின் சொந்த அனுபவங்கள், சாட்சிகள், தேவ ஆலோசனைகள் எல்லாம் அவர்களுக்கு மிகவும் ஆசீர்வாதமாக இருந்ததாக அந்த தேவ பிள்ளைகளே கூறி கர்த்தரை மகிமைப் படுத்தினார்கள்.

ஒரு நாள் இரவு பக்கத்திலுள்ள ஒரு சிறிய கிராமத்துக்கு எங்களை அழைத்துச் சென்று அங்குள்ள இந்து மக்களுக்கு தேவனுடைய நற்செய்தியை கூறச்செய்தனர். சகோதரன் நார்ட்டன் அவர்கள் அன்று இரவு கர்த்தருடைய செய்தியை கொடுத்தார்கள். மிகவும் ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் கிருபை செய்தார். அந்தக் கிராமத்தில் கும்பாராம்

என்ற ஒரு இந்து கொத்தனாரை ஆரம்பத்தில் குறிப்பிட்ட இம்மானுவேல் பள்ளி தலைமை ஆசிரியர் சாமுவேல் அவர்கள் கர்த்தருக்குள் வழிநடத்தி கும்பாராமின் முழு குடும்பமே ஆண்டவர் இயேசுவின் அன்புக்குள் வந்துவிட்டது.

இந்தக்காரியம் அப்பொழுது ராஜஸ்தான் மாநிலத்தை ஆட்சி செய்து வந்த பாரதிய ஜனதா கட்சி ஆட்சியாளர்களின் காதுகளுக்கு எட்டி அரசாங்க உயர்மட்ட அதிகாரிகள் இம்மானுவேல் பள்ளிக்கே வந்து தலைமை ஆசிரியர் சாமுவேலையும், கிறிஸ்துவுக்குள் வழிநடத்தப்பட்ட கும்பாராமையும் ஒன்றாக நிறுத்தி பெரிய விசாரணை வைத்தபோது நமது கும்பாராம் மிகுந்த தைரியமாக "இயேசு இரட்சகர் ஒருவரே ஜீவிக்கின்ற மெய்யான தேவன் என்றும், அவர் ஒருவர் மட்டுமே மனிதனுக்கு பாவங்களிலிருந்து விடுதலையையும், பாவ மன்னிப்பையும், நித்திய ஜீவனையும், தேவ சமாதானத்தையும் கொடுக்கக் கூடியவர் என்றும், தான் அதுவரை வணங்கி வழிபட்டு வந்த தேவதா தேவிகள் வெறும் மனுஷருடைய கைவேலையான விக்கிரகங்களும், தனக்கு அவைகள் ஒன்றுமே செய்யவில்லை" என்றும் சொன்னதுடன் தன்னை விசாரணை செய்ய வந்த அரசாங்க உயர் அதிகாரிகளிடம் பாவிகளுக்காக இரத்தம் சிந்தி மாண்டு இன்றும் ஜீவிக்கின்ற இயேசு நாதரை தங்களுடைய அன்பின் இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்திக் கூறவே விசாரணை செய்ய வந்த அதிகாரிகள் வெட்கம் அடைந்து தங்கள் வழியே போய்விட்டனர் என்று கும்பாராம் எங்களிடம் சொன்னார்.

ஜெய்சால்மர் பட்டணத்தில் நல்ல தேவ ஊழிய வாய்ப்புகள் கிடைத்தது எங்களுக்குச் சந்தோசத்தைக் கொடுப்பதாக இருந்தாலும் சாத்தானுக்கு அந்த சந்தோசம் பிடிக்காமல் இராக்காலங்களில் தனது பெரிய கொசுப்பட்டாளத்தை ஏவிவிட்டு பள்ளியின் வகுப்பு அறை தரையில் படுத்திருந்த எங்களை இரா முழுவதும் தாக்கிக் கொண்டே இருந்தான். கொசு கடியால் மிகவும் அவதிப்பட்டோம். கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்காக அந்த அற்பமான துன்பத்தை மிகுந்த மகிழ்ச்சி பொங்க ஏற்றுக்கொண்டோம்.

ஜெய்சால்மர் பட்டணத்திலுள்ள இம்மானுவேல் மிஷன் பள்ளி தலைமை ஆசிரியர் சாமுவேல் அவர்களின் குடும்பத்தினர் நாங்கள் அங்கு தங்கியிருந்த 4 அல்லது 5 நாட்கள் எங்களுக்கு பாராட்டிய உபசரிப்புகளும், பட்சமும், பாசமும் மிகவும் அதிகமாகும். தேவன் தாமே அந்த தமது

பரிசுத்த மக்களை நிறை பூரணமாக ஆசீர்வதிப்பாராக. அப்படியே அந்த மிஷன் பள்ளியில் பணிபுரியும் கிறிஸ்தவ ஆசிரியர்களும், ஆசிரியைகளும் எங்களை தங்கள் தங்கள் வீட்டுக்கு அழைத்து சென்று உபசரித்து அன்பு செய்தார்கள். நாங்கள் ஜெய்சால்மரை விட்டுப் புறப்படும்போது ரயில் நிலையம் வரை வந்து இரவில் வெகு நேரம் வரை எங்களோடிருந்து எங்களை வழி அனுப்பி வைத்துவிட்டுச் சென்றனர். தேவன் அந்த அன்புள்ள அருமை மக்களையும் ஆசீர்வதிப்பாராக.


நீர் என்னை காண்கின்ற தேவன் (ஆதி 16 : 13)

தார் பாலைவனத்தின் ஜெய்சால்மர் பட்டணத்திலிருந்து 42 கி.மீ. தூரத்தில் சாம் என்ற பாலைவன கிராமம் உள்ளது. இந்த கிராமத்துக்கு சற்று தொலைவில் பாலைவனத்தின் முழுமையான மணற்பரப்பை நாம் காணலாம். படங்களில் உலகின் மிகப் பெரிய சஹாரா பாலைவன மணல் திட்டுகளை நாம் பார்ப்பது போல இந்த இடத்தில் பாலைவனத்தின் அழகை நாம் கண்டு மகிழலாம். எந்த ஒரு பாலைவன செடி கொடிகள், தாவரங்கள் இல்லாமல் எங்கு நோக்கினாலும் மணற் பரப்பாகவே இருக்கின்றது.


இந்த அழகான பாலைவன மணற் பரப்பைக் காண இந்தியா முழுமையிலிருந்தும், உலகத்தின் பல்வேறு வெளி நாடுகளிலிருந்தும் சுற்றுலா பயணிகள் திரளாக வருகின்றனர். இந்தப் பாலைவனத்தில் சூரியன் அஸ்தமிக்கும் காட்சியை காண மக்கள் ஆவலோடு வருகின்றனர். கன்னியாகுமரியில் சூரிய உதயம், அஸ்தமனத்தை மக்கள் எவ்வளவு ஆவலாக வந்து பார்க்கின்றனரோ அவ்வண்ணமாக இங்கு சூரியன் மேல்வானில் மறைவதைக் காண மக்கள் திரண்டு வருகின்றனர்.

ஜெய்சால்மர் பட்டணம் பாக்கிஸ்தானுக்கு வெகு அருகாமையில் அதை ஒட்டி இருப்பதால் நமது விருப்பம் போல இந்த அழகிய பாலைவன மணற்பரப்பை நாம் வந்து காண இயலாது. எல்லா இடங்களும் நமது இந்திய ராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள்ளேயே இருக்கின்றது. இந்த இடத்தை காண விரும்பும் மக்கள் அனைவரையும் வாகனங்களில் ஏற்றிக் கொண்டு அனைத்து வாகனங்களும் ஒரே நேரத்தில் ஜெய்சால்மரிலிருந்து புறப்படுகின்றன.

இப்படி ஒரு அழகான இடம் இருப்பது ஜெய்சால்மருக்கு நாங்கள் வந்த பின்னர்தான் எங்களுக்குத் தெரியும். சகோதரன் நார்ட்டனும், நானும், சென்னையிலிருந்து வந்திருந்த பொய்யாமொழி என்ற ஒரு இந்து



சகோதரனும், வட இந்தியாவை சேர்ந்த ஒரு இளம் தம்பதியினரும், மற்றொரு வங்காளி குடும்பத்தினராக ஒரு ஜீப்பை வாடகைக்கு அமர்த்தி புறப்பட்டோம். மாலை சுமார் 3 மணிக்கு சற்று முன்னதாகவே பாலைவன சூரிய அஸ்தமன காட்சியை காண விரும்பிய மக்களை ஏற்றிக் கொண்டு அநேக வாகனங்கள் ஏக காலத்தில் கிளம்பின. போகும் இடம் எல்லாம் ராணுவத்தினரும், ராணுவ பாசறைகளுமே உள்ளன. ஆங்காங்கு



பாலைவனத்தில் நாடோடிகள் தங்களது திரளான ஆடுகளை மேய்த்துக் கொண்டிருப்பதை நாங்கள் கவனித்தோம்.

பாலைவனத்திற்குள் வெகு தொலைவு வந்த பின்னர் ஜெய்சால்மரிலிருந்து வந்த எல்லா வாகனங்களும் ஒரு ஜெயின மத கோவிலின் முன்பாக வந்து நின்றன. மக்கள் எல்லாரும் இறங்கி அந்த கோவிலுக்குள் சென்று வழிபட்டு வந்தனர்.

பொதுவாக இந்துக் கோயில்களுக்குள் கடவுள் தரிசனத்துக்காக செல்லுவோர் தங்கள் செருப்புகளை வெளியே கழற்றி வைத்து விட்டு உள்ளே செல்லுவார்கள். ஆனால், மேற்கண்ட ஜெயின மத கோயிலுக்குள் தரிசனத்துக்காக போன மக்கள் யாவரும் தங்களது செருப்புகளை மாத்திரமல்ல தங்களது அறையில் கட்டியிருந்த பெல்ட், கடிகாரம், பெண்கள் தங்கள் கைகளில் வைத்துள்ள லெதர் பை யாவையும் வெளியே வைத்துவிட்டுத்தான் உள்ளே போக அனுமதித்தனர். வாசலில் நிற்கும் ஜெயின மத கோயில் பூஜாரி தோலினால் செய்யப்பட்ட எந்த ஒரு பொருளையும் உள்ளே எடுத்துச் செல்ல அனுமதிக்கவில்லை. மிருகத் தோலால் செய்யப்பட்டதும், மிருகத் தோலினால் இணைக்கப் பட்டதுமான (கைக்கடிகாரம்) அனைத்துப் பொருட்களும் வெளியே கழற்றி வைக்கப்பட்டாக வேண்டும்.

அந்த பூஜாரி அங்கு அப்படி செய்தது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. உண்மைதான், அந்தப் பூஜாரியின் கடவுள் அன்பின் சொரூபி, உயிர் கொலையை சகித்துக் கொள்ளாதவர், தனக்கு முன்பாக நின்று தன்னை வழிபடுவோர் அகிம்சாவாதியாக இருக்க வேண்டும் என்று விரும்புவர்தான். ஆனால், அந்த கடவுள், காலில் அணியும் செருப்பு, அறையில் கட்டும் பெல்ட், பெண்களின் லெதர் பை மற்றும் இதர வெளியரங்கமாக தெரியக்கூடிய தோற்பொருட்களை மாத்திரம் தான் தனது கண்களால் காணக்கூடியவர் என்பதை நான் திட்டமாக அறிந்தேன்.


செருப்பு, பெல்ட், கடிகாரம், லெதர் பை யாவையும் கழற்றி கோயிலுக்கு வெளியே வைத்துவிட்டு அந்தக்கடவுளை வணங்கி நிற்கும் மனிதன், தான் புறப்பட்ட இடமான ஜெய்சால்மர் பட்டணத்தின் ஓட்டல் ஒன்றில் மூக்கு முட்ட மட்டன் பிரியாணி, மட்டன் வறுவல் எல்லாம் சாப்பிட்டு தனது வயிற்றை மாமிசத்தால் நிரப்பி உள்ள மனிதனாவான். "அப்பா, நீ மாமிசம் சாப்பிட்டுவிட்டு எனக்கு முன்பாக என்னை வணங்க

நிற்பவன், நீ சாப்பிட்ட மாமிசம் அப்படியே உனது வயிற்றில் உள்ளது. எனது தரிசனத்தை பெற நீ முற்றும் தகுதியற்றவன்" என்று கூற அந்த ஜெயின மத கடவுளுக்கோ அல்லது அந்த கடவுளின் பூஜாரிக்கோ இயலவில்லை.

ஆனால், அடிமைப் பெண்ணாகிய ஆகார் தனது ஆண்டவரைப் பார்த்து "நீர் என்னைக் காண்கின்ற தேவன்" (ஆதி 16 : 13) என்று கூறுவதை நாம் பார்க்கின்றோம். "என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர், என் நினைவுகளை தூரத்திலிருந்து அறிகிறீர். என் நாவில் சொல் பிறவாததற்கு முன்னே, இதோ கர்த்தாவே அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர்" என்று தாவீது ராஜா சொல்லுவார் (சங் 139 : 2, 4) "கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து நினைவுகளின் தோற்றங்களை எல்லாம் அறிகிறார்" (1 நாளா 28 : 9) என்று தாவீது ராஜா தமது குமாரன் சாலொமோனுக்கு உபதேசிப்பார்.

பாலைவன மணற் பரப்பைக் கொண்டு கர்த்தர் கற்பித்த காரியம்

எங்களை ஏற்றி வந்த ஜீப் பாலைவன மணற்பரப்புக்கு சற்று தூரத்தில் நின்றுவிட்டது. எங்கள் வாகனத்தோடு வந்த எல்லா வாகனங்களும் அங்கு நிறுத்தப்பட்டன. அங்குள்ள ராணுவ அதிகாரிகள் அந்த வாகனங்களை கண்காணிப்பதை நாங்கள் கவனித்தோம். அதின் பின்னர் நாங்கள் கால்நடையாக நடந்து அந்த பாலைவன மணல்




கடலுக்குள் வந்து சேர்ந்தோம். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை அலைஅலையாக பாலைவன மணற் திட்டுகள் எங்களுக்கு முன்பாக காணப்பட்டன. அந்த மணற்பரப்பில் நடப்பதே ஒரு ஆனந்தமான அனுபவமாக இருக்கின்றது. அதைக் காண வரும் சிறுவர், சிறுமியர், வாலிப மக்கள் அந்த பாலைவன மணல் குன்றுகளில் ஏறி மேலிருந்து கீழே உருண்டு புரண்டு வருவதையும், சிரித்து ஆனந்தித்து மகிழ்வதையும் நாங்கள் பார்த்தோம். ஆண்டவருடைய பரம கானான் பாக்கிய நாட்டின் ஜீவ நதிக்கரை ஓரமாக விரிந்து வியாபித்துக் கிடக்கும் பொன் மணற்பரப்பில் நாமும் ஓர் நாள் உருண்டு புரண்டு ஆனந்திக்கத்தான் போகின்றோம் என்பதை அந்தக் காட்சி எங்களுக்கு நினைப்பூட்டி நின்றது.

ஒட்டகங்களில் சவாரி செய்ய விரும்புவோர் பணம் கொடுத்து அந்த இடத்தில் ஒட்டக சவாரியும் செய்து மகிழ்கின்றனர்.

அங்கு செல்லும் எல்லாரும் மாலை சூரியன் அந்த பாலைவனத்தில் அஸ்தமனமாவதை காண ஆசை ஆவலாக காத்திருக்கின்றனர். எப்படி சமுத்திரத்தில் அதின் அஸ்தமனம் இருக்கின்றதோ அப்படியேதான் பாலைவன மணற்பரப்பிலும் ஆதவன் அஸ்தமனமாகின்றது. அது முற்றிலுமாக மணலுக்குள் மறையும் வரை மக்கள் திரளாக நின்று மிகுந்த பரவசத்தோடு அதின் மறையும் காட்சியை காண்கின்றனர்.

அந்த அழகான காட்சியை நீங்களும் எங்களுடன் சேர்ந்து காணவேண்டும் என்பதற்காக ஒரு புகைப்படம் எடுத்து வந்தேன். அதை



நீங்கள் இந்த செய்தியில் காணலாம். அன்றைய தினம் எங்களுடன் பாலைவனத்துக்கு வந்த மக்கள் கூட்டத்தையும் அழகிய பாலைவன மணற்பரப்பையும் நீங்களும் பார்க்க வசதியாக புகைப்படக் கருவியில் பதிவு செய்து கொண்டோம். அதையும் நீங்கள் இந்தச் செய்தியில் பார்க்கலாம்.

"ஒரு குதிரை வனாந்திர வெளியிலே நடக்கிறது போல அவர்கள் இடறாதபடிக்கு நடக்கப்பண்ணியவர்" (ஏசாயா 63 : 13) என்று தேவனுடைய வார்த்தை கூறுகின்றது. ஜெய்சால்மர் பட்டணத்தின் "சாம் கிராம பாலைவன மணற்பரப்பை" நான் பார்த்தபோது மேற்கண்ட தேவனுடைய வசனம்தான் எனது நினைவுக்கு வந்தது.

அந்த பாலைவன மணற் பரப்பில் நடக்கும் எந்த ஒரு மனிதனும், எந்த ஒரு மிருகமும் கால் இடறி விழ இயலாது. அதில் நடக்கும்போது நமது பாதங்கள் அந்த மணலில் நன்கு ஆழமாக பதிந்து விடுகின்றது. அ்ப்படியிருக்க நாம் இடறுவது எங்ஙனம்? நம் அன்பின் ஆண்டவரும் தமது அருமை பிள்ளைகளை இந்த பூவுலக வனாந்திர யாத்திரையில் அவர்கள் கால்கள் இடறாதபடிக்கு ஆச்சரியமாக வழிநடத்தி வருகின்றார்.

இஸ்ரவேல் ஜனங்களை 40 வருட காலம் அவர்களது வஸ்திரங்கள் பழமையாய் போகாமலும், கால்கள் வீங்காமலும், பகலில் மேக ஸ்தம்பத்தால் அவர்களுக்கு நிழல் கொடுத்து, இரவில் அக்கினி ஸ்தம்பத்தால் அவர்களுக்கு வழிகாட்டி, வானத்தின் மன்னாவால் அவர்களை போஷித்து, கன்மலையைப் பிளந்து தண்ணீரை வெளியே கொண்டு வந்து அதினால் அவர்களின் தாகம் தீர்த்து வழிநடத்திய தேவன் இன்று நாம் ஆராதிக்கும் நமது நல்ல தேவன். 40 வருடங்களும் ஒன்றும் குறைவுபடாமல் இஸ்ரவேல் மக்களை பராமரித்து வந்தீர் என்று நெகேமியா கூறுவார் (நெகே 8 : 21) "உங்கள் காலிலிருந்த பாதரட்சைகள் பழையதாய் போகவும் இல்லை" (உபா 29 : 5) என்று இஸ்ரவேல் புத்திரரை பார்த்து மோசே முனிவர் சொல்லுவார்.

அப்படியானால் இஸ்ரவேல் மக்கள் 40 ஆண்டுகள் வனாந்திர பிரயாணத்தின் காலத்தில் அவர்களுடைய வஸ்திரங்களும் அவர்களுடைய உடல் வளர்ச்சிக்குத்தக்கதாக வளர்ந்து வந்திருக்க வேண்டும். அப்படியே அவர்களுடைய பாதரட்சைகளும் கூட பெரியதாகி வந்திருக்க வேண்டும். கர்த்தருக்கு துதி உண்டாவதாக.

எனது உலகப்பிரகாரமான எனது நல்ல வேலையை கர்த்தருடைய திட்டமான தேவ ஆலோசனையின் அடிப்படையில் ராஜிநாமா செய்யும்போது எனது இரு புதல்வர்களுக்கும் வயது 12,13 மாத்திரமே. நான் எனது வேலையை விட்டுவிட்ட பின்னர் நான் பிச்சை எடுக்க வேண்டிய சூழ்நிலை வரும் என்று என்னைக் குறித்து கூறிய மக்களும் உண்டு. ஆனால், தேவாதி தேவன், கர்த்தாதி கர்த்தா, தம்மில் அன்புகூர்ந்து, தம்முடைய வழிகளில் நடக்கும் பரிசுத்த மக்களை எப்படியாக உயர்த்தி ஆசீர்வதிப்பார் என்பதை வெகு சீக்கிரமே அந்த அன்பான மக்கள் கண்டு வெட்கப்பட்டுப் போனார்கள். அப்படிப் பேசியவர்கள், நினைத்தவர்கள் யாவருக்கும் மேலாக அன்பின் கர்த்தர் எங்கள் கொம்பை உயர்த்தி எங்களை மேன்மைப்படுத்தி ஆசீர்வதித்தார். அந்த அன்பின் இரட்சகருக்கு எல்லா துதியும் புகழ்ச்சியும் உண்டாவதாக.

எனது தாயாரின் தகப்பனார் 3 ஆண் மக்கள், 3 பெண் மக்களை விட்டுவிட்டு நல்ல மத்திப வயதிலேயே திடீரென மரித்துப் போனார்கள். 6 பிள்ளைகளை போஷிக்க வேண்டிய பொறுப்பு எனது இள வயது பாட்டியின் மேல் விழுந்தது. கர்த்தரை தனது சொந்த இரட்சகராக கொண்டிருந்த அவர்களுக்கு கணவன் மரித்ததும் ஆண்டவர், ஏசாயா 54ஆம் அதிகாரத்தை வாக்குத்தத்தமாக கொடுத்தார். அந்த அதிகாரத்தைக் கொண்டு தன் கர்த்தரை உறுதியாகப் பற்றிப்பிடித்து தேவனுடைய சமூகத்திலிருந்து தேவையான அனைத்து ஆசீர்வாதங்களையும் பெற்று தனது பிள்ளைகள் யாவரையும் மேன்மையான நிலைக்குக் கொண்டு வந்தார்கள். அவர்களுடைய மூன்றாம் மகளுடைய வயிற்றில் கர்த்தர் என்னை தோன்றப்பண்ணி தமது மகிமையின் சுவிசேஷத்தை வட இந்தியா, நேப்பாளம், சிக்கிம், பூட்டான், மேற்கு திபெத், காஷ்மீரின் ஸன்ஸ்கார் பள்ளத்தாக்கு போன்ற இடங்களுக்கெல்லாம் கொண்டு சென்று அறிவிக்க செய்ததுடன் தேவ மக்களாகிய நீங்கள் எல்லாரும் நன்கு அறிந்தவாறு "தேவ எக்காளம்" பத்திரிக்கையைக் கொண்டு அநேக மக்களை எழுப்புதலடையச் செய்தார். எல்லா துதி, கனம், புகழ்ச்சி, மகிமை யாவுக்கும் பாத்திரர் தேவ மைந்தன் நம் அருமை கண்மணி இயேசு இரட்சகர் ஒருவர்தான்.

ஓ, எனது மேற்குறிப்பிட்ட பாட்டியின் மரணமும் மிகவும் அருமையானது. மரணம் அடையும் நாளை திட்டமாக தெரிவித்து, யார், யாருக்கு தகவல் கொடுக்க வேண்டும், யார், யார் தனது அடக்கத்தில் கலந்து

கொள்ள வேண்டும் என்ற விபரம் எல்லாம் எனது அருமை தாயாரிடம் கூறி கட்டில் ஏறி படுத்த அவர்கள் மிகுந்த தேவ சமாதானத்தோடு, தான் சொன்ன அதே நாளில் ஒருவருக்கும் ஒரு சிறிய தொந்தரவு கொடுக்காமல் தனது அருமை ஆண்டவரண்டை ஆனந்தமாக பறந்து சென்றார்கள்.

கர்த்தரை நேசித்து அவரது பரிசுத்த வழிகளில் நடக்கும் எல்லா பரிசுத்த அடியார்களையும் தேவன் அவ்விதமாகவே நடத்துவார். வனாந்திரத்தில் குதிரை இடறாதபடிக்கு மிகவும் உறுதியாக செல்லுவது போல அந்த தேவ மக்கள் இந்த உலக வனாந்திர யாத்திரையில் அதிசயம் அற்புதமாக தேவனால் வழிநடத்தப்பட்டுச் செல்லுவார்கள். கர்த்தர் அவர்களைக் கொண்டு அதிசயமான கிரியைகளை நடப்பிப்பார்.

தமிழ்நாட்டு வாலிபர் பொய்யாமொழிக்கு சுவிசேஷம் அறிவித்தது

ஜெய்சால்மர் பட்டணத்தில் நாங்கள் பொய்யாமொழி என்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த கூட்டுறவு தணிக்கை அதிகாரி ஒருவரை சந்தித்தோம். ராஜஸ்தான் மாநிலத்தின் பல பட்டணங்களையும் சுற்றிப்பார்த்துவிட்டு இறுதியாக அவர் அங்கு வந்திருந்தார். எங்களுடன் அவர் ஜீப்பில் "சாம்" பாலைவன மணற் பரப்பையும் காண வந்திருந்தார்.

பொய்யாமொழி அவர்களுக்கு கர்த்தர் இயேசுவை குறித்து நாங்கள் விபரமாக கூறி, எங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கைகளில் அவர் எங்களுக்கு செய்த நன்மைகளை குறிப்பாக எங்களை பாவங்களிலிருந்து



விடுவித்து எங்களை கிறிஸ்துவுக்குள் புதிய மனிதர்களாக்கி, உலகம் தரக்கூடாத தேவ சமாதானத்தை எங்களுக்கு தந்து நித்திய ஜீவனுக்கு எங்களை சுதந்திரவாளிகளாக்கின அவரது அற்புத செயலை சொன்னோம். அந்த நற்செய்தியை கூறவே நாங்கள் ஜெய்சால்மர் பட்டணம் வந்ததாகவும் கூறினபோது அவர் மிகவும் ஆச்சரியமடைந்தார்.

ஆண்டவர் இயேசுவை தான் ஏற்றுக்கொள்ளுவதாக அவர் எங்களுக்கு உறுதி கூறினார். நாங்கள் அவரை ஜெய்சால்மரில் எடுத்த புகைப்படங்களுடன் ஒரு அழகிய தமிழ் புதிய ஏற்பாடு இன்னும் பயனுள்ள கிறிஸ்தவ பிரதிகளையும் ஓரிரு புத்தகங்களையும் இங்கிருந்து அனுப்பி கர்த்தர் இயேசு ஒரு தனி மனிதனுடைய வாழ்வுக்கு எத்தனை அவசியமானவர் என்றும் அந்த உன்னத தேவன் தம்மையே அவனுக்காக ஒப்புவித்து எத்தனையாக அன்புகூர்ந்தார் என்றும் எழுதி அனுப்பினோம்.

எங்களுடைய ஆலோசனைப்படியே தாம் இனி ஆண்டவர் இயேசுவுக்கு தன்னை ஒப்புவித்து அவருடைய பிள்ளையாக வாழப்போவதாக உடனே எங்களுக்கு பதில் கடிதம் எழுதினார். நாங்கள் இவரை சந்தித்ததிலும் தேவனுடைய ஒரு மேலான நோக்கம் கண்டிப்பாக இருந்திருக்க வேண்டும். இந்த ஒரு தமிழரை தவிர வேறொரு தமிழ்நாட்டு சுற்றுலா பயணியை நாங்கள் காணவே இல்லை.


பாலைவன மணற் பரப்பிலும் நாங்கள் மூவருமாக ஒன்றாக அமர்ந்திருந்த வேளை ஆண்டவருடைய அன்பை நாங்கள் திரும்பவும் அவரிடம் பகிர்ந்து கொண்டோம். எங்களுடைய வார்த்தைகளை அவர் ஆர்வமாக கேட்டார். ஒட்டகங்கள் அண்டையில் நிற்கும் சகோதரன் பொய்யா மொழியை நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம்.

இந்த தண்ணீரை குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும்.

ஜெய்சால்மர் பட்டணத்தில் நாங்கள் இருந்தபோது ஒரு குறிப்பிட்ட திசை வழியாக மக்கள், குறிப்பாக சுற்றுலா பயணிகள் அதிகமாக செல்லுவதை நாங்கள் கவனித்தோம். அப்படி அவர்கள் அங்கு போவதன் காரணத்தைக் கண்டுபிடிக்க நாங்களும் அவர்களுடன் சென்றோம். அங்கு ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு மியூசியம் இருப்பதையும், அதற்கு அருகில் ஒரு அழகான கட்டிடமும், அதை

ஒட்டினாற்போல ஒரு தண்ணீர் தடாகமும் இருப்பதை நாங்கள் பார்த்தோம்.

மக்கள், ஆர்வமாக தண்ணீர் நிரம்பிய தடாகத்தையும், அதை ஒட்டி நின்ற கட்டிடத்தையும் பார்த்துக் கொண்டிருந்தனர். அதின் காரணத்தை நாங்கள் அதைப் பார்க்க அங்கு வந்திருந்த ஒரு மனிதரிடம் கேட்டபோது அவர் கீழ்க்கண்டவாறு எங்களுக்கு பதில் அளித்தார் :-



"பாருங்கள், ஜெய்சால்மரை ஆட்சி செய்த மன்னனுடைய அரண்மனையில் அவனுக்கு ராணிகள், மறுமனையாட்டிகள், அந்தப்புரத்தில் ஏராளமான பெண்கள் அவனுடைய சந்தோசத்தை நிறைவுசெய்ய இருந்தபோதினும், இங்கிருந்த ஒரு விலைமாதுவின் அழகில் மன்னன் மயங்கி தினமும் இங்கு வந்து சென்றிருக்கின்றான். குளிப்பதற்காக இங்குள்ள இந்த தடாகத்துக்கு வருவதாக அரண்மனையிலுள்ள ராணிகளிடம் அரசன் பொய் சொல்லிவிட்டு இங்கு வந்து இங்குள்ள விலைமாதின் அழகில் மயங்கி இன்பம் அனுபவித்துச் சென்றிருக்கின்றான். அந்த விலைமாது வாழ்ந்த இடம் இதுதான். அரசன் ஸ்நானம் செய்த குளமும் இதுவேதான்" என்று கூறினார்.

குளத்திற்குப்பக்கத்திலுள்ள மியூசியத்தில் பண்டைய கால ராஜபுதன மன்னர்கள் தங்களது தகுதிக்கும், ராஜ அந்தஸ்துக்கும் எவ்வளவோ கீழான நடனப் பெண்கள் போன்றோரை விரும்பி மணம் புரிந்த வரலாறுகளும், தங்களது முயற்சிகளில் தோல்விபடைந்த சரிதங்களும் எழுதி வைக்கப்பட்டிருப்பதை நாங்கள் கவனித்தோம்.

ஆரம்பத்தில் கண்ட மன்னன் நாடிச்சென்ற விலைமாதின் பெயர் தீலான் என்றும், 1909 ஆம் ஆண்டு அவள் அங்கு வாழ்ந்தாள் என்றும், மிகவும் அழகு சௌந்தரியவதியான அந்தப் பெண் தாமரை மலரைப் போன்ற நிறமும் அழகும் உடையவள் என்று அங்குள்ள சரித்திரம் கூறுகின்றது. அரசன் விரும்பிச் சென்ற தீலான் என்ற விலைமாது வாழ்ந்த இடத்தின் படத்தை நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம்.

எத்தனைதான் பெண்கள் தனக்கு மனைவிகளாக இருந்தபோதினும் மனிதனின் ஆசையானது அத்துடன் திருப்தி கொள்ளாமல் இன்னும் அவன் மனமானது அலைந்து திரிந்து நிலை தடுமாறுவதை தனது சொந்த அனுபவத்தில் கண்டுணர்ந்த சாலொமோன் ஞானி "காண்கிறதினால் கண் திருப்தியாகிறதில்லை" (பிர 1 : 8) என்றும் "மனுஷனுடைய கண்கள் திருப்தியாகிறதில்லை" (நீதி 27 : 20) என்றும் எழுதி வைத்தார். அவருக்கு மனைவிகளும், மறுமனையாட்டிகளுமாக 1000 பேர் இருந்ததாக தேவனுடைய வார்த்தை நமக்கு தெரிவிக்கின்றது (1 இரா 11 : 3)

ஆண்டவர் இயேசு இரட்சகரை தனது சொந்தமாக்கி கொண்டு அவர் தனது வாழ்வின் ஜீவனாக மாறாத வரை எந்த ஒரு மனிதனும் திருப்தியடைவதே இல்லை. ஐசுவரியத்தின் தாகம், பட்டம் பதவிகளின் தாகம், எல்லாரும் தங்கள் தலைமேல் தன்னை தூக்கி வைத்து ஆட வேண்டும் என்ற புகழ்ச்சியின் தாகம், பார்க்கும் அழகான பெண்களை எல்லாம் சிற்றின்ப விரகதாபத்துடன் நோக்கும் மிருக வெறியின் இச்சையின் தாகம், இந்த உலகம் அளிக்கக் கூடிய மாயையின் இன்பங்களை எல்லாம் வாரி எடுத்து அள்ளிப் பருக வேண்டும் என்ற மதியீனத்தின் தாகம் போன்ற மாயையின் அழிவின் தாகங்களை எல்லாம் ஆண்டவர் இயேசு ஒருவரே தீர்த்து வைத்து (ஏசாயா 55 : 1) என் ஆத்துமா, தேவன் மேல், ஜீவனுள்ள தேவன் மேலேயே தாகமாயிருக்கிறது (சங் 42 : 2) என்ற பரலோக தாகத்தை நமது உள்ளங்களில் ஏற்றி வைக்கின்றார்.

பாலைவனப் பாம்பு "பிவானா"

இந்த தார் பாலைவனத்தில் ஒரு விதமான பாம்பு உள்ளதாம். அது மக்களை கடித்துக் கொல்லுவதில்லையாம். ஆனால், வேறு விதமாக அது கொல்லுகின்றதாம். அதாவது, ஆழ்ந்து அயர்ந்து நித்திரை செய்யும் மக்கள் மேல் அது மெதுவாக ஊர்ந்து நகர்ந்து சென்று அவர்களின் நாசித்துவாரங்களிலும், வாயிலும் தனது கொடிய விஷக்காற்றை

செலுத்துகின்றதாம். ஆழ்ந்து தூங்கும் மனிதன் அதற்கப்பால் கண் விழிப்பதே இல்லையாம். தனது தூக்கத்திலேயே அவன் இறந்து விடுவானாம். எத்தனை பயங்கரம், பாருங்கள்!

இந்த கொடிய பாம்பின் பெயர் பிவானா என்பதாகும். தார் பாலைவன நாடோடிப் பாடல்களில் இந்த பாம்பின் கொடிய நச்சுத் தன்மையைக் குறித்து விவரித்து எழுதப்பட்டுள்ளதாம். இந்தப் பாம்பிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள தார் பாலைவன மக்கள் தாங்கள் படுக்கைக்கு செல்லுகையில் தங்கள் வாயிலும், மூக்கிலும் வெங்காயத்தை நன்கு தடவிக் கொள்ளுவார்களாம். இந்த வெங்காய வாடைக்கு பிவானா பாம்பு சரீரத்தில் ஏறுவதில்லையாம்.

அன்று ஏதேன் தோட்டத்தில் மனுஷ கொலை பாதகன் என்ற வலுசர்ப்பம் தனது விஷக்காற்றை நமது ஆதி தாய் தந்தையருடைய காதின் வழியாக செலுத்தி அவர்களை அங்கு கொன்றான். இன்று, அந்த சத்துரு மக்களுடைய கண்களின் வழியாக தனது டி.வி. (டெலிவிஷன்) என்ற விஷக்காற்றை செலுத்தி கோடிக்கணக்கான மாந்தரையும், பெருந்தினி என்ற விஷக்காற்றை மாந்தரின் வாய் வழியாக செலுத்தி பல் கோடி மாந்தரையும் அமைதியாகக் கொன்று குவித்து அவர்களை நரக பாதாளத்துக்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றான். கர்த்தர் தாமே அவனது வல்லடிக்கு ஏழை ஆத்துமாக்களை விலக்கிக் காப்பாராக.

பாலைவன ஆச்சரிய தாவரம் "கீப்"

தார் பாலைவனத்தில் "கீப்" என்ற ஒரு ஆச்சரியமான தாவரம் உள்ளது. அதிகமான வெப்பம் காணப்படுகின்ற ராஜஸ்தான் மாநிலத்தின் பாலைவன பரப்பிலே உள்ள பட்டணங்களில் இந்த தாவரம் காணப்படுகின்றது. வெப்ப மண்டல தாவரம் ஆனதால் அகலமான இலைகள் இதில் கிடையாது. தாவரம் முழுவதும் அநேக நாணல் புற்கள் சேர்ந்த தொகுப்பு போல உள்ளது. ஒவ்வொரு நீண்ட பச்சையான விழுதின் இருமருங்கிலும் அங்கொன்றும், இங்கொன்றுமாக மிக, மிக சிறிய பச்சிலைகள் காணப்படுகின்றன.

இந்த தாவரத்தைப் பார்த்தால் எந்த ஒரு அழகும், கவர்ச்சியும் அதில் இல்லாதிருப்பதை நாம் காணலாம். ஆனால், அது அங்குள்ள மக்களால்

எத்தனையாக விரும்பப்படுகின்ற ஒரு புதர் செடி என்பதை அங்குள்ள மக்கள் கூறுவதிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். "கீப்" என்று ராஜஸ்தான் மக்களால் அழைக்கப்படும் அந்த தாவரம் ஏழை மக்களின் "ஏர் கண்டிசன்" செடியாகும். ஏழை மக்கள் இந்த செடிகளைக் கொண்டே தங்கள் குடிசைகளை வேய்ந்து மூடுகின்றனர். செடிகளை வெட்டி உலர்த்தி அந்த காய்ந்த செடிகளைத்தான் பயன் படுத்து கின்றனர். கீப் செடிகளால் கூரை வேயப்பட்ட ஏழை மக்களின் இரண்டு குடிசைகளை நீங்கள் இந்த செய்தியில் காணக்கூடும். நமது ஊர்களில் பனை, தென்னை ஓலைகளுக்கு ஒப்பான பயனை கீப் செடி ராஜஸ்தானத்தில் ஏழை எளிய மக்களுக்கு வழங்குகின்றது. ஏன், பணக் காரர்கள் கூட தங்களது வீட்டின் பந்தலை இந்த "கீப்" செடிகளால் போட்டு வைத்துள்ளனர்.



பாலைவனத்தில் கடும் வெப்பம் வீசும்போது இந்த செடிகளால் உருவாக்கப்பட்ட வீடு "குளு குளு" வென்று இருக்குமாம். பிக்கானீர் பட்டணத்திலுள்ள தேஷ்நோக் என்ற இடத்திலுள்ள "எலி கோயிலின்" பூஜாரி ஜகதீஷ் டான் என்பவருடைய வீடும் மேற்கண்ட கீப் செடிகளால் கூரை வேயப்பட்டதான வீடுதான். நாங்கள் அவருடைய வீட்டுக்குள் சென்றிருந்தபோது கீப் தாவரத்தை குறித்து எங்களிடம் கூறினார். நாங்களே அந்த வீட்டின் குளுமையை எங்கள் அளவில் உணர்ந்தோம்.

பாலைவனத்திலே அற்பமாக எண்ணப்படும் ஒரு புறக்கணிக்கப் பட்ட தாவரத்தில், எந்த ஒரு அழகும், கவர்ச்சியுமற்ற ஒரு குச்சி செடியில் அன்பின் தேவன் எத்தனையான ஒரு பயனையும், ஏழை எளிய மக்கள் மனமகிழ்ந்து களிகூறும் ஆனந்தத்தையும் மறைத்து வைத்துள்ளார் பார்த்தீர்களா? கர்த்தாவின் ஞானத்தை என்னவென்று சொல்லுவது.

நாங்கள் ராஜஸ்தானில் கடந்த கால சுவிசேஷ பயணங்களில் இருந்தபோது மேற்கண்ட கீப் செடியை காணும் போதெல்லாம் கர்த்தர் அந்த செடியின் மூலமாக எங்களோடு பேசி இருக்கின்றார்.

எளிமையான தோற்றம், உடை, வாழ்க்கையின் ஏழ்மை பின்னணியத்தைக் கொண்டு நாம் தேவ மக்களை அற்பமாக எண்ணிவிடக்கூடாது. தலைமயிர் தாடியை வளர்த்துப்போட்டுக் கொண்டு, எளிமையான ஒட்டக மயிர் உடை தரித்து, தன் அரையிலே வார்க்கச்சையை கட்டி யூதேயாவின் வனாந்திரங்களில் சுவிசேஷம் அறிவித்த யோவான் ஸ்நானன் பார்வைக்கு அசட்டை பண்ணப்பட்டவராக ஒருக்கால் இருந்திருக்கலாம். ஆனால், சர்வ வல்ல தேவன் அவரைக் குறித்து "ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானனைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கத்தரிசி ஒருவனுமில்லை" (லூக் 7 : 28) என்று சாட்சி கொடுப்பதை நாம் காண்கின்றோம். கவர்ச்சி, அலங்காரம், பராக்கிரமம், மிகுந்த வீரியம் எல்லாம் தேவன் விரும்புகிறதில்லை. ஈசாயின் குமாரன் எலியாபின் ஆட்டசாட்டமான தோற்றம், சரீரத்தின் கெம்பீரமான வளர்ச்சி, முகத்தில் காணப்பட்ட பராக்கிரமத்தின் வலிமை எல்லாம் மாபெரும் தீர்க்கன் சாமுவேலைக் கூட ஒரு கணம் திக்குமுக்காடச் செய்தது. ஆனால், தேவன் "நான் இவனை புறக்கணித்தேன் " (1 சாமு 16 : 17) என்று எடுத்த எடுப்பிலேயே வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்று கூறிவிட்டார். அல்லேலூயா.

தேவ எக்காளம்

தேவ எக்காளத்தின் ஆண்டுச் சந்தா ரூபாய் 75 ஆகும்.
அனுப்ப வேண்டிய முகவரி :

N. SAMUEL
Editor "Deva Ekkalam"
Post Box No. 6,
Kotagiri - 643 217
Nilgiris.

தேவன் தெரிந்துகொண்ட பாத்திரம் (அப் 9 : 15)

சகோதரன் பக்தசிங் (1903 - 2000)

இந்த ஆண்டின் (2000) செப்டம்பர் மாதம் 20 ஆம் தேதி ஆந்திர மாநிலம் ஐதராபாத் பட்டணத்திலுள்ள நாராயணாகுடா கல்லறைத் தோட்டத்தை 6 லட்சம் மக்கள் கொண்ட மனித கடலானது சற்றும் இடைவெளியில்லாமல் முற்றுகையிட்டிருந்தது. அத்தனை பெரிய ஜன சமுத்திரம் தங்கள் இறுதி அன்பையும், மரியாதையையும் காலஞ்சென்ற சுவிசேஷகரும், இந்தியாவின் முதல் உள்நாட்டு திருச்சபையை தோற்றுவித்த வருமான சகோதரன் பக்தசிங் அவர்களுக்கு செலுத்துவதற்காக அங்கு குழுமியிருந்தது. ஆந்திராவின் ஐதராபாத், செக்கந்திராபாத் ஆகிய இரட்டை பட்டணங்களிலுள்ள மக்களும் இதர இந்திய மாநிலங்களின் கிறிஸ்தவ மக்களும், உலகெங்குமுள்ள 40 நாடுகளிலிருந்து வந்த தேவமக்களும் மிகுந்த அமைதியுடன் அங்கு கூடியிருந்தனர். கல்லறைத் தோட்டத்துக்குச் சென்று தேவ ஊழியனின் அடக்கத்தை ஜனத்திரளின் காரணமாக நேரில் காண இயலாத ஏக்கங்கொண்ட மக்கள் அடக்க ஆராதனையை தொலைக்காட்சியில் காணும் பொருட்டாக 30 வழித்தடங்களில் அவரது அடக்க ஆராதனையை டிவி. மூலமாக ஒளி பரப்பிக் கொண்டிருந்தனர்.



வரவர கூடித்திரண்டு பெருகிக் கொண்டிருக்கும் ஜன சமுத்திரத்தைக் கண்டு, சகோதரன் பக்தசிங்கின் இளைய சகோதரன் சாப்பர்சிங் என்பவர் ஆச்சரியத்தால் பிரமிப்படைந்தார். சாப்பர்சிங், டில்லி மாநகரத்தின் முன்னாளைய முனிசபல் கமிஷனர் ஆவார். தனது உடன் பிறந்த சகோதரனைக் குறித்து சாப்பர்சிங் கொடுத்த சாட்சி அந்த பெரும் ஜனத்திரளை வெளிப்படையாக கர்த்தருக்குள் பிரமிக்க வைத்தது.

சகோதரன் பக்தசிங் தனது பூவுலக வாழ்வில் எத்தனை எளிமையானவராகவும், தாழ்மையானவராகவும் இருந்தாரோ

அதேவிதமாகவே அவரது மரணமும், அடக்கமும் எளிமையாகவே அமைந்திருந்தது. அவரது சவப்பெட்டியின் மேல் எந்தவித மலர் மாலைகளோ அல்லது வாசனை திரவியங்களோ நறுமணம் வீசும்படியாக ஊற்றப்படவில்லை. எல்லா கனம், புகழ்ச்சி, மகிமை, அலங்காரத்துக்கு பாத்திரமானவர் தேவன் ஒருவர் மாத்திரமே என்று சகோதரன் பக்தசிங் விசுவாசித்தமையால் அப்படி செய்யப்பட்டிருந்தது.

97 வயதினரான சகோதரன் பக்தசிங் எல்லா காலத்துக்குமுரிய ராட்சத பரிசுத்தவானாவார். 17-9-2000 ஆம் ஆண்டு காலை 6 மணிக்கு ஐதராபாத்திலுள்ள "எபிரோன்" என்ற தமது இருப்பிடத்தில் தனது அன்பின் ஆண்டவருடைய பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார். அவருடைய மரணத்தின் மூலம் கிறிஸ்தவ உலகம் ஒரு மாபெரும் ஆவிக்குரிய தேவமனிதரை இழந்து நிற்கின்றது. அவர் ஒரு சுவிசேஷகர், வேதபண்டிதர், வேதாகம ஆசிரியர், தீர்க்கத்தரிசி, தற்கால கிறிஸ்தவ உலகின் அப்போஸ்தலன் என்று இந்தியாவில் மட்டுமன்றி முழு உலகிலும் கனப்படுத்தப்பட்டவர். இந்திய சரித்திரத்தில் பல்வேறு வாழ்க்கை நிலைகளிலுள்ள பல்லாயிரக்கணக்கான மக்களை சுவிசேஷத்தின் மூலமாக சந்திக்கும்படியாக தேவன் அவரை அற்புதமாக பயன்படுத்தினார்.

இந்தியாவில் உள்நாட்டு திருச்சபையை முதன்முதலாவதாக அவர் நிறுவினார். சகோதரன் தனது முதல் சபையை 1941 ஆம் ஆண்டு சென்னையில் தோற்றுவித்தார். இப்பொழுது அவரது சபைகள் இந்தியாவில் 1400 இடங்களிலும், பாக்கிஸ்தான், ஸ்ரீலங்கா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, இங்கிலாந்து இன்னும் உலகின் பல்வேறு நாடுகளிலும் உள்ளன.

இத்தனை இடங்களில் சபைகளை தோற்றுவித்த மேற்கண்ட தேவமனிதரின் பெயருக்கு முன்பதாக டாக்டர் (பண்டிதர்) அல்லது பாஸ்டர் அல்லது ஆயர் அல்லது பேராயர் அல்லது பெரும்பேராயர் என்ற எந்த ஒரு பட்டங்களும் கிடையாது என்பதை நாம் நன்கு கவனிக்க வேண்டும். சகோதரன் பக்தசிங் என்றே அவர் அன்பொழுக அனைவராலும் அழைக்கப்பட்டார்.

தற்போது பாக்கிஸ்தான் நாட்டிலுள்ள சர்கோடா என்ற இடத்தில் வைராக்கியமான சீக்கிய குலத்தில் 1903 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6 ஆம் தேதி பக்தசிங் பிறந்தார். அவர் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த

நாட்களில் கிறிஸ்தவ மக்களை வேடிக்கை பொருளாக எண்ணி அவர்களை பரிகாசம் செய்தார். பள்ளியில் தனக்கு கொடுக்கப்பட்ட பரிசுத்த வேதாகமத்தை தாள்தாளாக கிழித்து தூரமாக வீசி எறிந்து கிறிஸ்தவ மார்க்கத்துக்கு எதிராகவுள்ள கடுமையான கசப்பை அவர் வெளிப்படையாக காண்பித்தார்.

பஞ்சாப் சர்வகலாசாலையில் அவர் பட்டம் பெற்றபின்னர் தனது விவசாய பொறியியல் படிப்புக்காக அவர் இங்கிலாந்து தேசம் சென்றார். இங்கிலாந்து சென்ற அவர் வெகு துரிதமாகவே உலகஉல்லாச வாழ்க்கையால் முற்றுமாக கவர்ந்திழுக்கப்பட்டார். அதின் காரணமாக அவர் சீக்கியர்களால் மிகவும் புனிதமாக கருதப்படும் அவரது தாடி, தலைமயிர் யாவையும் கத்தெறிந்து விட்டு தனது சீக்கிய தலைப்பாகையையும் தன்னை விட்டு அகற்றிவிட்டார்.

ஆனால் ஆச்சரியமான காரியம் என்னவெனில், எந்த கிறிஸ்தவ மக்களை கேலி பரிகாசம் செய்து அவர்களை வேடிக்கைப் பொருளாக எண்ணி வெறுத்து ஒதுக்கினாரோ அந்த வேடிக்கை கிறிஸ்தவர்களின் கடவுளான கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை தன்னையறியாமல் ஒருநாள் ஒரு கிறிஸ்தவ கூட்டத்தில் வாயார புகழ்ந்து போற்றி துதித்துக்கொண்டிருந்தார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அவர் தனது இதயநாயகராக அங்கு ஏற்றுக்கொண்டார். யோவான் 3 : 16 ஆம் வசனத்தை அவர் முதன் முறையாக வாசித்தபோது இயேசு இரட்சகர் தமது சரீரத்தை நொறுக்கி தமது விலையேறப்பெற்ற இரத்தத்தை பாவியாகிய தன்னை தனது பாவங்களிலிருந்து ஈடேற்றி மீட்க சிந்தினார் என்பதை அவர் தன்னளவில் முழுமையாக விசுவாசித்தார். தனது விவசாய பொறியியல் பட்டப்படிப்பை 1933 ஆம் ஆண்டு முடித்த பக்தசிங் தனது கர்த்தரின் திட்டமான அழைப்புக்கிணங்க தனது சொந்த தேசத்தின் மக்களை சுவிசேஷத்தால் சந்திக்கும்படியாக இந்தியாவுக்கு புறப்பட்டு வந்தார்.

ஒரு நாள் சுவற்றின் மேல் தொங்கிக் கொண்டிருந்த இந்திய தேசப்படத்தை அவர் கண்டார். அதிலிருந்து வந்த ஒரு சத்தத்தை அவர் கேட்டார். "நீ எனக்கு ஊழியம் செய்ய விரும்பினால் சிலுவையில் உன் வாழ்க்கையை அர்ப்பணம் செய்" என்பதே அந்த தேவ சத்தம். அந்த தேவ குரலுக்கு கீழ்ப்படிந்தவராக தனது வாழ்க்கையை சிலுவையில் தத்தம் செய்தார். அந்த நாள் தொடங்கி கிறிஸ்துவின் பணிக்காக தேவன் ஒரு

பெரிய திட்டத்தை இந்தியாவில் தனக்கு வைத்திருக்கின்றார் என்பதை அவர் ஆழமாக உணர்ந்தார். சீக்கிய மதமா அல்லது கிறிஸ்தவ மதமா இவை இரண்டில் ஒன்றை தெரிந்து கொள் என்பதாக அவரிடம் கேட்கப்பட்டது. இவர் கிறிஸ்தவத்தை தெரிந்து கொண்டபோது அவருக்கு கிடைத்த பதில் வீட்டைவிட்டு துரத்தியடிக்கப்பட்டார். எனினும், சகோதரன் பக்தசிங் அவர்களின் கிறிஸ்துவுக்குள்ளான பிரகாசமான பரிசுத்த வாழ்வின் மாற்றத்தை கவனித்த அவரது குடும்பத்தினர் அவரை திரும்ப தங்களுடன் ஏற்றுக்கொண்டு அவர்களும் இரட்சகர் இயேசுவின் அடிமைகளானார்கள். அவரது தகப்பனார் கர்த்தரை தனது சொந்த இரட்சகராக ஏற்று தனது சொந்த குமாரனான பக்தசிங்கின் கரங்களால் 25-12-1945 ஆம் தேதி ஞானதீட்சை பெற்று சில மாதங்களிலேயே தேவனுடைய நித்திய இளைப்பாறுதலுக்குள் கடந்து சென்றார்.

சகோதரன் பக்தசிங் சென்ற இடங்களில் எல்லாம் தேவன் அவரை அற்புதமாக பயன்படுத்தி உயிர்மீட்சிகளை கட்டளையிட்டார். சகோதரன் அவர்கள் நல்ல போராட்டத்தை போராடி, ஓட்டத்தை முடித்து, விசுவாசத்தைக் காத்துக் கொண்ட தேவபக்தன் ஆவார். ஒரு பெரிய தேவமனிதனாகவும், ஒரு ஜெப வீரனாகவும், வல்லமையுள்ள பிரசங்கியாகவும் தேவ மக்களால் அவர் என்றும் நினைக்கப்படுவார் ான்பதில் எவ்வளவும் சந்தேகம் இல்லை. தேவனுக்கே மகிமை.

சகோதரன் வாழ்விலிருந்து சில பொறுக்கு மணிகள்

வீடுவாசலற்ற நிலையில் பம்பாய் பட்டணத்தில்

1933 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 6 ஆம் தேதி நான் பம்பாய் வந்து சர்ந்தேன். நான் என் உள்ளத்தில் ஏற்றுக்கொண்ட கிறிஸ்தவ மார்க்கத்தை நான் என்னளவில் இரகசியமாக வைத்துக்கொள்ளாத காரணத்தால் எனது தாய்தந்தையர் என்னைத் தங்கள் வீட்டில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை அறிந்த நான் பம்பாயில் எனது தேவ ஊழியத்தை ஆரம்பித்தேன். பட்டணத்தின் ஒரு மூலையில் எனது மூட்டை முடிச்சை வைத்துவிட்டு பட்டணத்தின் தெருக்களிலே எனது சுவிசேஷ கைப்பிரதி விநியோக ஊழியத்தை ஆரம்பித்தேன். எனது இந்தக் கைப்பிரதி ஊழியம் காலை தொடங்கி அந்த நாளின் நள்ளிரவு வரை நீண்டு செல்லும். என்னிடத்தில் கைப்பிரதி வாங்கும் யாராவது ஒருவர்

"உனக்கு சம்மதியானால், அதோ அந்த ஓட்டலுக்கு நாம் சென்று இந்த கைப்பிரதி குறித்து பேசலாமா?" என்று கேட்பார். நாங்கள் இருவரும் அந்த ஓட்டலுக்குச் சென்று பேசி சம்பாஷித்து முடித்த பின்னர் அவர் எனக்கு ஒரு கோப்பை டீ வாங்கி கொடுப்பார். அந்த ஒரு கோப்பை தேயிலை பானமே பெரும்பாலும் எனது காலைச் சாப்பாடாகவும், மத்தியான ஆகாரமாகவும், இராச்சாப்பாடாகவும் கூட அநேக நாட்கள் இருந்ததுண்டு. இந்தவிதமாக எனது கைப்பிரதி ஊழியம் 7 வார காலமாக பம்பாயில் நடந்தது.

இரட்சிப்பைக்குறித்த காரியத்தை யாராவது அறிந்துகொள்ள விரும்பினால் நான் அவர்களை தெரு ஓரத்திலுள்ள விளக்கு கம்பத்தின் கீழே அழைத்து வந்து இரா முழுவதும் அந்த காரியத்தை அந்த ஆத்துமாவுக்கு விவரித்துக் கூறுவேன். சில சமயங்களில் எங்களது சம்பாஷணை அதிகாலை 2 மணி வரை கூட நீடிக்கும். சத்திய வேதாகமத்திலிருந்து இரட்சிப்பின் வழியைக் குறித்த தேவ வசனங்களை என்னைக் கடந்து சென்ற இந்துக்களுக்கும், முகமதியர்களுக்கும் எடுத்துக் கூறினேன். பம்பாய் பட்டணத்தின் தெருக்களே எனது வீடாகவும், தெரு விளக்கு கம்பங்களே எனது ஒளிவிளக்காகவும் இருந்தது. அந்த விளக்கு கம்பத்தின் கீழேதான் எனது அமைதி ஜெப தியான நேரமும் கழிந்தது. எனினும் அந்த கஷ்டமான நாட்கள் எனது வாழ்வின் மிகவும் மனமகிழ்ச்சியான நாட்களாகும். அந்த நாட்களுக்காக நான் ஆண்டவருக்கு துதி ஸ்தோத்திரம் ஏறெடுக்கின்றேன். அந்த தினங்களில் கர்த்தராகிய இயேசு இரட்சகர் எனக்கு மிகவும் அருகில் இருந்து என்னை தமது மார்போடு அரவணைக்கும் அன்பராக இருந்தார்.

கராச்சி பட்டணத்தில் ஆத்தும ஆதாயப்பணி

ஒரு நாள் நள்ளிரவு ஒரு மணி இருக்கும். மிகுந்த களைப்போடு நான் எனது படுக்கைக்கு செல்ல ஆயத்தமானேன். அந்தச் சமயம் "எழுந்து வெளியே செல்" என்ற ஒரு வார்த்தை தொனிப்பதை நான் கவனித்தேன். அப்பொழுது "நான் மிகவும் களைப்பாக இருக்கின்றேன். எனது கால்கள் இரண்டும் நோவு எடுத்துக் கொண்டு இருக்கின்றன. எனக்குள்ளாக நித்திரை மயக்கமாக இருக்கின்றேன்" என்று பதில் கூறினேன். ஆனால், திரும்பவும் அந்தக் குரல் "எழுந்து வெளியே செல்" என்று தொனித்தது. உடனே, நான் எனது மேல் கோட்டைப் போட்டுக்கொண்டு கராச்சி

பட்டணத்தில் வாழும் பற்பல மொழி பேசும் மக்களுக்கு தேவையான பற்பல மொழிகளில் எழுதப்பட்ட சுவிசேஷ துண்டுப்பிரதிகளை எனது கோட்டுப் பைகளுக்குள் எடுத்து வைத்துக் கொண்டு பட்டணத்துக்குள் கிளம்பினேன்.

நான் சற்று நேரம் பட்டணத்தின் வீதியில் சென்று கொண்டிருக்கையில் அந்த நள்ளிரவு நேரம் எனக்கு முன்பாக இரண்டு வாலிபர்கள் நடந்து சென்று கொண்டிருந்தனர். நான் அவர்களைக் கூப்பிட்டு "தயவுசெய்து நில்லுங்கள். நான் உங்களிடம் சொல்ல வேண்டிய ஒரு காரியம் உள்ளது. என்று சொன்னேன். அவர்கள் நின்றதும் நான் அவர்கள் அருகில் சென்று நான் படுப்பதற்காக சற்று நேரத்திற்கு முன் சென்றபோது, நான் வெளியே போகும்படியாக என்னிடம் பேசுகிற கடவுளுடைய குரலைக் கேட்டேன். உங்களை சந்திக்கும்படியாகவே கடவுள் என்னை அனுப்பி இருக்கின்றார்" என்று கூறினேன். அதைக் கேட்ட அவர்கள் உண்மைதான், கடவுள் உன்னை எங்களிடம் அனுப்பி உள்ளார் என்பதை நாங்கள் நம்புகின்றோம். இரவின் இந்த மணி நேரம் வீட்டை விட்டு வெளியே வருவது என்பது கடவுளின் செயல்தான் அந்தக் கடவுளுடைய செய்தியை நீ எங்களுக்கு சொல்லு என்று கூறினார்கள். உடனே, நான் எனது வேதாகமத்தை திறந்து சில வேத பகுதிகளை அவர்களுக்கு வாசித்து காண்பித்த பின்னர் எனது மனந்திரும்புதலின் சரித்திரத்தை அவர்களிடம் பகிர்ந்து கொண்டேன். அந்த வாலிபர்களில் ஒருவன் குல்கர்னி என்பவன் "கடவுள் உன்னை எனக்காகவே அனுப்பி இருக்கின்றார்" என்று கூறி எனது அனுபவ சாட்சியையும், தேவ வசனங்களையும் ஆவலோடு கேட்டு ஒரு வேதப்புத்தகத்தையும் என்னிடமிருந்து விலைகொடுத்து வாங்கிச் சென்றான். அத்துடன் கர்த்தராகிய இயேசு இரட்சகரையும் முழு மனதோடு அந்த நள்ளிரவில் விசுவாசித்தான்.

ஒரு நூதனமான நாணயம்

நான் மேல்நாட்டில் இருந்த சமயம் ஒரு நாள் எனது அருமை தாயாருக்கு கடிதம் எழுத வேண்டுமென்று என் உள்ளத்தில் ஒரு பலமான உணர்வு உண்டாயிற்று. கடிதம் எழுத தேவையான காகிதம் மற்றும் தபால் தலைகள் வாங்க என் கைவசம் எந்த ஒரு பணமும் இல்லை. அதற்காக நான் முழங்காலூன்றி தேவசமூகத்தில் ஜெபித்தேன். எனது முழங் கால்களிலிருந்து நான் எழுந்தபோது எனது பைகள் ஒன்றில் ஒரு சிறிய

நாணயம் இருப்பதை நான் கண்டுபிடித்தேன். தபால் தலைகள் வாங்க இந்த சிறிய நாணயம் போதுமானதாக இருக்குமா என்ற பலமான சந்தேகம் எனக்கு இருந்தபடியால் ஒரு சிறுவனை அழைத்து அந்த நாணயத்தைக் கொடுத்து முத்திரைகள் வாங்கிக் கொண்டு வரும்படியாக அவனை அனுப்பினேன்.

அந்த சிறுவனிடம் நான் அந்த நாணயத்தை கொடுத்ததை கவனித்த ஒரு ஸ்திரீ அந்தக் காசை அந்தப்பையனிடம் ஏன் கொடுக்க வேண்டும் என்று என்னைக் கேட்கத் தொடங்கினாள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. மிகவும் வெட்கத்துடன் நான் அந்த அம்மாவிடம் மன்னிப்புக் கேட்டு எனக்குள்ள ஐவேசு எல்லாம் அந்த சிறிய நாணயம் மட்டுமேதான் என்று விடை பகிர்ந்தேன்.

அது ஒரு தங்க நாணயம் என்றும் அந்த தங்க நாணயத்தை அவள் பார்த்து அநேக ஆண்டுகள் ஆகிவிட்டன என்றும் அந்த அம்மாள் என்னிடம் கூறினார்கள். அந்த தங்க நாணயம் எனது சட்டைப் பைக்குள் வரவேண்டிய அவசியம் இல்லை என்றும், நிச்சயமாக அது ஒரு செம்பு காசு மட்டுமேதான் என்று நான் அந்த அம்மாவிடம் வாக்குவாதம் செய்தேன். ஆனால் அந்த அம்மாள் என்னை விடவில்லை. முழு நிச்சயமாக அது ஒரு தங்க நாணயம்தான் என்று திட்டமாக சொன்னார்கள். அவர்களுடைய வார்த்தையின்படி அது ஒரு தங்க நாணயமாகத்தான் இருந்தது. என்னுடைய பைக்குள் அந்த தங்க நாணயம் எப்படி வந்தது என்று உங்களுக்கு கூற என்னால் இயலாது. ஆனால், என்னை தமக்கென ஆட்கொண்ட அன்பின் தேவன் அந்த நாளின் எனது அத்தியந்த தேவையை அவ்வாறாக சந்தித்தார்.

புதிய சப்பாத்துக்கள்

கனடா தேசத்திலே குளிர் காலம் மிகவும் கடுமையாக இருக்கும். அந்த நாட்களிலே அங்கிருந்த நான் இரவிலும், காலை வேளையிலும் கர்த்தர் என்னை அனலாக (சூடாக) வைத்துக் கொள்ளும்படியாக ஜெபித்து வந்தேன். காரணம், கம்பளிச் சட்டை, கம்பளி கோட், கம்பளி துண்டு வஸ்திரம் (மஃப்ளர்) எதுவும் வாங்க என்னிடம் பணம் கிடையாது. இரவிலே நான் படுத்திருக்கும்போது எனது முழங்கால்கள் இரண்டையும் எனது நெஞ்சின் மேல் வைத்துக்கொண்டு என்னை நானே சூடுண்டாக்கிக் கொள்ளும்படியாக அப்படி படுத்திருப்பேன். நான் இவ்விதமான

நிர்ப்பந்தமான நிலையில் படுக்க வேண்டுமென்பது தேவனின் மறைவான திட்டமாக இருக்கலாம் என்று நான் எனக்குள்ளாக யூகித்துக் கொண்டு எனது பாடுகளை பொறுமையோடு சகித்தேன்.

எனது சப்பாத்துக்குக் கீழாக அடிப்பாகத்தில் பெரிய துவாரங்கள் இருந்தன. அந்த ஓட்டை சப்பாத்துக்களை நான் போட்டுக்கொண்டு தினமும் பல மைல்கள் தூரம் நான் நடக்க வேண்டியதாக இருந்தது. இந்த நிர்ப்பந்தமான நிலையில் கர்த்தர் எனக்கு புதிய, நல்ல உறுதியான சப்பாத்துக்களை தரும்படியாக நான் அவரிடம் உள்ளம் கசிந்து ஜெபித்தேன். ஒரு குறிப்பிட்ட நாளில் நான் ஒரு கனவானை சந்திக்க வேண்டியதாக இருந்ததால் நான் எனது பொத்தலான சப்பாத்துக்களை மிகவும் பளபளவென்று மெருகேற்றி பாலீஷ் போட்டு எனது கால்களில் அணிந்து கொண்டு அவரது அலுவலகத்திற்கு சென்றிருந்தேன். எங்களது சம்பாஷணை நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் அந்த கனவான் இடைமறித்து "நான் உனக்காக ஒரு ஜோடி புதிய சப்பாத்து வாங்கிக் கொடுத்தால் நீ வேண்டாமென்று சொல்லாமல் அதை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். ஒரு ஜோடி புதிய சப்பாத்து வாங்கிக் கொள்ளும்படியாக ஒருவர் எனக்கு பணம் கொடுத்தார். அதை நான் உனக்கே தருகின்றேன்" என்று சொன்னார். இவ்விதமாக அன்பின் கருணாகர தேவன் எனக்கு ஒரு ஜோடி உறுதியான புதிய சப்பாத்துக்களை அந்த கனவானைக் கொண்டு எனக்கு வாங்கிக் கொடுக்க கிருபை செய்தார்.


வாசிப்போனே, தேவன் உன்னை ஒருக்காலும் கைவிடமாட்டார்

வானத்தையும், பூமியையும் படைத்த கர்த்தர் தமது வல்லமையுள்ள புயத்தால் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு வருடமும் என்னை ஆச்சரியம், அற்புதமாய் வழிநடத்தி வந்திருப்பதை நான் உங்களுக்கு சொல்லிக்கொண்டே போகலாம். அந்த அதிசய கர்த்தர் இன்றும் மாறாதவராக இருக்கின்றார். சத்துருவாகிய பிசாசு உன்னை அதைரியப்படுத்த இடம் கொடாதே. உன்னை இரட்சித்தவர் ஜீவிக்கிற கர்த்தராக உன்னோடு வாழ்கின்றார். உன்னுடைய பாவங்களை மன்னித்து உன்னைத் தனது சொந்தமாக அவர் ஏற்றுக்கொண்டிருக்கும் பட்சத்தில் ஒருக்காலும் அவர் உன்னைக் கைவிடார். உனது வாழ்வின் ஒரு காலக்கட்டத்தில் நீ துன்ப துயரங்கள், பாடுகள், வறுமை, வியாதியின் ஊடாக நீ பயணம் செய்ய வேண்டியதாயிருப்பினும் அதிலும் ஒரு மேலான

தேவ நோக்கம் உண்டு என்பதை நீ உணர்ந்து உன் ஆண்டவரின் பலத்த கரத்துக்குள் அடங்கியிரு. அவரது அன்பின் கரம் தொடர்ந்து உன்னை வழிநடத்த இடங்கொடு. உனக்குள்ளாக நன்கு நிச்சயப்படுத்திக்கொள். தேவன் உன்னை ஒருக்காலும் கைவிடமாட்டார்.

கிறிஸ்தவ வாழ்வில் கஞ்சத்தனம்

இந்த உலக வாழ்வில் ஐசுவரியவான்களாக விரும்புகிற மக்கள் பொதுவாக யாருக்கும் இட்டு ஈயாமல், கல் நெஞ்சினர்களாக இருந்து பணம் சம்பாதிப்பதை நாம் காணலாம். வயிறார உண்ணாமல், உடுத்தாமல், தங்களுடைய நியாயமான தேவைகளுக்கு கூட பணத்தை செலவிடாமல் மிகுந்த கஞ்சத்தனம் செய்து பணங்களை ரகசியமாக சேர்த்துக் குவிப்பதை நமது கண்கள் காண்கின்றன. அப்படிச் சேர்த்தால் தான் பணக்காரர்களாக முடியும் போலத் தெரிகின்றது!



எல்லாரையும் நான் இங்கு குறிப்பிடவில்லை. ஆண்டவருடைய ஊழியங்களுக்கும், ஏழை எளியோருக்கும் வாரிவழங்கி ஐசுவரியவான்களாக இருக்கும் பரிசுத்த தேவ மக்கள் நம் மத்தியில் உள்ளனர். கர்த்தர் இயேசுவுக்கே துதி உண்டாவதாக.

இந்த முழு உலகிலும் மிகப் பெரிய செல்வந்தர் 1947 ஆம் ஆண்டு எடுத்த கணக்கின்படி நமது இந்தியாவின் ஹைதராபாத்தை அரசாண்ட நிஜாம் மன்னர்தான். அவரது பொருள் சேர்க்கும் பேராசையும், அதை செலவிட மனம் இல்லாத அவரது கஞ்சத்தனமும் உலகப்பிரசித்தமானது.

அவருடைய கஞ்சத்தனத்தைக் குறித்து 6 வருடங்களுக்கு முன்னர் ஒரு தமிழ் மாதாந்திர பத்திரிக்கையில் (மஞ்சரி) வெளிவந்த செய்தியை கீழே தருகின்றேன் :-

"1947 ஆம் வருடத்தில் உலகிலேயே மிகப்பெரிய செல்வந்தர் என்று புகழ் பெற்றவர்", ஹைதராபாத்தை ஆண்ட நிஜாம் மன்னர். அவரது செல்வத்தைப் போலவே, அவரது பொருள் சேர்க்கும் பேராசையும், அதைச் செலவிட மனம் இல்லாத கஞ்சத்தனமும் பிரசித்தம் ஆனவை.

கசங்கிய பருத்திப் பைஜாமாவும், உள்ளூர்க் கடைகளில் வாங்கிய, மலிவான நைந்துபோன காலணியும்தான் அவர் எப்போதும் அணிந்திருப்பார். முப்பத்தைந்து ஆண்டுகளாக அதே சிக்குப் பிடித்த நைந்த உடைகளையே அவர் அணிந்திருந்தார். 100 இடங்களில் அவருக்கு தங்கக்கிடங்குகள் இருந்தும், தகரத்தட்டில் சாதாரணப் பாய் மீது அமர்ந்து தான் அவர் தமது தினசரி உணவை உண்டார்.

அவரது கஞ்சத்தனத்தின் சிகரம் எதுவென்றால், விருந்தாளிகள் வந்து போன பின், அவர்கள் புகைத்துப்போட்ட சிகரெட் துண்டுகளைப் பொறுக்கி எடுத்து புகைப்பதுதான். அரசாங்க விருந்துகளில், விலை மதிப்புள்ள ஷாம்பெய்ன் (மது) பரிமாறுவதற்கு அவருக்கு விருப்பமே இராது. ஒரே சின்ன பாட்டில்தான் அவ்வளவு விருந்தினருக்கும் - அதுவும் வேண்டா விருப்பாக.

1944 ஆம் ஆண்டில் வைஸ்ராய் வேவல் பிரபு நிஜாமின் அரண்மனைக்கு பார்வையிட வரவிருந்தபோது, நிஜாம் டில்லிக்கு கேபிள் போட்டு விசாரித்தார் : "வைஸ்ராய் ஷாம்பெய்ன் (மது) பரிமாற வேண்டும் என்று வற்புறுத்தக் கூடியவரா,"

அப்போது பல சமஸ்தானங்களில், சமஸ்தானத்துக்குக் கீழ்ப்பட்ட பிரபுக்கள் ஆண்டுக்கு ஒரு முறை கண்டு கொள்ள வரும்போது, ஆளுக்கு ஒரு தங்க காசை, மரியாதையின் அடையாளமாகச் சமர்ப்பிப்பது உண்டு. சமஸ்தானாதிபதி அதைத் தொட்டு அங்கீகரித்துவிட்டு, திருப்பி கொடுத்து விடுவது மரபு. ஆனால், இந்த மரபெல்லாம் நிஜாம் சமஸ்தானத்தில் இல்லை. நிஜாம் இந்த பொற் காசுகளை எடுத்து தனது பைக்குள் போட்டுக் கொண்டு விடுவார். ஒரு தடவை அப்படிப் போடும்போது கை தவறி ஒரு காசு கீழே விழுந்துவிட்டது. உடனே நிஜாம் தரையில் மண்டியிட்டுக் குனிந்து தேடி, உருண்டோடிய அந்தத் தங்க காசைக் கண்டு பிடித்த பிறகே எழுந்தார்.

அவரது கஞ்சத்தனத்திற்கு மற்றுமொரு உதாரணம், பம்பாயி லிருந்து அவருக்குச் சிகிச்சை செய்ய வந்த டாக்டர்களின் அனுபவம்.

நெஞ்சுவலியால் அவதிப்பட்ட அவருக்கு எலக்ட்ரோ கார்டியோ கிராம் சோதனை செய்ய வேண்டியதிருந்தது. என்ன முயன்றும் நன்றாகச் செய்த கருவி அப்போது வேலை செய்யவில்லை. டாக்டர்கள் தவித்துப் போய், கடைசியில் கண்டு பிடித்தார்கள். மின்சார கட்டண பில்லுக்குப் பயந்து, மின் இணைப்பை நிஜாம் துண்டித்து விட்டிருந்தார்!

நிஜாம் மன்னரின் படுக்கை அறை ஒரு குப்பத்துக் குடிசை மாதிரி தோற்றம் தரும். நைந்துபோன பழைய படுக்கை, நொடிக்கும் கட்டில், மேஜை, மூன்று அழுக்கான நாற்காலிகள், நிரம்பி வழியும் ஆஷ்டிரேக்கள் (புகைத்த சிகரெட்டுகளைப் போடும் கிண்ணங்கள்) ஆண்டுக்கு ஒரு முறை நிஜாமின் பிறந்த நாள் அன்று மட்டும் காலி செய்யப்படுகிற குப்பைக்கூடைகள் என்று அவரது அறை ஒரே தூசும் தும்புமாய், ஒட்டடை படிந்து காட்சி தரும்.

ஆயினும் அந்தக் குப்பைகள் நிறைந்த அறையில் விலைமதிப்பற்ற பொருட்கள் மறைந்து கிடக்கும். நிஜாமின் டெஸ்க் இழுப்பறையில் விலை மதிப்பற்ற எலுமிச்சம் பழ அளவிலான 280 காரட் எடையுள்ள ஜேக்கப் வைரம் வைக்கப்பட்டிருந்தது. பேப்பர் வெயிட்டாக நிஜாம் அதை பயன்படுத்தி வந்தார்.

ஒழுங்காக பராமரிக்கப்படாது, மண்டிக்கிடந்த அவரது பூத்தோட்டத்தில் டஜன் கணக்கில் டிரக்குகள் தங்கப் பாளங்களைச் சுமந்து கனம் தாங்க முடியாமல் மண்ணில் புதைந்தபடி நின்றிருக்கும்.

நிஜாம் மன்னர் சேகரித்த பொன், மணி ஆபரணங்கள் கணக்கிட முடியாதவை. அவரிடமிருந்த முத்துக்கள் மட்டுமே, பிக்கடில்லி சர்க்கசின் பாதை முழுவதும் பரப்பினாலும் மாளாதவை. அவரது நிலவறைக்குள் வைரமும், மரகதமும், நீலமும், ரத்தினமும் நிலக்கரிச் சுரங்கத்தில் அடைந்து கிடக்கிற நிலக்கரி போலக் குவியல் குவியலாக கிடந்தன. அவரிடம் 2 மில்லியன் பவுண்ட் பணமாகவும், ஸ்டர்லிங், ரூபாய் நோட்டுக்களாகவும் பழைய செய்தித் தாட்களில் சுருட்டப்பட்டு, ஜன்னல் கதவுகளுக்கு அடியில் உள்ள திறந்த ஷெல்புகளில் குப்பையோடு குப்பையாய் கிடந்தன. அங்கே திரிந்த எலிகளது கூர்மையான பற்களின் தினவுக்கு இரையானது ஆயிரக்கணக்கான பவுண்டுகள் மதிப்புள்ள நிஜாமின் செல்வம் என்றால் மிகையில்லை" (மஞ்சரி)

தனது லட்சக்கணக்கான ரூபாய் நோட்டுகளை வீட்டில் சுற்றி அலையும் எலிகள் வெட்டி நாசப்படுத்தும்போது நிஜாம் மன்னர் மற்றவர்கள் புகைத்துப்போட்ட சிகரெட் துண்டுகளை பொறுக்கி எடுத்து புகைத்திருக்கின்றார் என்றால் நமக்கு ஆச்சரியமாக இருக்கின்றது. அதுமட்டுமல்ல ஒரே பைஜாமாவை 35 வருடங்கள் உடுத்தியிருக்கின்றார். கஞ்சர்களுக்கெல்லாம் மேலாக தனிப்பெரும் கஞ்சனாக அவர் வாழ்ந்து மறைந்திருக்கின்றார்.

மேலே நாம் பார்த்த நிஜாம் மன்னருடைய கஞ்சத்தனத்தை போல கஞ்சத்தனம் காண்பிக்காத போதினும் கிறிஸ்தவ மக்களில் அநேகர் வேறு விதங்களில் அதைக்கடைப்பிடித்து வருகின்றனர்.

கணவனும், மனைவியும் கைநிறைந்த அரசாங்க சம்பளங்களை மாதந்தோறும் பெற்றபோதினும் மற்றவர்கள் பயன்படுத்தி விற்பனைக்கு கொடுத்துவிட்ட பழைய வஸ்திரங்களை வாங்கி உடுத்துவதும், சந்தை கூடி முடிந்த பின்னர் கழித்துப்போட்ட தரமற்ற காய்கறிகளை வாங்கி பயன்படுத்துவதும், முதிர் வயதான தங்கள் பெற்ற தாய் தந்தையர்க்கு கொடுக்க வேண்டிய ஆதரவுகளை கொடுக்காமல் அவர்களை பட்டினிப்போட்டு வதைப்பதும், அவர்கள் வீடுவீடாக சென்று பிச்சை எடுக்க வழிவகுத்து கொடுப்பதும், தானதர்மம், இரக்கம், கருணையின்றி அந்த மக்கள் வாழ்வதும் நமது கண்களால் காணும் காரியங்களாகும்.

கிறிஸ்தவ பத்திரிக்கைகளுக்கு போஸ்ட்கார்ட் எழுதிப்போட்டு ஆண்டு கணக்காக பத்திரிக்கை வாங்கி வாசித்து வந்தும் அந்தப் பத்திரிக்கைகளுக்கு சந்தா அனுப்பவே மாட்டார்கள். அப்படி அனுப்பினாலும் முழுச் சந்தா அனுப்ப மாட்டார்கள். அல்லது ஒரு வருட சந்தாவை அனுப்பி பல்லாண்டு காலமாக பத்திரிக்கையை இலவசமாக பெற்று வருவார்கள். இவை எல்லாம் அவர்களின் கஞ்சத்தனத்தின் ஒரு பகுதி காட்சிகளே ஆகும். இன்னும் விபரமாக எழுத இங்கு இடம் போதாது. பேருந்தில் குழந்தைக்கு அரை டிக்கெட் எடுக்காமல் கண்டக்டரிடம் சண்டைபோட்டு வயதுக்கு பொய் பேசுவார்கள். ரயில் பிரயாணத்தில் ஒன்றிரண்டு முழு டிக்கெட்டுகளையும் எடுக்காமல் தந்திரமாக பயணித்து வீடு வந்துவிடுவார்கள்.

இவர்களுடைய மட்டுக்கு மிஞ்சிய கஞ்சத்தனம் பொய் சொல்லவும், துணிந்து திருடவும் கூட இவர்களை வழிநடத்திச் செல்லுகின்றது.

சந்தைக்குச் சென்றால் தேங்காய் வாங்கிய இடத்தில் தேங்காய் வியாபாரி ஏதேச்சையாக தனது வியாபாரத்தை கவனித்துக்கொண்டிருந்த நேரம் பார்த்து ஒன்றிரண்டு தேங்காய்களை அப்படியே தூக்கி தங்கள் பெரிய பையில் போட்டுக் கொள்ளுகின்றனர். ஜவுளிக்கடைக்கு போனால் கடைக்காரரிடம் ஏதோ ஒரு துணியை எடுக்கச் சொல்லி அவர் அதை எடுத்துக் கொண்டிருக்கும் சமயம் பார்த்து பணப்பெட்டிக்கு அருகில் அடுக்கி வைத்திருந்த லுங்கிகளில் ஒன்றை லாவகமாக எடுத்து தங்களது பைக்குள் திணித்து வைத்துக் கொள்ளுகின்றனர். பெரிய கிறிஸ்தவ புத்தகக் கடைக்குச் சென்றால் தங்களை பெரிய பரிசுத்தவான்களாக காண்பித்து விலையுயர்ந்த கிறிஸ்தவ புத்தகங்களை களவாடி விடுகின்றனர். இந்த மக்கள் மற்ற மக்களிடம் கேட்டு வாங்கும் பொருட்கள், புத்தகங்கள், கேசட்டுகள், கடன்கள் எதையுமே திருப்பிக் கொடுப்பது இல்லை.

இவை எல்லாம் கற்பனையாக எழுதப்படும் காரியங்கள் அல்ல. முற்றும் உண்மையான நிகழ்வுகள். இப்படி பொய்கள் பேசி, திருடி, தங்கள் வாழ்வில் மட்டுக்கு மிஞ்சி கஞ்சத்தனம் காட்டி சம்பாதித்த செல்வங்கள் யாவும் காலப்போக்கில் அவர்களுக்கு ஒன்றுக்கும் உதவாமல் போய் விடும் என்பது தெரியாது (நீதி 10 : 2) பெருங் கஞ்சப்பிரபு நிஜாம் மன்னரின் செல்வம் யாவும் ஒரு நாள் இந்திய அரசாங்க கஜானா போய் சேர்ந்தது போல இம்மக்களின் சம்பாத்தியங்களும் வீணே மற்றவர்களின் உடமையாகின்றது.

இதற்கிடையில் வங்கிகளில் இம்மக்களின் சேமிப்பு தொகைகள் நிஜாமின் பூத்தோட்டத்தில் தங்கப் பாளங்களை ஏற்றிய டிரக்குகள் கனம் தாங்க முடியாமல் மண்ணில் புதைந்தபடி நின்றிருந்ததைப் போல வட்டிக்கு வட்டி ஏறி பல லட்சங்கள் கிடக்கும். இந்த மக்கள் அவ்வப்போது தங்கள் வங்கிகளின் பாஸ்புக்குகளை அப்படியே தங்கள் மட்டாக பார்த்து அதை முத்தமிட்டு பத்திரமாக வைத்துவிடுவார்கள். மாத சம்பளம் பெற்றதும் அதின் பெருந்தொகை அப்படியே வங்கிகளுக்குத்தான் போகும். ஒரு பக்கம் மாதாந்திர சீட்டுகளுக்கும் அது செல்லும். அங்கும் பெருந்தொகைகள் கிடக்கும். கத்திரி வட்டிக்கும் (அநியாய வட்டி) பணம் கொடுப்பார்கள்.

பெற்று வளர்த்த தாய் தந்தையர்க்கு ஜீவனாம்சம் கொடுக்காமல், கர்த்தருடைய சபைக்கு கொடாமல், தேவ ஊழியங்களுக்கு கொடுக்காமல், வாங்கும் கிறிஸ்தவ பத்திரிக்கைகளுக்கு சந்தா கொடாமல், ஏழை, எளிய

மக்கள், கைம் பெண்கள், விதவைகள், ஆதரவற்றோருக்கு தங்கள் கைகளை நீட்டாமல் கஞ்சத்தனம் பண்ணி பணங்களை சேர்த்து குவிக்கும் இந்த மக்கள் தேவ பக்தியை கவனித்திருக்கின்றீர்களா?

அப்பப்பா, வேத புத்தகம் இவர்களுக்கு தலைகீழ்ப்பாடம். வேத வசனங்கள் பலவும் மனப்பாடமாக இவர்களுக்கு தெரியும். முதல் மணி அடித்ததும் இவர்களின் கால்கள் ஆலய வாசல்படிகளில் இருக்கும். ஆனால், அந்த ஆலயத்தில் பொருட்கள் ஏலம் எடுத்த ஏலப்பாக்கித் தொகை நீண்ட நெடுங்காலமாக பாக்கியிருக்கும். காலை எழுந்ததும் ஜெபம், வேலைக்கு செல்லும் போது ஜெபம், திரும்பி வந்ததும் ஜெபம், அடுப்பில் பானையில் அரிசி போடும்போது ஒரு ஜெபம், சாப்பிடும்போது ஜெபம், கத்திரி வட்டிக்கு பணம் கொடுக்கும்போது ஜெபம், பேருந்து, இரயிலில் பயணிக்கும் முன் ஜெபங்கள். இவர்கள் வாழ்வே ஜெப வாழ்வாகத்தான் இருக்கும்.

பக்தி பரிசுத்தத்துக்கெல்லாம் இவர்களிடம் ஒரு குறைவும் இராது. பரிசுத்தம், பக்தி குறித்து நாம் இவர்களிடம் வாக்குவாதம் செய்ய இயலாது. நமது வாயை அடைத்துவிடுவார்கள். நமக்கு வேத பாடமே எடுக்கும் சமர்த்து இவர்களுக்கு உண்டு. அத்தனை சமர்த்தர்கள்! பக்தியில் புரண்டு உருண்டு கொண்டிருப்பவர்களாக நாம் இவர்களை காணலாம்.

ஆனால் அந்தோ! அவர்களுடைய எல்லை மீறிய கஞ்சத்தனம் அவர்களுடைய வாழ்வை எல்லாம் விழுங்கி ஏப்பமிட்டுவிடும். அவலட்சணமும் கேவலமுமான பசுக்கள் அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்களை எப்படி பட்சித்ததோ அவ்வண்ணமே கஞ்சத்தனமுள்ள கிறிஸ்தவர்களின் பக்தி பரிசுத்தத்தை எல்லாம் தேவன் அருவருக்கும் அவர்களின் கஞ்சத்தனம் பட்சித்துவிடும்.

ஒரு கிறிஸ்தவனுடைய எல்லா கிறிஸ்தவ பரிசுத்த பண்புகளையும் அவனுடைய கஞ்சத்தனம் அப்படியே அழித்துப்போடும். தம்முடைய தாசனாகிய தாவீதுக்கு தயை காண்பிக்காத பெருங்கஞ்சன் நாபாலை தேவன் வாதித்து கொன்றதாக (1 சாமு 25 : 38) தேவனுடைய வசனம் நமக்கு கூறுகின்றது. "நீதிமான் பிசினித்தனம் இல்லாமல் கொடுப்பான்" (நீதி 26 : 20) என்று கர்த்தருடைய வசனம் பேசுவதால் பிசினித்தனம் அதாவது கஞ்சத்தனம் என்பது துன்மார்க்கனுக்குரியது என்று நாம் எடுத்துக்கொள்ளலாம்.

DEVA EKKALAM

REGISTERED NEWS PAPER
Regn. No. M : 8850 / 1970

கஞ்சனை தேவன் நேசித்தாலும் அவனது கஞ்சத்தனத்தை அவர் அருவருத்து வெறுத்து தள்ளுகின்றார். வாசிப்போனே, நீ ஒரு ஈவிரக்கமற்ற கஞ்சனா? மனந்திரும்பு. "நீ மிகுந்த பரிசுத்தமுள்ளவனானால் நீ மிகுந்த இரக்கமுள்ளவனாயிருப்பாய்" என்று ஒரு பரிசுத்தவான் கூறினார். எத்தனை உண்மை! கஞ்சன் இரக்கமற்றவனாக இருப்பான். கஞ்சத்தனமும், இரக்கமும் பரம விரோதிகள். இரக்க சுபாவமிருந்தால் மற்றவர்களுக்கு கொடுக்க வேண்டும். இரக்கமற்ற கஞ்சன் கொடுக்கமாட்டான். அதினால்தான், 10 மாதம் சுமந்து பெற்ற தனது தாய்க்கும், போஷித்து, படிக்கவைத்து ஆளாக்கிவிட்ட தனது தகப்பனுக்கும் கருணை காட்டாமல் அவர்களை புறக்கணித்து தள்ளிவிடுகின்றான். இரக்கமற்ற அவனுக்கு தேவனிடமிருந்தும் இரக்கம் கிடையாது (மத் 5 : 7)

வாசிக்கும் அன்பான ஆத்துமாவே, உனது கிறிஸ்தவ வாழ்வை கஞ்சத்தனம் என்ற கொடிய ஆகாயத் தாமரை சூழ்ந்திருக்கின்றதா? உனது அருமையான வாழ்வை அது அப்படியே ஒன்று சேர மூடி எந்த ஒரு மனிதனுக்கும் ஆசீர்வாதமும், நன்மையும், பயனுமில்லாமல் முற்றும் அழித்துப்போடும் என்பதை நீ மறக்க வேண்டாம். நீ மனந்திரும்பும் பட்சத்தில், தேவன் உனது கருங்கல்லான கஞ்சத்தனத்தின் கொடிய ஆவியை உன்னிலிருந்து எடுத்துப்போட்டு "சதையான இரக்கமுள்ள இருதயத்தை உனக்குத் தருவார்" (எசே 11 : 19)

நீ இராப்பகலாக வணங்கி ஆராதிக்கும் உன் தேவன் மாபெரும் கொடையாளி என்பது உனக்குத் தெரியுமா? தனது சொந்தக் குமாரனென்றும் பாராமல் உனக்காக தனது ஏகசுதனையே ஒப்புக் கொடுத்து உன்னில் அன்புகூர்ந்த தேவனுக்கு (ரோ 8 : 32) முன்பாக நீ எப்படி அன்பற்றவனாக, கருங்கல் கல் நெஞ்சினனாக வாழ முடியும்? உன் ஆண்டவர் தயாளனாக இருக்கும்போது நீ இரக்கமற்ற கஞ்சனாக இருப்பது எப்படி? (மத் 20 : 15)

ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறது போல நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள் (லூக் 6 : 36)

Edited and Published by N. Samuel

MAILING ADDRESS : N. Samuel, Editor, "Deva Ekkalam",
Post Box No. 6, Kotagiri - 643 217, Nilgiris.

CPP Ph : 230630